Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

ரூபா 14/00

දිනමුරසු වාරමලර්

பெப்.23-மார்ச் 01, 2003

# வாரமலர் தினமுரசு

500

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY




சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

## ஆன்மீகம்



### சூது

சூதாட்டம் அறிவைக் கெடுக்காவிட்டாலும், கடமையைப் புறக்கணிக்கச் செய்ய வல்லது. அதனால் அதுவும் பொது வாழ்வுக்கு இடையூறானது. தனி வாழ்விற்காவது நன்மையானதா என்று ஆராய்ந்தால், சூதாட்டத்தில் வெற்றி உண்டு என்று கூறலாம். ஆனால் வென்று பெறும் பொருள், மேல்வரும் இழப்புக்கும் துன்பத்திற்கும் உள்ளாகுமாறு கெடுக்க வல்லதே அல்லாமல், உண்மையான ஊதியம் அன்று. அதன் விளைவு தூண்டில் இரும்பை இரை என்று கருதி விழுங்கிய பிறகு மீன் அல்லற்படுவது போல் ஆகும். ஆகையால் வெற்றி தருவதானாலும் சூது ஆடுதலை விரும்பக் கூடாது. ஊதியமாக முன்னே ஒன்று பெறலாம். ஆனால் பிறகு நூறு மடங்கு இழக்கவேண்டி வரும். இதுதான் சூதாடிகளின் வாழ்வு. இவர்கள் நன்மை பெற்று வாழ வழியே இல்லை. இதைத்தான் இக் குறளும் சொல்கிறது.

வேண்டற்க வென்றிடினும் சூதினை; வென்றதூஉம்
தூண்டில்பொன் மீன்விழுங்கி யற்று. (931)

திருவள்ளுவர்

### பகைவரிடம் அன்பாயிருங்கள்

"நீ அடுத்தவரிடம் அன்பு காட்டுவாயாக, பகைவரிடம் வெறுப்புக் கொள்வாயாக" எனக் கூறியிருப்பதைக் கேட்டிருக்கிறீர்கள். ஆனால் நான் உங்களுக்குச் சொல்கிறேன். உங்கள் பகைவரிடமும் அன்பு கூருங்கள்! உங்களைத் துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள். இப்படிச் செய்வதனால் நீங்கள் உங்கள் விண்ணகத் தந்தையின் மக்கள் ஆவீர்கள். ஏனெனில் அவர் நல்லோர் மீதும் தீயோர் மீதும் தம் கதிரவனை உதித்தெழச் செய்கிறார். நேர்மையுள்ளோர் மேலும் நேர்மையற்றோர் மீதும் மழைபொழியச் செய்கிறார். உங்களிடத்தில் அன்பு செய்வோர் மீது நீங்கள் அன்பு செலுத்துவதால் உங்களுக்கு என்ன கைமாறு கிடைக்கும்? நீங்கள் உங்கள் சகோதரர் சகோதரிகளுக்கு மட்டும் வாழ்த்துக் கூறுவீர்களானால் நீங்கள் மற்றவர்க்கும் மேலாகச் செய்து விடுவதென்ன? பிற இனத்தவரும் இவ்வாறு செய்வதில்லையா? ஆதலால் உங்கள் விண்ணகத் தந்தை நிறைவுள்ளவராய் இருப்பது போல் நீங்களும் நிறைவுள்ளவராய் இருங்கள். விண்ணகத்தில் இருக்கும் தந்தையாம் இறைவன் என்றும் எம்மில் நிலைத்திருப்பார். ஆகவே வளமான வாழ்வுக்கு உளமார பகைவரையும் அன்பு செய்வோமாக!

ஆர். பிரம்மியா.

### ஒற்றுமை

ஒற்றுமைக்கும் சகோதரத்துவத்திற்கும் இஸ்லாத்தில் தனித்துவமான மிக முக்கியமான இடமிருக்கிறது. இஸ்லாமியர்களுடன் மட்டுமன்றி பிற மதத்தினருடன் அன்பாகவும், இனிமையாகவும் நடந்துகொள்ளுமாறு பணிக்கிறது இஸ்லாம்.

"நீங்கள் ஒற்றுமை எனும் கயிற்றை நன்றாகப் பற்றிப் பிடித்துக்கொள்ளுங்கள்" என்று அல்லாஹ் தன் அருள் மறையிலே கூறுகிறான்.

ஒருவருக்கொருவர் ஒற்றுமையாக வாழ்ந்து அடுத்தவரின் துன்பத்தில் பங்கேற்று நன்மைகளைத் தேடிக்கொள்ளுமாறு வலியுறுத்தும் ஏராளமான நபிமொழிகள் உள்ளன.

பகைமை பாராட்டுவதை இஸ்லாம் விரும்பவில்லை. மன்னிப்பை அது மகத்துவமான விஷயமாகக் கருதுகிறது.

ச.:.ப்வான்.

## கவிதைப் போட்டி இல.496

### பரிசுக்குரிய கவிதை

### உணர்(ர்)வு

திட்டங்கள் தீட்டியென்ன,
சட்டங்கள் போட்டென்ன,
பட்டினி கிடப்போரை
எட்டிப்பார்க்க யாருண்டு.
பெற்றோரை இழந்த
பிஞ்சொன்று
புறப்பட்டு விட்டது
கூலி வேலைக்கு.

சு.ஹரிப்ரசாத்-ஹட்டன்.

### இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்



### பசிக்கு...

பட்டினியோடு பல நாட்கள்
ஒட்டிய வயிற்றின் வேதனையில்
வாட்டிய யுத்தம் ஓய்ந்தாலும்
மட்டில்லாத கவலையுடன்
சட்டியில் சாதம் வாங்கிடவே
எட்டி நடக்கும் சிறுவனன்றோ

ஏ.எம். முஸ்தபா-ஏறாவூர்-01.

### மிச்சம்

யுத்தமொன்று வந்து பெற்றோரை இழந்தேன்
சொந்தங்களை தேடி ஓட
பசி என்னை வாட்டியது
சொத்தென்று சொல்லிக்கொள்ள
அம்மா ஆசையாக வேகவைத்துக் கொடுத்த
கொழுக்கட்டை பாத்திரம் மட்டும்தான் மிச்சம்

சிவலிங்கம் சுமதி-ஏறாவூர்-04.

### மறையவில்லை

வீடு வீடாய்ச் சென்று
தெருத் தெருவாய் அலைந்து
பிச்சை எடுத்ததால்-என்
'பசி' மட்டும் மறைந்தது...!
ஆனால்
அனாதை என்ற பட்டம்
மட்டும் மறையவில்லை...!

எஸ்.ஜெகதீஸ்வரன்-நானாட்டான்.

### அதுதான் வந்துவிட்டேன்!

போர் செய்த கோலமிது!
போக்கிடம் எனக்கில்லை!
பெற்றவர்களை இழந்து!
பேதலித்து நின்றவேளை!
அப்பளம் காயவைக்க...
ஆள் தேவை என்றார்கள்!
காசு கிடைக்காவிட்டாலென்ன?
கால் வயிறு கஞ்சியாவது கிடைக்கிறதே!

ஹப்புத்தளையூர், மனோ கோபாலன்.

### மாற்றம் வருமோ?!

கட்சி மாற்றமும்,
ஆட்சி மாற்றமும்
வலம் வந்து போனாலென்ன,
அகதி வாழ்வில்-
மாற்றம் வருமோ அகிலத்தில்
ஓர் தடவையேனும்!?..

ப்ரியநேசி -களுத்துறை (தெற்கு)

### ஒன்றுமிருக்கவில்லை

இவன் பிறக்கும்போது
தந்தை இருக்கவில்லை
இவன் பிறந்த போது
தாயும் இருக்கவில்லை
ஆனால் இவனுக்காக
யாரும் இரங்கவில்லை
இதனால் பசிக்கு பாத்திரத்தில்
ஒன்றும் இருக்கவில்லை.

வி.ஜேகன்-கொகுவில்.

### வன்முறைக்கு அஞ்சாதே!

அடுத்தவன் நகத்திற்காக
கேட்பது உன் கால் என்றால்
அதை
கொடுக்காது போராடி
உன் உயிரை கொடுமகனே!
அது பரவாயில்லை.

தஸ்னீக் எம்.தெளபீக்-காத்தான்குடி-06.

## கவிதைப் போட்டி இல.499



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 22.02.2003

கவிதைப் போட்டி இல.499
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

### துஷ்பிரயோகம்

காலை முதல் மாலை வரை
வேலை தருவார்
கையில் சில தம்பிடிகள்
கூலி தருவார்
சட்டங்கள் எம்மீது
கருணை காட்டா
திட்டமிட்டே எமை
துஷ்பிரயோகம் செய்கிறாரே.

எம்.எஸ்.அம்ஸா் அஹமட்-பாண்டிருப்பு.

### அஸ்திரங்கள்

அ படிக்கவில்லை
ஆதலால் சளைக்கவில்லை!
இயற்கை உலகத்திலே-என்னை
ஈன்றெடுத்த தெய்வத்தை கண்டதில்லை!
உழைத்து உயர்ந்திடவே
ஊரார் மெச்சிடவே
என் மனதெடுத்த முடிவாலே-கையில்
ஏந்திய பாத்திரங்கள்-என் வாழ்க்கை
செழிப்புக்கான அஸ்திரங்கள்

ஆர்.ரி.வி.வாணன்-அப்பரத்கங்க.

### உனது படைப்பில்

பாத்திரமெடுத்து பயனில்லை
பாழ்நிலத்தில்
என் பாத்திரமும்
தேவைதானா
உன் நாடகத்தில்.

மு.கீர்த்தியன்-லபுகெலை.

### இழப்பு!?

நிலம் வெடித்தது
நீர் இழந்தோம்,
போர் வெடித்தது
நிலம் இழந்தோம்-இனி
எது வெடித்து
எதை இழப்போமோ?!

டி.ஜோர்ஜ்-நுவரெலியா.

### தோழனுக்கு..!

எனக்குக்
'கால்'கள் இரண்டு
'கண்'கள் இரண்டு...
'கை'கள் இரண்டு
'கை'களில் இருக்கும்
பாத்திரம் இரண்டு-ஆனால்
அதில் ஒன்று
என்னைப் போலவே...
'பிச்சை' எடுக்க வரும்
'அனாதை'த் தோழனுக்கு...!

எஸ்.தமிழாம்பிகை ஜெகன்-நானாட்டான்.

## உங்கள் பக்கம்

### மக்களின் பெயரை மோசடி செய்யாதீர்

ஐயா,

பொதுமக்கள் நாமிருக்க யார் யாரோ பொது மக்கள் என்ற பெயரில் எதையெதையோ எழுதுகிறார்கள். தனி ஒரு மனிதன் தான் விரும்பியதை எழுதிவிட்டு பொதுமக்கள் இப்படிக் கருதுகிறார்கள் என்று சொல்லி அதைப் பொதுக் கருத்தாகக் காட்ட முனைவதுதான் மிகப் பெரிய எழுத்துலக மோசடி. அதை எங்களுக்கே திரும்பச் சொல்வதுதான் வேடிக்கை. எழுதுபவர்கள் தான் இப்படியென்றால் அதை எடுத்துப் பிரசுரித்து வரும் பத்திரிகைகளும் அப்படித்தான் இருக்கின்றன. இதுதான் மக்களின் கருத்து என்று ஒருவர் எழுதினால்,என்ன? மக்களனைவரும் ஒரு பெரிய மைதானத்தில் கூடி அவரிடம் இதுதான் எங்கள் கருத்து, போய் எழுதுங்கோ என்று கொடுத்து விட்டவர்களா? இவராகவே தனக்கு விரும்பினவாறெல்லாம் ஒற்றையை இழுத்து வைத்து ஏறியிருந்து எழுதிப்போட்டு மக்கள் கூறுகிறார்களாம் என்று கதைவிடுகிறார். இதுகூட இவற்றைப் பிரசுரிக்கும் பத்திரிகைகளுக்குத் தெரியாதா? யாரும் எதையாவது எழுதுவதானால் நேர்மையாக நான் இப்படி அபிப்பிராயம் கொண்டிருக்கிறேன் என்று எழுதட்டும். மக்களைச் சாட்ட வேண்டாம். இவ்வாறு மக்களைச் சாட்டி எவரோ எழுதும் விடயங்களுக்கெல்லாம் மக்களாகிய நாம் விலை போக முடியாது. ஆனால் நாம் எமது ஆட்சேபனையை இப் பத்திரிகைகளுக்குத் தெரிவித்தால், உடனே அவர்கள் அதை எழுதி அனுப்புங்கள் என்று கூறுவார்கள். அதை நம்பி நாம் எழுதி அனுப்பினால் அதை அப்படியே, குப்பைக் கூடைக்குள் வீசிவிட்டு, தங்களுக்குச் சாதகமாக எழுதியவர்களின் எழுத்துக்களை மட்டுமே பிரசுரிப்பார்கள்.

ஒரு பத்திரிகையில் வெளிவரும் கட்டுரைகளைத் தொடர்ந்து ஒரு மாதம் படித்து வந்தால் போதும். எவருக்கும் இதில் உள்ள போலித்தனம் புரிந்துவிடும். அங்கே ஒரு சிலருடைய கட்டுரைகளே மாறி மாறி வந்துகொண்டிருக்கும். நீங்களாவது இப் பத்திரிகைகள் போலன்றி நேர்மையாகச் செயற்படுவீர்களென்ற நம்பிக்கையில் இதை எழுதுகிறேன். இக் கடிதத்துக்கும் குப்பைத் தொட்டிதான் கதியோ நானறியேன். எழுதுபவர்கள் மட்டுமல்ல, சில பொது ஸ்தாபனங்களும் மக்களின் பெயரைச் சொல்லி அரசியல் மோசடி, கருத்து மோசடி, பொருளாதார மோசடி என்று ஜமாய்க்கிறார்கள். மக்களென்ற பெயரை விபச்சாரம் செய்ய வேண்டாம். இப்படிச் சொல்வதை நீங்கள் அபச்சாரமாக எடுத்துக்கொண்டாலும் சரி.

கோபிப்பவன் - யாழ். அங்கதன்.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல் (Fax):-074-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@dialogsl.net
edmurasu@dialogsl.net

## வாசக[ர்] சாலை

உன் வாசகர்களில் நானும் ஒரு இரசிகை. என் ஆக்கத்தையும் பிரசுரித்தீர்கள் என் நன்றிகள். ஆவலுடன் ஆக்கங்கள் எழுதும் வாசகர்களின் திறமையையும், மனதையும் புரிந்து செயலாற்றும் ஒரே பத்திரிகை நீயே!

நீ நியாகவே என்றும், எப்போதும்
எக் காலத்திலும் இருக்க என் வாழ்த்துகள்!
நீ சுமந்து வரும் ஆக்கங்களால் என்னைச் சிறையில் இட்ட திருடன் நீ!
என் மனதைக் கொள்ளையிட்ட
கள்ளன் நீ! இவ்வாறே எல்லோரையும் கொள்ளை கொண்டு சிறையில்
வைக்க என் வாழ்த்துக்கள்.

ஆ.யசோ, டுபாய்.

தித்திக்கும் தினமுரசே
வாலிபர், பெரியோர், குழந்தைகள்
போன்ற அனைவருக்குமான
அம்சங்களை சுவைபட
வழங்கி வருகின்றாய்
அத்துடன் குறுக்கெழுத்துப்
போட்டி சூப்பர்.
அதுமட்டுமில்லாது நீ
சுமந்து வரும் அத்தனை
அம்சங்களும் சூப்பரோ
சூப்பர்.மேலும் வளர்ந்து
இன்னும் பல புதுமைகளைப்
புகுத்திடுவாய்.

ந.திலகராணி-ஹாலிஎல.

500வது முரசை நிறைவு
செய்யும் தினமுரசுக்கு
என்னுடைய பாராட்டுக்களும்
நல்வாழ்த்துக்களும்
உரித்தாகட்டும். மலர்ந்துள்ள
புத்தாண்டில் பல்வேறு புது
அம்சங்களுடன் பிர
வேசித்திருக்கும் தினமுரசே!
உன்னுடைய கலைத்துவமான
ஆக்கங்கள் தொடர
வேண்டுமென வாழ்த்து
கின்றேன்.

பொ.கோமளா இந்துமதி,
நாவலப்பிட்டி.

பரவசப்படுத்தும் முரசே....!
விண்ணின் தாமரையாய்
மண்ணின் மரகதமாய்
கண்ணின் கருமணியாய்
பொன்னின் நிறமதாய்
நட்பின் சிகரமாய்
அன்பின் பணியாளனாய்
கவிஞர்களின் தரிப்பிடமாய்
அறிவின் சமுத்திரமாய்
உறவுப் பாலத்தின் தூதுவனாய்
வந்துதித்த முரசே....!
உன் வாழ்த்துப் பா பாட
கவி கொண்டு வசந்த ராகம்
வடிக்கிறேன்...!
இருளாய் இருந்த
இளசுகளின் உள்ளங்களை
பணிவூட்டி பக்குவப்படுத்தி
இருளகற்றும் கதிரவனாய்....
மழலைகளை மகிழ்வூட்டி
பரவசப்படுத்தி விடை காணா
புதிர்களை அள்ளிச்சொரிந்து
இடம் பிடித்த-நீ...!
உன்சேவையில் எத்தனையோ
தடைக்கற்கள் தோன்றியிருப்பினும்
அவற்றையெல்லாம் தாண்டி....,
500வது இதழில் தடம்பதிக்க இருக்கும்
உன் சேவை பல்லாண்டுகளாய்
வாழிய வாழிய நீடூழி வாழிய
வாழ்த்தும் இந்த வாசகன்....,

இளைய நிலா யூனுஸ்-
காத்தான்குடி-01

### முரசுக்கு நன் மதிப்பு

தினமுரசு வாரமலர்
தித்திப்பு!
தினமும் இது பூக்காதா? என
வாசகர்கள் எதிர்பார்ப்பு
மனதுக்கு இதமூட்டும்
வனப்பு!
வசந்தத்தை வீசிவரும்
செய்தித் தலைப்பு!
தேனொ்த்த தமிழுக்கு
சிறப்பு!
தின முரசு வந்தால்
விற்பனையில் பரபரப்பு!
ஆன்மீகம் கட்டமைப்பு
அரசியல் கட்டுரையில்
சலசலப்பு?
அருமையிலும் பெருமைதரும்
படைப்பு!
அதிரடியார் துணிந்தெழுதும்
அறிவிப்பு!
அற்புதப் படைப்புக்களால்
வாசகர் மத்தியில்
வரவேற்பு!
இலக்கிய நயம், தேன்கிண்ணம்
இனிப்பு!
எல்லாமே முரசில்
புரதப் பருப்பு
இல்லை நமக்கு வெறுப்பு!
மொத்தத்தில் முரசுக்கு
நன் மதிப்பு!

கவிக்குயிலன்-சேனையூர்-06.

# “சமாதான முயற்சிகளை விமர்சிப்பவர்கள் மாற்றுத் வழி என்ன என்பதை கூறவேண்டும்” - பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ்

அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளை விமர்சிப்பவர்கள் தற்போதைய சமாதான வழி முறைக்கு மாற்றுத் தீர்வு என்ன என்பதை தெளிவுபடுத்த வேண்டும் என்று அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் கூறியிருக்கிறார்.

சமாதான முயற்சி தொடர்பாக பல்வேறு தரப்பினர் பலதரப்பட்ட கருத்துக்களையும் தெரிவிக்கின்றனர். நாட்டை தாரைவார்த்து விட்டதாகக் கூறுகிறார்கள். எமது சமாதான நடைமுறை தவறானதெனில் சரியான வழிமுறையெது என்று கூறுங்கள் என அவர் கேட்டிருக்கிறார்.

கொழும்பில் நடைபெற்ற இனப் பிரச்சினை மற்றும் தேசிய நல்லிணக்கத்திற்கான கல்விச் செயல் திட்டம் என்ற தொனிப்பொருளிலான கருத்தரங்கொன்றில் உரையாற்றிய பேராசிரியர் பீரிஸ் இந்தக் கருத்துக்களைத் வெளியிட்டார்.

புரிந்துணர்வு உடன்படிக்கை அமுலுக்கு வருவதற்கு முன்னர் நாட்டில் காணப்பட்ட நிலைவரத்தை பலரும் மறந்துவிட்டார்கள். இரவு நேரங்களில் சுதந்திரமாக பயணிக்கக்கூடிய சூழ்நிலை இருக்கவில்லை. விதித்தடைகள் கைதுகள் என ஏராளமான பிரச்சினைகள். கொழும்பு நகரில் காணப்பட்ட சூழ்நிலையே மிகவும் பயங்கரமானது எனக் கூறியிருக்கிறார் ஜீ.எல்.பீரிஸ்.

இன்று புலிகளின் பக்கம் சர்வதேச நாடுகளின் கவனம் திரும்பியிருப்பதாகக் கூறியிருக்கும் அவர் இவ்வாறான ஒரு சூழ்நிலையில் புலிகளால் சிறுவர்களைப் படையில் வைத்திருப்பது போன்ற செயற்பாடுகளில் தொடர்ந்து ஈடுபட முடியாதென்பதைச் சுட்டிக் காட்டியிருக்கிறார். அன்று புலிகள் ஒரு போராட்ட அமைப்பாக இருந்த போதிலும் இன்று அவ்வியக்கம் அரசியல் ரீதியில் மாற்றமடைந்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை 42 வாக்குகளால் தோல்வி!

பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவுக்கு எதிராக பொது ஜன ஐக்கிய முன்னணியினால் சமர்ப்பிக்கப்பட்ட நம்பிக்கை இல்லாப் பிரேரணை செவ்வாய்க் கிழமை பாராளுமன்றத்தில் வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது 42 வாக்குகளால் தோல்வியடைந்தது.

தமிழ்க் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஈ.பி.டி.பி., புளொட் ஆகிய கட்சிகள் பிரேரணையை எதிர்த்து ஐக்கிய தேசிய முன்னணியுடன் சேர்ந்து வாக்களித்தன.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் வடக்கு-கிழக்கின் சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்க அமைச்சர் மாரப்பன தவறிவிட்டதாகக் குற்றஞ்சாட்டியே இந்தப் பிரேரணை முன்மொழியப்பட்டிருந்தது. ஜே.வி.பி. உறுப்பினர்கள் வடக்கு-கிழக்கில் புலிகளின் சுதந்திரமான செயற்பாட்டிற்கு அரசாங்கம் அனுமதித்திருப்பது குறித்து தமது உரையின்போது கண்டனம் தெரிவித்தனர். தற்போது தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை நீதிமன்றத்தின் விசேட அனுமதி பெற்று இந்த வாக்களிப்பில் கலந்துகொள்வதற்காக செவ்வாயன்று பாராளுமன்றம் வந்திருந்தமை குறிப்பிடத் தக்கது.

இப் பிரேரணை மீது விவாதம் ஆரம்பமானது தொடக்கம் எதிர்க் கட்சி உறுப்பினர்கள் உரையாற்ற எழுந்து நின்றபோதெல்லாம் ஆளுங் கட்சி எம்.பிக்கள் கூக்குரலிட்டு உரைகளுக்கு இடைஞ்சல் விளைவித்தனர்.

## ஏ-9 ஊடாக வர்த்தகத்துக்கு புதிய விதிமுறை

ஏ 9 வீதியூடாக யாழ்ப்பாணத் திற்குப் பொருட்களைக் கொண்டு செல்லும் வர்த்தகர்கள் தமிழீழ வைப்பகத்தில் குறைந்தது 50,000 ரூபாவை வைப்புச் செய்து அதற்கான பாஸ் புத்தகத்தை வைத்திருக்க வேண்டுமென்று புலிகள் புதிய நிபந்தனை விதித்துள்ளனர்.

அடுத்த மாதம் முதல் யாழ் குடாநாட்டிற்குத் தென் பகுதியில் இருந்து பொருட்களை எடுத்துச் செல்வோர் 50,000 ரூபாய் புலிகளின் வங்கியில் வைப்பிலிட வேண்டும் அதற்கான பாஸ் புத்தகத்தைக் கைவசம் வைத்திருக்கும் வாகனச் சாரதிகள் மட்டுமே புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குச் செல்ல அனுமதிக்கப்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஈ.பி.ஆர்.எல்.எப். பொறுப்பாளரின் வீட்டின் மீது குண்டுவீச்சு!

ஈ.பி.ஆர்.எல்.எஃப். (வரதர் அணி) மட்டக்களப்பு மாவட்டப் பொறுப்பாளர் எஸ்.துரைரட்ணத்தின் (ரட்ணம்) வீட்டின் மீது கைக் குண்டு வீசப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மருத்துவமனை வீதியிலுள்ள இவரது வீட்டின் மீது கடந்த திங்கட்கிழமை இரவு 10.30 மணியளவில் வீசப்பட்ட கைக் குண்டு வீட்டு மதிற் சுவரில் பட்டு வெடித்துள்ளது.

சம்பவம் நடைபெற்ற வேளையில் ரட்ணம் வீட்டிலிருக்கவில்லை. மனைவியும் 3 பிள்ளைகளும் மட்டுமே இருந்துள்ளனர். இந்த சம்பவம் தொடர்பாக அக்கட்சியின் யாழ். மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் சுபத்திரன் கண்டன அறிக்கையொன்றை வெளியிட்டிருக்கிறார்.

முன்னதாக இதே கட்சியைச் சேர்ந்த பிரதேச சபை உறுப்பினரான அழகுதுரை கடத்திச் செல்லப்பட்டுக் கொலை செய்யப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

## பொதிகளுக்காகவும் ஒரு ஹெலிகப்டர்

ஜேர்மனியில் சமாதானப் பேச்சுக்களில் கலந்து கொண்டு நாடு திரும்பிய புலிகளின் தூதுக்குழுவில் இடம்பெற்றிருந்த கருணா, தமிழ்செல்வன் புலித்தேவன் ஆகியோர் ஜேர்மனியில் இருந்து கொண்டுவந்த பொதிகளை வன்னிக்கு எடுத்துச் செல்லத் தனியான ஹெலிகப்டர் ஒன்று தேவைப்பட்டுள்ளது. இவர்களை ஏற்றிக் கொண்டு ஒரு ஹெலிகப்டரும் இவர்களது 25க்கு மேற்பட்ட பொதிகளை ஏற்றிக் கொண்டு மற்றொரு ஹெலிகப்டரும் வன்னி சென்றதாகத் தெரிய வருகிறது.

இந்தப் பொதிகளில் என்ன இருந்தது என்பது குறித்து எவ்வித தகவல்களும் வெளியிடப்படவில்லை. இவற்றை சோதனையிட வேண்டாம் என, சுங்க அதிகாரிகளுக்கு அரசாங்க உயர் மட்டத்திலிருந்து உத்தரவிடப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 2000த்தை எட்டும் மீறல்கள்!

புலிகளால் புரிந்துணர்வு ஒப்பந்தம் மீறப்பட்ட சம்பவங்கள் குறித்து தமக்குக் கிடைத்திருக்கும் முறைப் பாடுகளின் எண்ணிக்கை சமார் இரண்டாயிரத்தை எட்டியிருப்பதாக இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு அறிவித்துள்ளது.

இவ்வாறான சகல முறைப்பாடுகளையும் கண்காணிப்புக் குழு ஏற்றுக் கொண்டுள்ளது.

ஆனால் யுத்த நிறுத்த மீறல் தொடர்பாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை.

முறைப்பாடுகளை ஏற்றுக் கொள்ளும் அதேவேளை யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீறிச் செயற்படுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காமல் விடுவது ஒப்பந்தத்தை மீறுவதற்கு உறுதுணையான செயலாக அமைகிறது எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## பெண் கடத்தல்

புலிகள் இயக்கத்திலிருந்து விலகித் தமது குடும்பத்துடன் வசித்து வந்த மன்னார் வங்காலையைச் சேர்ந்த செபமாலை மெடோனா மார்க் (வயது 30) என்ற பெண் கடத்தப்பட்டுள்ளார்.

இவர் கடற்புலிகள் பிரிவில் மேஜர் தரத்தில் இருந்து, பின்னர் இயக்கத்தை விட்டு விலகித் தனது குடும்பத்துடன் வசித்து வந்தார்.

கடந்த சனிக்கிழமை காலை டொல்பின் ரக வான் ஒன்றில் வந்தவர்கள் இப் பெண்ணைக் கடத்திச் சென்றுள்ளனர்.

## தூக்குக் கயிற்றின் விலை இரண்டரை இலட்சம் ரூபா!

நாட்டில் அதிகரித்து வரும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் மரண தண்டனையை மீண்டும் அமுல் செய்யும் முன்னோடி நடவடிக்கையாகத் தூக்குக் கயிறுகள் இரண்டை வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்வதற்கு விலை மனுக்கள் கோரப்பட்டுள்ளன.

இவ்வாறான ஒரு கயிற்றின் விலை ஒரு இலட்சத்துப் பத்தாயிரம் ரூபாவாகும். இவ்வாறான இரண்டு கயிறுகளை பிரேஸிலிலிருந்து தருவித்துக் கொடுக்க உள்ளூர் நிறுவனம் ஒன்று முன்வந்துள்ளதாகச் சிறைச்சாலைத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

விரைவில் அலுகோசுகளுக்கான (மரண தண்டனையை நிறைவேற்றுபவர்) விண்ணப்பங்கள் பத்திரிகை வாயிலாகக் கோரப்படவுள்ளன.

## “மிலிந்த மொறகொடவின் இன்னொரு முகம்” புலிகளின் பத்திரிகை கடும் விமர்சனம்

சமாதானப் பேச்சுக்கள் குறித்து ஜனாதிபதியிடம் தெரிவிக்கப்படும் விடயங்களில் இரகசியம் பேணப்படாது போனால் அத்தகைய விளக்கங்களை வழங்கும் பணியில் தன்னால் தொடர்ந்து ஈடுபட முடியாது என அமைச்சர் மிலிந்த மொறகொட தெரிவித்துள்ளார்.

ஜேர்மனியில் நடைபெற்ற பேச்சுக்கள் குறித்து ஜனாதிபதிக்கு விளக்கமளிப்பதற்காக இவ்வாரம் அவரைச் சந்தித்தபோதே அமைச்சர் மொறகொட இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

ஜனாதிபதிக்கும், அமைச்சர் மொறகொடவுக்கும் இடையில் நடந்த பேச்சுக்களின் சில விபரங்கள் கடந்த காலங்களில் வெளியில் கசிந்தமை தொடர்பிலேயே இந்த ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க சமாதானப் பேச்சுக்களில் முக்கிய பங்காற்றி வரும் அமைச்சர் மிலிந்தவை புலிகளின் செய்திப் பத்திரிகையான ஈழநாதம் அதன் கடந்த வார வெளியீட்டில் கடுமையாக விமர்சித்துள்ளது.

அமெரிக்காவின் மேலாதிக்கத்தை நிலைநிறுத்தப் பாடுபடுவர் என மொறகொடவைச் சாடியிருக்கும் ஈழநாதம் அவர் உண்மையான சமாதான நாட்டம் கொண்டவரா என்பதில் பலத்த ஐயம் தெரிவித்துள்ளது.

## தென் கிழக்கு வளாகத்தில் அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

ஈராக் நாட்டின் மீது அமெரிக்காவும், பிரிட்டனும் நடத்த உத்தேசித்திருக்கும் நியாயமற்ற தாக்குதலைக் கண்டித்து செவ்வாய்க் கிழமை தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தில் ஆர்ப்பாட்டமொன்று நடைபெற்றது.

தென்கிழக்குப் பல்கலைக் கழக முஸ்லிம் மஜ்லிஸ் இனால் ஒழுங்கு செய்யப்பட்ட மேற்படி ஆர்ப்பாட்டத்தில் பெரும் எண்ணிக்கையிலான மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர் அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்கும் எதிராகப் பல்வேறு கோஷங்களை எழுப்பினர். உலக அமைதிக்கு எதிரான ஏகாதி பத்தியத்தை எதித்து உலகம் கொதித்தெழ வேண்டும் என்றும் குரலெழுப்பப்பட்டது.

போருக்கெதிராக அணி திரண்டுள்ள உலகின் பல கோடி ஆர்ப்பாட்டக்காரர்களின் அணியில் நாமும் இணைந்து கொள்வதாகவும் இதன் போது கோஷம் எழுப்பட்டது.

## தமிழ் ஊடகங்களுக்கு இந்தியா வழங்கப்போகும் செயல் மூலமான பதில் என்ன?

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையிலான நல்லுறவுகளைச் சீர்குலைக்கும் வகையில் சில தமிழ் ஊடகங்கள் செயற்பட்டு வருகின்றன. இவற்றுக்கு எதிராக சொற்களின் மூலமாக அல்ல; செயல்களின் மூலமாக இந்தியா விரைவில் பதிலளிக்கும். இவ்வாறு இந்தியத் தூதுவர் நிரூபம் சென் தெரிவித்துள்ளார். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தேசிய மாநாட்டில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

தமிழ் ஊடகங்கள் குறிப்பிட்ட ஒரு பிரிவினருக்கு ஆதரவாக மாத்திரமே செய்தி வெளியிட்டு வருவதாகக் கூறிய நிரூபம் சென், இந்தியாவின் செயல்கள் மூலமான பதில் என்ன என்பது குறித்து எதுவும் தெரிவிக்கவில்லை.

ஆனால் இந்த ஊடகங்களுக்கு எழுத்து மூலம் பதில் சொல்வதில் பயனில்லை என்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

# முரசம்

## 500 ஆவது தினமுரசு

*அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.*

தினமுரசு தன் 500ஆவது இதழைப் பெருமையுடன் வழங்குகிறது.

இத்தனை காலம் தினமுரசு நடந்து வந்த வெற்றிப் பாதையில் பங்களித்த சகலருக்கும், குறிப்பாக அதன் அபிமான வாசகர்களுக்கும் இத் தருணத்தில் முரசு தன் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது. தினமுரசு ஆரம்பித்து இவ் வருடம் ஆனி மாதத்துடன் பத்தாவது நிறைவையும் கொண்டாடவுள்ளதென்பது மற்றுமொரு மகிழ்ச்சிகரமான சாதனைச் செய்தி.

இந்தப் பத்து வருடம், ஒரு தசாப்தமென்பது எழுத்துலகையும், பத்திரிகை உலகையும், தகவல் தொடர்புத் துறையையும் பொறுத்தவரை பிரமிக்கத்தக்க மாற்றங்களுக்கு உள்ளான அதிவேக வளர்ச்சிக் காலமாகும். தகவல் தொடர்புத் துறையின் அபரிமித வளர்ச்சியும் கணனித் தொழில் நுட்பம் பத்திரிகைத் துறையில் ஆற்றிய பங்கும் இன்று எழுத்துக்களிலும் செய்திகளிலும் மாத்திரமன்றி வாசகர்களின் அறிதல் நாட்டத்திலும் பெரும் மாற்றங்களைச் செய்துள்ளது. வாசகர்களிடையே புதிய தேடல்களும் எதிர்பார்ப்புகளும் அதிகரித்துள்ளன. இதனை மனதிற்கொண்டு தினமுரசு தன்னை மேலும் செழுமைப் படுத்திக் கொள்ளுமுகமாக வாசகர்களின் கருத்துக்களை அறியும் வகையில் கேள்விக் கொத்தொன்றை வெளியிட்டுள்ளது. இதன் மூலம் உங்கள் கருத்துக்களையும் மதிப்பீடுகளையும் விருப்பு வெறுப்புகளையும் அறியத் தந்து உங்கள் தினமுரசு புதுப் பொலிவு பெறுவதற்கான பங்களிப்பை வழங்குவீர்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

இதேவேளை மகிழ்ச்சிகரமான செய்திகள் பல இந்த 500ஆவது இதழில் உங்களுக்குக் காத்திருக்கின்றன.

நான்கு புதிய தொடர்கள் இந்த இதழிலிருந்து உங்களைப் பிரமிக்க வைக்கப்போகின்றன.

அத்துடன் இன்னொரு இனிப்பான செய்தி. தினமுரசு இந்த இதழிலிருந்து மேலதிகமாக இரு பக்கங்களை அதிகரிக்கின்றது. இதுவரை 20 பக்கங்களுடன் வெளிவந்த தினமுரசு 22 பக்கங்களாகத் தன்னை அதிகரித்துக்கொள்கிறது.

இதுவரை எம்மோடு கைகோர்த்துப் பயணித்த எம் அபிமான வாசகர்களுக்கு மீண்டும் ஒரு தடவை நன்றி கூறிக்கொண்டு முரசின் 500ஆவது இதழை உங்கள் கரத்தில் ஒப்படைக்கிறோம். உங்கள் கருத்துக்களை ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.

■■

*மீண்டும் மறுமடலில் வந்து கலக்கும்வரை*

*என்றென்றும் அன்புடன், ஆசிரியர்.*

## எக்ஸ் ரிப்போர்ட்

# ஓராண்டைப் பூர்த்திசெய்யும் புரிந்துணர்வு ஒப்பந்தம்

உண்மையில் ஒரு வருடம் பூர்த்தியாகிவிட்ட நிலையில் யுத்த தவிர்ப்பினூடாகத் தமிழ் சமூகமும் சகல இலங்கை மக்களும் பெற்றுக் கொண்ட பயன்கள் எவையெவை என்பது முக்கியமானது. தமிழ் மக்களின் அன்றாட வாழ்வின் மீது திணிக்கப்பட்டிருந்த அவமானகரமான கெடுபிடிகள் பல தற்காலிகமாகத் தளர்த்தப்பட்டுள்ளன. பாஸ் கெடுபிடிகள், சுதந்திர போக்குவரத்தின் மீதிருந்த கட்டுப்பாடுகள், சோதனை என்ற பெயரில் நடைபெற்று வந்த இழிவுபடுத்துதல்கள், பயங்கரவாத சந்தேக நபர்கள் இருந்தார்கள் என்ற பெயரில் நடைபெற்ற வீடு தகர்ப்புக்கள், முற்றுகைகள், வழிமறிப்பு, ஆக்கிரமிப்புக்கள், பொருளாதாரத் தடை என்பவற்றில் குறிப்பிடத்தக்களவு மாற்றங்கள் உடனடியாகவே நடைபெற்றன.

வடக்கு கிழக்கில் சர்வதேச சமூகத்தின் ஆதரவுடன் கண்ணிவெடிகளை அகற்றுதல், புனர்வாழ்வு புனரமைப்பு, இராணுவமயப்பட்ட சூழ்நிலையைப் படிப்படியாக அகற்றுவது, சிறுவர் சிறுமியரை யுத்தத்திற்காக இணைப்பதற்கு எதிரான விழிப்புணர்ச்சி ஆகிய விடயங்களில் சர்வதேச சமூகம் அக்கறை செலுத்தியது.

வடக்கு கிழக்கின் புனர்நிர்மாணப் பணிக்கு எமது அண்டை நாடான இந்தியா உட்பட பல்வேறு சர்வதேச நாடுகளிடமிருந்தும் உதவிகள் கிடைத்துக் கொண்டிருக்கின்றன. பெருமளவிலான உதவிகள் கிட்டும் என்ற எதிர்பார்ப்புக்களும் நிலவுகின்றன.

2001 செப்டம்பர் 11இற்குப் பின்னர் பயங்கரவாதம் தொடர்பாக உலக வல்லாதிக்க சக்திகளுக்கு ஏற்பட்ட அக்கறைகள் தென்னாசியாவில் சர்வதேச ஏகபோக சக்திகளின் பொருளாதார ஆதிக்கத்தை நிலைநிறுத்தும் புதிய சந்தை வாய்ப்பை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளும் இலங்கையின் பக்கம் கவனஈர்ப்பை ஏற்படுத்தின.

விரும்பியோ விரும்பாமலோ இலங்கை சர்வதேச உதவிகளிலேயே பெருமளவில் தங்கியிருக்கும் நாடு. இந்த உதவியின் அளவில்தான் இலங்கையின் மீட்சியும் தங்கியிருக்கிறது.

ஆனால் எந்த உறுதிப்பாடும், உத்தரவாதமும் இல்லாத இரண்டும் கெட்டான் நிலையில் சர்வதேச உதவிகள் எந்தளவுக்குக் கிட்டும், எவ்வளவு தூரம் சமூகத்தைச் சென்றடையும் என்பதெல்லாம் முக்கியமான கேள்விகளாகும்.

தாய்லாந்து, நோர்வே, ஜேர்மனி என நடைபெற்ற பேச்சுவார்த்தைகளினூடாக ஏதாவது சாதிக்கப்பட்டனவா?

மூன்றாம் சுற்றுப் பேச்சுவார்த்தையில் ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி முறையிலான தீர்வு ஒன்றிற்கு இரு தரப்பினரும் உடன்பட்டது முக்கியமான நிகழ்ச்சியாகும்.

ஆனால் கொள்கையளவில் ஏற்பட்ட இணக்கத்திற்கப்பால் தமிழ் மக்களின் தலைவிதியை நிர்ணயிக்கும் தீர்வு விடயத்தில் ஒரு அடி கூட முன் வைக்கப்படவில்லை.

மனிதாபிமானப் பணிகள், பொது இடங்களில் இருந்து படையினர் வெளியேறுவது, மக்களைக் குடியேற்றுவது போன்ற விடயங்களுக்கான உப குழுக்கள் அமைக்கப்பட்டு, பேச்சுவார்த்தைகள் நடைபெற்றாலும் அவை மந்தகதியிலேயே நடைபெறுகின்றன. படைகளின் வெளியேற்றம் மக்களின் மீள் குடியேற்றம் தொடர்பாக அமைக்கப்பட்ட உப குழு ஏற்கனவே ஸ்தம்பிதமடைந்துவிட்டது.

பல கட்சிகளின் ஜனநாயகத்தை ஆதரிப்பதாக சர்வதேச பத்திரிகையாளர் முன்னிலையில் பாலசிங்கம் தெரிவித்திருந்தாலும் படிக்கிறது தேவாரம் இடிக்கிறது சிவன் கோயில் என்பது போல்தான் வடக்கு-கிழக்கில் காரியங்கள் நடைபெறுகின்றன.

மனித உரிமைகள் பற்றிய கேள்வி எழும்போதெல்லாம் சுயநிர்ணய உரிமைதான் மனித உரிமை என்று சொல்லிப் பாலசிங்கம் சமாளித்துவிடுகிறார்.

மாற்றுக் கட்சிகள், மாற்றுக் கருத்துடையோர் கொன்றொழிக்கப்பட்ட இரத்தம் தோய்ந்த வரலாற்றை அவர் தொட்டுப் பார்க்கக்கூட விரும்புகிறாரில்லை.

பேர்லின் பேச்சுவார்த்தைகளில் சிறுவர்களை யுத்தத்திற்காக அணி திரட்டுவது பற்றிப் பேசப்பட்டாலும் வடக்கு-கிழக்கில் இரண்டு தசாப்தங்களாக நிலவும் கொடூர மனித உரிமை மீறல்கள் இன்னும் நிகழ்ச்சி நிரலில் இடம்பெறவில்லை.

> *விரும்பியோ விரும்பாமலோ இலங்கை சர்வதேச உதவிகளிலேயே பெருமளவில் தங்கியிருக்கும் நாடு. இந்த உதவியின் அளவில்தான் இலங்கையின் மீட்சியும் தங்கியிருக்கிறது.*

ஜப்பானில் நடைபெறவுள்ள ஆறாவது சுற்றுப் பேச்சுவார்த்தையில் அரசியல் தீர்வு பற்றிய விரிவான பேச்சுக்கள் இடம்பெறலாமெனக் கூறப்படுகிறது.

ஆனால் போர் அரங்கு திறக்கப்படுவதற்கான முயற்சிகள் நடைபெறுகின்றனவா? எனக் கடுமையாகச் சந்தேகப்படக்கூடியவாறு காரியங்கள் வடக்கு-கிழக்கில் நடைபெறுகின்றன.

நெடுந்தீவில் புலிகள் படகுடன் தற்கொலை செய்துகொண்டது, மானிப்பாயில் புலிகளின் இடுப்புப்பட்டி அகற்றப்பட்டது, முகமாலையில் புலிகளினால் இராணுவ சிப்பாய் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டது போன்ற சம்பவங்கள், சூழ்நிலையில் ஏற்பட்டு வரும் இறுக்கத்தைப் புலப்படுத்துகின்றன.

இந்த ஒரு வருட யுத்தத் தவிர்ப்புக் காலத்தில் முஸ்லிம் மக்கள் மத்தியில் பாரிய அமைதியின்மை தோற்றுவிக்கப்பட்டுள்ளது. முஸ்லிம் மக்கள் வடக்கு-கிழக்கில் பாதுகாப்புடன் வாழ முடியுமா என்ற கேள்வி விஸ்வரூபம் எடுத்துள்ளது.

1990 களில் நடைபெற்ற இனச் சுத்திகரிப்பின் இரண்டாவது கட்டமா? என ஐயுறும் அளவிற்குக் காரியங்கள் நடைபெற்றன, நடைபெறுகின்றன.

பல இனங்கள் வாழும் திருமலையில் இனப் பதற்றத்தை அதிகரிக்கும் விதமாக ஹர்த்தால், கடையடைப்பு, டயர் எரிப்பு போன்ற சம்பவங்கள் நடைபெற்றன. இதே போன்று வாழைச்சேனையிலும் மேற்கொள்ளப்பட்டன. உயிர்ப் பலிகளும் இதன் மூலம் சமூகங்களிடையே குரோதமும் நீறுபூத்த நெருப்பு நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கில் நடைபெறும் கட்டாய ஆட்திரட்டல், சிறுவர் சிறுமியரின் வாழ்விற்கெதிரான பயங்கர அச்சுறுத்தலாக உருவாகியுள்ளது. பல நூற்றுக் கணக்கான பெற்றோர் மனம் பேதலித்துப் போயுள்ளனர்.

இந்தக் கட்டாய ஆட்திரட்டல் தொடர்பாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு, பொலிஸ் நிலையம் ஆகியவற்றில் பொது மக்களால் பரவலாக முறைப்பாடுகள் செய்யப்பட்டும் எமது சிறுவர் சிறுமியரைப் பாதுகாக்க முடியவில்லை. ஏன் எந்தவித உருப்படியான தீர்வும் கிட்டவில்லை.

முறைப்பாடு செய்ததற்காகப் பெற்றோரும் உறவினரும் பழிவாங்கப்படுகிறார்கள். இதனால் முறைப்பாடு செய்யப்படாமலே ஆயிரக் கணக்கான கடத்தல்கள் அறியப்படுகின்றன.

ஈ.பி.டி.பி. கட்சியையும் புலிகளுடன் உடன்பாடு இல்லாத ஏனைய கட்சிகளையும் வடக்கு-கிழக்கில் இருந்து பலவந்தப்படுத்தி வெளியேற்றுவதற்கான சகல சதிநாச வேலைகளும் நடைபெறுகின்றன.

நெடுந்தீவில் அரங்கேற்றப்பட்ட மக்கள் போராட்டம் - கும்பல் ஒன்றை ரெடிமேட்டாக வைத்துக்கொண்டு தாம் விரும்பாத விடயங்களுக்கு எதிராகக் கலகம் பண்ணுவதற்குப் பெயரே மக்கள் போராட்டம்.

இதனால் நியாயமான கோரிக்கைகளை வைத்து மக்கள் தன்னெழுச்சியாக அல்லது ஒழுங்கான வழிகாட்டல்களின் கீழ் மேற்கொள்ளப்படும் போராட்டங்கள் கேலிக்குள்ளாக்கப்பட்டுள்ளன.

தற்போது இந்தக் கும்பலின் அராஜகம் யாழ் குடாநாடு முழுவதும் தாண்டவமாடுகின்றது. வன்னியில் இருந்து குதிரையில் வந்த பல்கலைக் கழக மாணவர்கள் என்ற பெயரில் செயற்படும் சிலரும், இவர்களுடன் இலைமறைகாயாகக் கலந்துவிட்ட ஆட்களும் இந்த சம்பல் பள்ளதாக்குப் பாணியிலான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார்கள்.

மாற்றுக் கட்சிக் காரியாலயங்கள் மீது பெற்றோல் குண்டு வீசுதல், துப்பாக்கிப் பிரயோகம் செய்தல், அடிதடி வன்முறைகளில் இறங்குதல் என ரௌடித்தனம் தாண்டவமாடுகின்றது.

ஹாட்லிக் கல்லூரி அதிபர் காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கப்பட்டது தொடக்கம் யாழ் மேயர் செல்லன் கந்தையன் அவர்களைப் பொது நூலகத்தைத் திறக்கவிடாமல் அச்சுறுத்தியது வரை இந்த அராஜகக் கரங்கள் நீண்டுள்ளன.

இந்த அராஜகக் கும்பல் சம்பந்தப்பட்ட மக்களுக்கு அந்நியமானது. வெவ்வேறு தனிப்பட்ட பதவி, வர்த்தக நலன் கொண்ட கோஷ்டிகள் இந்தக் கும்பலுடன் சேர்ந்துள்ளன.

இதே போல் கிழக்கில் தினக்கதிர் பத்திரிகைக் காரியாலயம் தீக்கிரையாக்கப்பட்டது.

வெல்லாவெளி ஈ.பி,ஆர்.எல்.எப். பிரதேச சபை உறுப்பினர் அழகுதுரை சித்திரவதை செய்யப்பட்டுக் கொலை செய்யப்பட்டு ஆற்றில் வீசப்பட்ட சம்பவம்.

முஸ்லிம் இளைஞர்கள் - ஆட்டோ சாரதி கொல்லப்பட்ட சம்பவங்கள்.

புலிகளின் பயிற்சி முகாமில் இருந்து தப்பியோடிய சிறுவர் சிறுமியர் கொல்லப்பட்ட சம்பவங்கள் ஈ.பி.டி.பி. யின் மூத்த உறுப்பினர்கள் கடத் தப்பட்ட சம்பவங்கள் என அராஜகம் தாண்ட வமாடுகிறது.

## மக்களின் அனுபவம் என்ன?

மாணவர்கள் இடையறாது வீதிக்கு அழைக்கப்படுவதாலும், பாடசாலைகளில் ஆட்திரட்டல் நிர்ப்பந்தங்கள் அதிகரித்திருப்பதாலும் கிழக்கில் கல்வி ஸ்தம்பிதமடையும் நிலை தோன்றியுள்ளது.

தடைகள் நீக்கப்பட்ட போது தமது உற்பத்திப் பொருட்களை நியாயமான விலைக்கு சந்தைப்படுத்தலாமென நினைத்த விவசாயிகளும், மீனவர்களும், வரி என்ற பெயரில் பாரிய சுரண்டலுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் சமாதான சூழ்நிலையில் செய்யலாமெனக் கருதியிருந்த விடயங்களில் பலத்த ஏமாற்றம் அடைந்திருக்கிறார்கள்.

மக்களின் அன்றாட நடவடிக்கைகளின் மீது கண்காணிப்பும் மேலாதிக்கமும் காணப்படுகிறது.

அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருந்து அரச கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளுக்குச் சுதந்திரமாக யாரும் சென்று வரக்கூடிய நிலை இருக்கிறதா என்பதும் முக்கியமான கேள்வியாகும். இரும்புத்திரை நிலைமைகள் அப்படியே தொடர்கின்றன.

தற்போது பொது நூலகம் திறக்கப்படக் கூடாது என்ற பெரும் கூச்சல் கிளம்பியுள்ளது.

அபிவிருத்திப் பணிகள் பற்றிய ஆரவாரங்கள் இருப்பினும் எந்தப் பணியும் ஆரம்பிக்கப்படவில்லை.

பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படுவது பற்றி அல்லது அதனை மறு பரிசீலனை செய்வது பற்றி யாரும் அக்கறை செலுத்தியதாகத் தெரியவில்லை.

மக்களுக்கு வழங்கப்படும் பங்கீட்டு உணவின் ஒரு பகுதியை வெட்டி எடுத்துக்கொள்ளும் நடவடிக்கைகள் பற்றி யாரும் பேசுவதில்லை.

ஒன்று மட்டும் தெளிவானது. எந்த மேலாதிக்க சக்திகளின் கீழும் தமது உணர்வையும் வாழ்வையும் மக்கள் தாரைவார்க்கத் தயாராக இல்லை.

சமாதானம் என்பதற்காக இவை அனைத்தையும் ஜீரணித்துக் கொண்டிருக்கும் மக்கள் பற்றி இதில் அரசியல் நடத்துவோர் எள்ளளவாயினும் பொறுப்புணர்வோடு சிந்திப்பார்களா? ■

# அற்புதனின் டயரி

இத் தொடரை ஆரம்பிக்கும் தருணத்தில் சில வார்த்தைகள்: என் நெஞ்சுக் கூண்டு நீர் மேகங்களால் நிரம்பிக் கனக்க, பலரும் மறந்துவிட்ட எம் பழைய வாழ்வும், வாழ்வு கொண்டிருந்த உணர்வும் உறவும் அவை பதித்த தடங்களும் வலிக்க,

பல வருடங்களின் பின் தன் பாழடைந்த வீட்டைப் பார்க்கும் ஒருவர், இல்லாத பொருட்களின் உருவங்களை மனக்கண்ணால் தேடி, தான் தவழ்ந்த இடம், படுத்த இடம், விளையாடிய இடம் என்று அடையாளம் காண்கின்றபோது மனதுள் ஒழுகும் வேதனைத் துளி போல்,

வரலாற்றின் மறைந்த பக்கங்களிலிருந்து -எனக்கும் ஒரு சில நண்பர்களுக்கும் மட்டுமே தெரிந்த, இந்தத் தடயங்களைத் தேடும் சிரமமான துயர் பணியில் இறங்குகிறேன்.

அற்புதனின் டயறி....

அதன் அரைகுறைப் பதிவுகளிலிருந்து அன்றைய நிகழ்வுகளின் புலத்தை இயன்ற மட்டும் மறுசிருஷ்டி செய்து, ஒரு உயிர்ப்புள்ள போராளியின் எண்ணங்களை முழுமைப்படுத்த முனைகிறேன்.

அற்புதன் இன்று இல்லை.

அவனை நான் தேடித் தருவது, மற்றுமொரு அதிமானுடனைச் செதுக்கி, உங்கள் புனித மூலஸ்தானங்களுக்குள் பிரதிஷ்டை செய்து தீபாராதனை காட்டுவதற்கல்ல.

சாதாரண மனிதனாக, அவனின் வாழ்வோடும் பேச்சோடும் செயலோடும் எழுத்தோடும் கலந்திருந்த நியாயங்களின் தார்ப்பரியங்களை, சரி பிழைகளுடன் சேர்த்தே அர்த்தங் கண்டுகொள்வதற்காகவே.

நல்லது,

எங்கள் கடந்த காலப் போராட்ட வரலாற்றில் எத்தனை இளைய முகங்கள் அடையாளம் தெரியாமலே மறைந்து போயின?

அந்த ஆயிரம் ஆயிரம் முகங்களில்...

அற்புதன் அடையாளம் காணப்பட்டவன்.

எங்கள் எதிர்காலக் குழந்தைகளின் புன்சிரிப்புக்காக, தங்கள் என்புகளை விதைத்த அவர்களின் நினைவுக்கான ஒரு பாடலைத் தந்து தொடரை ஆரம்பிக்கிறேன்.

*மலர்ந்து உதிர்ந்த பூக்களில்*
*மாலை கோர்க்கிறோம்.*
*மனதில் உறைந்த நாட்களை*
*நினைத்துப் பார்க்கிறோம்.*
*கண்ணீரில் தோய்ந்த பாடலை*
*எந்நாளும் பாடுவோம்....*

*வானிலென்றும் உலவும் மதியும்,*
*பேசின் உமக்குச் சாட்சி சொல்லும்.*
*கடலின்லையும் காற்றும் உரத்து.*
*எப்போதும் உமது பெயரைச் சொல்லும்.*
*எங்களின் - வானிலே - நீங்களே - சூரியன்...*

*முள்ளில் நிறைந்த பாதையிலலைந்து*
*உதிரம் படிந்த பாதங்கள்.*
*ஒன்றாய்த் திரிந்த நாட்களென்ன*
*மாண்டால் மறைந்து போகுமோ?*
*மனங்களில் - என்றுமே - ஒளிர்ந்திடும் - முகங்களே!*

## உதிரம் படிந்த பாதங்கள்

**1998 நவம்பர் 18 புதன்கிழமை**

தினமுரசு பத்திரிகை புதிய காரியாலயத்துக்கு மாற்றப்பட்ட வேளை.

வயதில் மூத்தவரான பத்திரிகை ஆசிரியர் பத்மநாதன் ஐயாவுக்கு மனது பொறுக்கவில்லை. ஒரு நல்ல காரியம், குடிபுகும் விழாவென்று எதுவும் பெரிதாகச் செய்யாவிட்டாலும் சிறிய அளவிலாவது ஒரு கும்பம், விளக்கு வைத்துச் சம்பிரதாய முறைப்படி ஒரு சடங்காவது செய்யலாமே...



அற்புதனிடம் இப்படிக் கேட்கும் துணிவு அங்கு எவருக்கும் இல்லை. அவனுக்கு இந்தச் சடங்கு, சாத்திரம், சம்பிரதாயம் எதிலுமே நம்பிக்கையில்லையென்பதை தினமுரசு ஊழியர்கள் அனைவரும் அறிவார்கள். தற்துணிவு, திறமை, உழைப்பு, அர்ப்பணம் என்பவையே முன்னேற்றத்துக்கு அவசியமென்று நம்புபவன் அவன். சடங்குகள், சம்பிரதாயங்களிலெல்லாம் மடமைத்தனங்கள் மட்டுமன்றி எமது சமூகத்தின் அடக்குமுறைக் குறியீடுகளும் மறைந்திருக்கின்றன என்று சாடுபவன் அவன்.

பத்மநாதன் ஐயா, அற்புதனை நெருங்கினார். சற்றுத் தயங்கினார். "தம்பீ..."

அற்புதனிடம் உரிமையுடன் அனுகி நினைத்ததைக் கூறக்கூடிய ஒருவரென்றால் ஐயாதான். ஐயாவின் வயதுக்கு மட்டுமல்ல, அவரது திறமை குறித்தும் அற்புதனுக்கு நல்ல மதிப்பிருந்தது.

ஐயா, தான் சொல்ல வந்ததைத் தொடர்ந்தார். "சின்னனாய் ஒரு கும்பம் வைச்சு, குத்துவிளக்கு கொளுத்திக் கொண்டு உள்ள போகலாமே..."

திரும்பிப் பார்த்த அற்புதனின் முகத்தில் மெல்லிய ஏளனம் இழையோடியது. "என்னையா இந்த சம்பிரதாயங்கள்..? சும்மா போய் பேனையைப் பிடிச்சு எழுதுங்க, அதிர்ஷ்டம் தானா வரும்." கரகரத்த அந்தக் கம்பீரமான குரலில் தான் கொண்ட கொள்கையின் உறுதி தொனித்தது. அற்புதன் உள்ளேபோய் தனது காரியத்தில் கண்ணாகிவிட்டான்.

ஐயா விடவில்லை. எப்பிடியும் ஒரு சின்னப் பூசையாவது வைக்க வேண்டும். என்ன செய்வது...? மனேஜரை அனுகினார். "மனேஜர் தம்பி, இது நல்ல காரியம். எல்லாரும் சந்தோஷமா இருக்கிறாங்க. இந்தச் சின்ன விஷயத்தைச் செய்திட்டால் எல்லாருக்கும் திருப்தியாயிருக்கும். ஒண்டும் புதுசாத் தேடத் தேவையில்லை, எல்லாம் ரெடியாயிருக்கு. நீங்கள் சரியெண்டால்..."

"சரி, சத்தம் போடாமல் வாசலில வைச்சு சட்டுப் புட்டெண்டு காரியத்தை முடியுங்க. கூட அமளிப்படுத்தினால் அவர் சத்தம் போடுவார். கமுக்கமா முடிச்சிடுங்க." மனேஜர் இரகசிய சிக்னல் கொடுத்தார்.

அதற்கே காத்திருந்த மாதிரி, ஐயா உடனேயே காரியத்தில் இறங்கினார். ஏற்கெனவே தயாராக வைத்திருந்த குத்துவிளக்கு, கும்பம் எல்லாவற்றையும் அந்தக் கணமே ஒழுங்குபடுத்தி வைத்துவிட்டு, சாம்பிராணி காட்டிவிட்டு, தேங்காயை எடுத்து நீட்டினார்.

"இது எதுக்கு?"

"சும்மா, உடையுங்க."

மனேஜர்: "நீங்கள்தான் பெரியவர், உங்கட கையாலயே உடையுங்க..."

ஐயா தேங்காயை தரையில் ஓங்கி அடித்தார். தேங்காய் சிதறியது. சிதறிய ஒரு துண்டு பறந்துசென்று குத்துவிளக்கில் மோதியது. குத்துவிளக்கு 'டாண்' என்ற சத்தத்துடன் விழுந்து அணைந்தது.

பத்மநாதன் ஐயாவுக்குப் பதபதைப்பு. 'அட, அபசகுனமாய்ப் போய்விட்டதே... குத்துவிளக்கு விழுந்து அணைவதென்றால்... ம், நான்தான் வயதானவன், எனக்குத்தான் என்னவும் நேர்ந்தாலும் நேரக்கூடும்....'

மனதில் ஓடிய எண்ணங்களை மறைத்துக்கொண்டு சூழ்நிலையின் உற்சாகம் கலைந்துவிடாதவாறு தன்னைச் சுதாகரித்துக்கொண்டு அலுவலக விடயங்களில் மூழ்கிப்போனார்.

இது நடந்து சிறிது காலத்தின் பின்....

அன்றைய தினம் 1999.11.02 செவ்வாய்க்கிழமை.

வழமை போல்தான் விடிந்தது.

அந்த விடியல் ஒரு இலட்சிய மனிதனின், தலைசிறந்த எழுத்தாளனின் அஸ்தமனமாகப்போகிற விடயம் கொலைக் கரங்களைத் தவிர எவருக்கும் தெரிந்திருக்கவில்லை. -அவனுக்கும் தெரிந்திருக்கவில்லை.

**தருவது கொம்ரேட்**

கொழும்பில் கிருல்லப்பனையில் இல. 111/1, ஹை லெவல் வீதியில் இருந்த தனது வாடகை வீட்டில் மின்விளக்கை எரியவிட்டபடி விடிய விடிய எழுதிக் கொண்டிருந்தான் அற்புதன்.

*பாதங்கள் இன்னும் படியும்...*

---

# "நூல் நிலையம் திறப்பதை நிறுத்திவிடுங்கள். மீறித் திறந்தால் பிணங்களைச் சந்திக்க வேண்டிவரும்" என்று சொன்னார் இளம்பரிதி

**மூடிய அறைக்குள் நடந்த உண்மைகளைத் திறக்கிறார் கந்தையன்**

**நூ**ல் நிலையத்தைத் திறக்கும் முயற்சியில் மும்முரமாக ஈடுபட்டு இறுதி நேரத்தில் பதவியை இராஜினாமாச் செய்த யாழ்.மாநகர முன்னாள் முதல்வர் செல்லன் கந்தையன் முரசுக்கு வழங்கிய பேட்டி:-

**கேள்வி:-**

**யாழ்ப்பாண பொது நூல் நிலையத்தின் 99 சதவீத வேலைகள் முடிந்துவிட்டதாக நீங்கள் கூறினாலும் தமிழ் ஊடகங்களும் புலிகள் சார்பான அமைப்புக்களும் மாறுபட்ட கருத்துக்களை வெளியிடுகின்றனவே. இன்றைய உண்மை நிலை என்ன?**

**கந்தையன்:-**

*நூல் நிலையத்தின் 99.1 சதவீத வேலை பூர்த்தியாகிவிட்டது. ஜனாதிபதியினாலும், இன்றைய அரசினாலும் ஒதுக்கப்பட்ட 120 மில்லியன் ரூபாவுக்கான வேலைகள் முடிந்துவிட்டன. 8 குளிரூட்டிகள் பொருத்தப்பட வேண்டிய இடத்தில் 4 பொருத்தப்பட்டுள்ளன. தீயணைப்புக் கருவி, உள்ளகத் தொலைபேசி (இன்டகொம்) ஆகியவை மட்டுமே எஞ்சியிருக்கின்றன. மேலதிகமாக நிர்மாணிக்கப்படவிருக்கும் சிற்றுண்டிச் சாலை, லிப்ட் போன்றவற்றின் பணிகளும் இன்னும் முடியவில்லை.*

**கேள்வி:-**

**பூரணப்படுத்தாமல் ஏன் திறக்க முற்பட்டீர்கள்...?**

**கந்தையன்:-**

*நாம் ஓடித் திரிந்து, பல சிரமங்களுக்கு மத்தியில் செய்து முடித்த ஒரு காரியத்தை எமது கைகளால் திறப்பதில் என்ன தவறு இருக்கிறது? அது தவிர மற்றைய விடயங்கள் எல்லாம் பூரணமாகத்தான் நடக்கின்றனவா...? ஏ-9 வீதியைப் பூரணமாகத் திருத்திய பின்தான் திறந்தார்களா? இதே நூல் நிலையம் கூட ஆரம்பத்தில் பல குறைபாடுகளுக்கு மத்தியில் பல வேலைகள் மீதமிருக்கத்தான் திறக்கப்பட்டது.*

**கேள்வி:-**

**200 கோடி ரூபாவுக்கான வேலைகள் மீதமிருப்பதாக விநாயகமூர்த்தி கூறியிருக்கிறாரே?**

**கந்தையன்:-**

*எனக்கு இது பற்றி அவர் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார். 200 கோடி ரூபாவுக்கான வேலைகள் மீதமிருப்பதாகவும், புலிகளோடு பேசித் திறப்பு விழாவைப் பின்போடுமாறும் கோரியிருந்தார். 200 கோடி ரூபாவுக்கு என்ன வேலை இருக்கிறது என்று எனக்குப் புரியவில்லை.*

**கேள்வி:-**

**அப்படியாயின் இந் நூல் நிலையத்தைத் திறக்க விடாமல் தடுக்கப்பட்டதற்கான காரணம் என்ன?**

**கந்தையன்:-**

*சிறுபான்மை தமிழ் சமூகத்தின் ஒதுக்கப்பட்ட ஒரு சாதியைச் சேர்ந்த நான் அதனைத் திறந்து வைத்து எனது பெயர் அதில் பொறிக்கப்பட்டுவிடக் கூடாது என்ற எண்ணம்தான் காரணம்.*

**கேள்வி:-**

**இந்த நூல் நிலையம் திறக்கப்படுவதைத் தடுத்தது யார்?**

**கந்தையன்:-**

*வேறு யார்...? எல்.ரி.ரி.ஈ.யும் அவர்களைச் சார்ந்தவர்களும்தான்.*

**கேள்வி:-**

**புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளர் இளம்பரிதிக்கும் உங்களுக்கும் இடையில் மூடிய அறைக்குள் பேச்சு நடந்ததாகக் கூறப்படுகிறது. அந்த மூடிய அறைக்குள் உண்மையில் என்ன நடந்தது?**

**கந்தையன்:-**

*இளம்பரிதியும் வேறு இருவரும் என்னைச் சந்திக்க வந்தார்கள். எனது சக உறுப்பினரான தங்க முகுந்தன் என்பவருடன் நான் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டேன்.*

*நூல் நிலையம் திறக்கும் முயற்சியைக் கைவிடுமாறும் இல்லையென்றால் பாரிய விளைவுகளைச் சந்திக்க நேரிடும் எனவும் இளம்பரிதி எச்சரித்தார்.*

*மீறித் திறந்தால் பல பிணங்களைச் சந்திக்க வேண்டி வரும் என்று கூறினார். முகுந்தனுக்கும் இளம்பரிதிக்கும் இடையில் கடுமையான*



*வாக்குவாதம் நடந்தது. ஒரு கட்டத்தில் இளம்பரிதி தனது கதிரையை விட்டு வேகமாக எழுந்து தனது கோபத்தைக் காட்டினார்.*

*இதற்கு முந்திய தினம் சர்வதேச தமிழீழ மாணவ அமைப்பின் தலைவர் கஜேந்திரனும் மேலும் இருவரும் வந்து என்னைக் கடுமையாக எச்சரித்தார்கள். நூல் நிலையத்தைத் திறக்க முயற்சி செய்தால் 1974ம் ஆண்டு தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு நடந்த கதிதான் நடக்கும் என்று கூறினார்கள்.*

**கேள்வி:-**

**இந்த விஷயத்தில் ஆனந்தசங்கரி இறுதி நேரத்தில் என்ன முடிவெடுத்தார்?**

**கந்தையன்:-**

*திறக்கப்பட வேண்டும் என்பதே அவரின் நிலைப்பாடு, ஆனால் இதைப் பயன்படுத்தி இரத்தக்களரி ஒன்று உருவாக்கப்படுவதை ஆனந்தசங்கரியும் விரும்பவில்லை. இது ஒரு பெரும் பிரச்சனையாக உருவாகிவிடக் கூடாது என்பதால் இதனைப் பின்போடுவது என்று நாம் எடுத்த முடிவை அவர் ஏற்றுக்கொண்டார்.*

**கேள்வி:-**

**இந்த நூல் நிலையம் திறக்கப்படுவது தொடர்பில் கூட்டமைப்புக்குள் மட்டுமன்றி கூட்டணிக்குள்ளேயே பலத்த முரண்பாடுகள் இருப்பதாகத் தெரிகிறதே..?**

**கந்தையன்:-**

*ஆம். உண்மைதான். பல்வேறுபட்ட அபிப்பிராய பேதங்கள். மாவைக்கு இதில் விருப்பமில்லை. மாவைக்கும், ஆனந்த சங்கரிக்கும் இடையில் எப்பொழுதும் பிரச்சனை என்பதை அறிவீர்கள்தானே! திறவுங்கள் என்று கூறிவிட்டு ரவிராஜ் வெளிநாடு போய்விட்டார். சம்பந்தன் இது குறித்து எதுவுமே கூறவில்லை*

**கேள்வி:-**

**இனிமேல் யாழ் நூல் நிலையம் எப்போது திறக்கப்படும்.**

**கந்தையன்:-**

*விநாயகமூர்த்தி கூறுவது போல் 200 கோடி ரூபா கிடைத்து, அதற்கான வேலைகளைப் பூர்த்தி செய்து, கணனிகள் பொருத்தி, புலிகள் சொல்வதெல்லாம் செய்து திறப்பதானால் 2006 ஆண்டில்கூட இந் நூல் நிலையத்தைத் திறக்க முடியாது.*

**கேள்வி:-**

**நீங்கள் திடீரென இராஜினாமாச் செய்துவிட்டீர்கள். நீங்கள் எழுதி கையொப்பமிடவேண்டிய கொடுப்பனவுகள், காசோலைகளின் கதி என்ன?**

**கந்தையன்:-**

*அதைப் பற்றி அந்த மாணவர் அமைப்பிடமே போய்க் கேளுங்கள் என்று நான் ஏற்கெனவே ஒரு தரம் கூறியிருக்கிறேன்.* ○

# NAVEEN CERAMIC

தரமான
☛ Wall Tiles, ☛ Floor Tiles
மற்றும் குளியலறை உபகரணங்களை
*Spain, Italy, Thailand, Malaysia, India, Indonesia* போன்ற நாடுகளில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்து விநியோகிப்பவர்கள்




Naveen Ceramic No.307, George R.De Silva Mawatta, Kotahena, Colombo-13. Sri Lanka. Tel : 345197-8

எமது புதிய காட்சியறை
184-A, Havelock Road, Colombo-05.
Tel :01-507334

500ற்கும் மேற்பட்ட அழகிய, பல வர்ண, வடிவங்கள் உங்கள் தெரிவுக்காக எம்மிடம் உண்டு.

# பணிப்பெண்கள் - Housemaids

## மலேசியா / சிங்கப்பூர்

சிங்கப்பூர், மலேசிய நாடுகளில் தமிழ் பேசும் / ஏனைய பணிப்பெண்களுக்கான ஏராளமான வேலைவாய்ப்புக்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. தமிழ் பணிப்பெண்களுக்கு பாதுகாப்பான தமிழ் இல்லங்களிலேயே வேலை வாய்ப்புக்கள் பெற்றுக் கொடுக்கப்படும்.

நிபந்தனைகளும் விதிமுறைகளும்
- வயது – மலேசியா 25 - 40 வரை
  சிங்கப்பூர் 20 - 40 வரை
- சம்பளம் – மலேசியா - RM - 500 ரூபா - 12,000 முதல்
  சிங்கப்பூர் - S$ 220 - S$ 250 ரூபா - 11,000 முதல்
- உணவு, தங்குமிட வசதி, வைத்திய வசதி இலவசம்
- சேவைக்காலம் இரண்டு வருடங்கள்
- இரு வழி விமான டிக்கட் இலவசம்

**உங்களது பாஸ்போட், பாஸ்போட் அளவிலான 3 கருப்பு வெள்ளை புகைப்படங்கள், 6 வர்ண புகைப்படங்கள், போஸ்காட் அளவிலான 2 வர்ண புகைப்படங்கள் சகிதம் நேரில் வரவும்.**

### ட்ரான்ஸ் கல்ப் பிரைவேட் லிமிட்டட்

TRANS GULF TGL GROUP
Since 1990

இலக்கம் 47, இரண்டாம் மாடி, ஹொஸ்பிடல் வீதி, கொழும்பு
(ஹில்டன் ஹோட்டலுக்கு அருகாமையில்)
தொலைபேசி இல: 321132, 329258

AL/742/Advt:/02/2003

உங்கள் வெளிநாட்டுக் கனவை நனவாய் மாற்றிடும் நிரந்தர ஸ்தாபனம்

# 1வது ஆண்டு நினைவஞ்சலி



**தம்பு சின்னத்தம்பி-சாலமோன்**
**[மீசாலை வடக்கு, மீசாலை]**

*தோற்றம் 21.10.1928*
*மறைவு 26.02.2002*

எண்ணத்தில் இனியோனே!
எம் அருமைத் தெய்வமே!
கண்ணொப்ப எமைக்காத்த
உத்தமரே!
விண்ணோ சென்றடைந்தீர்
வேதனையில் நாம் வாட!
நீர் சென்று இன்று ஒரு
வருடமாகின்றது.
ஒரு வருடமென்ன!
எத்தனை...
வருடம் சென்றாலும்
உமை எப்படி மறப்போம்.
அன்பால் எமைக் கவர்ந்த
பொன் போல் உளம்
கொண்ட புண்ணியனே!

துள்ளி எழும் எங்கள் துயர் துளிகூட மாறாது
தென்பே இல்லாது நின் பிரிவால் துடிக்கின்றோம்.
கண்ணான நின் மக்கள் கலங்கித் தவிக்கின்றார்.
வண்ண அவர் மழலைகளும் வாடித் துடிக்கின்றார்.
மாண்டார் மீண்டும் இப் பூவுலகிற்குத் திரும்பி வரார்.
இறையழைப்பை ஏற்றுச் சென்ற எம் தெய்வம்
அரனடியில் அவன் திருவடிச் சேவையில்
நிலைத்து நிற்க இறைவனைக் கண்ணீரோடு பிரார்த்திப்போமாக!
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

தொடர்பு:
சி.ராஜேந்திரம் (மகன்-சுவிஸ்)- 078-6793285
சி.சிறீதரன் (மகன்-சுவிஸ்) 0041-617614868
சி.ரவீந்திரன் (மகன்-சுவிஸ்) 0041/0522331462

தகவல்:-
மனைவி (நாகம்மா), பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
புகையிரத நிலைய வீதி-வவுனியா.

விளம்பரப் பகுதி

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனம்

**வீட்டுப் பணிப்பெண்கள், ஆண்களுக்கான எல்லாவிதமான தொழில்கள்**

**சவுதி அரேபியா, குவைட், டுபாய், கட்டார், ஜோர்டான், லெபனான்.**

| | |
|---|---|
| இருவழிப் பயணச் சீட்டு, உணவு, தங்குமிடம், மருத்துவ வசதிகள் | சேவைக் காலமான 2 வருடத்திற்குள் பிரச்சனைகள் ஏற்படின் உடனடியாகத் தீர்வு பெற்றுத் தரப்படும். |

பணிப்பெண்களுக்கு இலவசம்

**ZAHANA INTERNATIONAL**
*Manpower Supply*

10 நாட்களுக்குள் வெளிநாடு புறப்படுவதற்காக கடவுச் சீட்டு, புகைப் படங்கள், வளைகுடா வாகன சாரதி அனுமதிப் பத்திரம் என்பவற்றுடன்

Tel : 074-610301, 074-618502
Fax : 074-724324
Mobile: 072-426669.
E-mail : zahana@dialogsl.net
LLNO: 1845

75/2, 2nd Floor, Armour Street, Colombo 12, Sri Lanka.

## வெள்ளவத்தை

(கொழும்பு தெற்கு)

**Eric Rajapakse**
Opticians

நீங்கள் அடுத்த முறை மூக்குக்கண்ணாடி அல்லது கண்டாக்ட் லென்ஸ் வாங்கும்போது மூக்குக்கண்ணாடி தயாரிப்பில் விற்பன்னர்களும் கண்டாக்ட் லென்ஸ் தயாரிப்பில் கைதேர்ந்தவர்களுமான எம்மை நாடுங்கள்.

இல.539, காலி வீதி, வெள்ளவத்தை.
(றொக்ஸி பெற்றோல் நிலையத்திற்கு எதிரில்)

தொலைபேசி: 01-362971,553877

பிரதி வியாழக்கிழமைகளில் முன் அனுமதியுடன் கண் வைத்திய நிபுணர்களைச் சந்திக்கலாம்

## காண்டம்

உங்கள் வாழ்க்கையை சந்தோஷமாக்குங்கள். காண்டம் என்னும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலாபலனை தெளிவாக அறிந்து எல்லாப் பிரச்சனைகளையும் தீர்ப்பதற்கு வழிகண்டு கடவுள் அருளால் நன்மை பெறுங்கள். நேரில் வரவும். வெளி நாட்டில் உள்ளவர்களும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

**S.Mani**
142-2/4, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு-06.
சந்தைக்கு எதிர்ப்பக்கமாக
Tel: 074-519754

# இலங்கையில் அற்புத மலையாள மாந்திரீக சக்தி



மலையாள மாந்திரீக சித்தர் பேராசிரியர்.
டாக்டர் P.K சாமி (J.D.G.AN) JP அவர்களைச் சந்தியுங்கள்.

1. பிரிந்தவர் ஒன்று சேர.
2. காதல் கைகூட.
3. கணவன் மனைவி ஒருவரை விட்டு ஒருவர் பிரியாதிருக்க.
4. காதலன் காதலி தேடிவர.
5. எதிரியின் தொல்லை இன்றி நிம்மதி பெற.
6. குபேர வாழ்வு பெற.
7. குழந்தைப் பாக்கியம் பெற.
8. திருமணம் தோஷ நிவர்த்தி பெற. 9. வலம்புரி மகாலட்சுமி கடாட்சம் பெற.
10. ஓடிப்போனவர் தேடிவர. 11. வெளிநாட்டுப் பிரயாணம் தடை நீங்க.
12. தீராத நோய் தீர. 13. தெய்வீக சக்தியால் ஔடதம் மூலம் கூந்தல் வளர.
14. கடன் தொல்லை சிறுக சிறுக குறைய. 15. கையில் பணம் சேர.
16. அதிஷ்ட வீடு கட்ட.




**★ ஜேர்மனி அன்பரின் மடல், தெய்வீக சக்தியில் பேசும் மழலை**

மனித தெய்வமே! உங்களின் தெய்வீக சக்தியினால் பேசாத எம் 03 வயது மழலையை பேச வைத்து எம்மை ஆனந்தத்தில் மூழ்க வைத்த உங்களுக்குக் கோடானு கோடி நமஸ்காரங்கள்.

**★ மட்டக்களப்பு அன்பரின் மடல், துரித கதியில் வெளிநாட்டு வேலை வாய்ப்பு.**

மதிப்புக்குரிய ஐயா அவர்களுக்கு, தங்களின் அருள் சக்தியின் மூலம் நீண்ட காலமாகத் தடைப்பட்டு வந்த எனது வெளிநாட்டுப் பிரயாணம் தங்களோடு தொடர்பு ஏற்படுத்திய பின் உங்கள் சக்தியினால் துரித கதியில் எனக்கு வாய்ப்புக் கிட்டியது. உங்களுக்கு எனது நன்றிகள்.



**★ மாத்தளை அன்பரின் மடல், கை கூடிய திருமணம்.**

ஐயா அவர்களுக்கு, திருமணம் செய்ய இஸ்டமில்லாமல் இருந்த எனது மகளுக்கு திருமணத்தில் விருப்பம் தெரிவித்து, ஒரு வெளிநாட்டு வரனைத் தங்கள் கிருபையால் தந்து நல்லபடியாகத் திருமணத்தை முடித்துத் தந்தீர்கள். எங்களது மனமார்ந்த நன்றிகள்.

**உங்கள் விதியைத் தெரிந்து கொள்ள**

உங்கள் குறைகளை திட்டவட்டமாக, தெளிவாக மாந்திரீகத் துறையில் 41 வருடங்களாகத் தனக்கென ஒரு பாணியை அமைத்துத் தன்னடக்கத்துடன் சேவை புரியும். P.K. சாமி ஐயா அவர்களைக் கண்டு உங்கள் குறைகளை நீக்கி வாழ்வில் வெற்றி பெறுங்கள். அது மட்டுமா வாழ்வில் தோல்வியில் துவண்டு ஐயாவின் ஆசீர்வாதம் பெற்றபின் வெற்றி பெற்றவர்களின் திட்டவட்டமான, தெளிவான, நூற்றுக்கு நூறு உண்மையென உங்களால் உறுதி செய்யப்பட்ட ஜாதக விவரணம்.

சாஸ்திரம். இது தர்மத்திற்கு இணையாவது. தர்மத்தை மிஞ்சிய விதி இல்லை. விதியின் விவரணம் சாஸ்திரம். சாஸ்திரத்தின் சாம்ராஜ்யம் மலையாளம் கொச்சியம். மலையாளத்தின் மகத்துவம் மாந்திரீகம். மாந்திரீகத்தின் அரசர், பேராசிரியர் டாக்டர் P.K. சாமி ஐயா அவர்கள் இது ஒரு மயங்க வைக்கும் மாத்திரை அல்ல. மாயா ஜால வித்தையும் அல்ல. பரிபூரண மலையாள துர்க்கையின் தெய்வீக அற்புத அருள் கடாட்சமே.

அருள் ஞானத்துடன் கூறப்படும் ஜாதகம் என்றுமே பிழைத்ததில்லை. உங்களுக்கு நடந்தது. நடக்கப்போவது நடக்க இருப்பது, உங்கள் விதியின் விவரணம் என்ன? அன்றைய வருடம் எப்படி? அன்றைய மாதம் எப்படி? அன்றைய நாள் எப்படி? என்பதை அறியவும்.

குறிப்பாகச் **"செய்யும் தொழிலை செய்யாதவன் கெட்டான். செய்யத் தெரியாத தொழிலை செய்தவனும் கெட்டான்"** என்ற வாக்கியத்திற்கு ஏற்ப உங்களின் தொழில் எப்படி அமைய வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்ளவும். உங்களின் குழந்தையால் உங்களுக்கு யோகமா? உங்கள் திருமணம் எப்பொழுது? எங்கு நடைபெறும். எத்தனையாம் திகதி? என்ற விபரங்களை அறிந்து கொள்ள வேண்டுமா? உங்களின் இல்லம் வாஸ்து சாஸ்திர முறையில் அமைய வேண்டுமா? உங்கள் பிறப்பின் இரகசியம் அறிந்து கொள்ள காண்ட அடிப்படையில் ஜாதகம் எழுதிக் கொள்ளவும்.

**★ஜேர்மனி அன்பர் அனாவின் மடல், பிரிந்த குடும்பம் ஒன்று கூடியது.**

கருணை மிகுந்த கண்ணியத்துக்குரிய ஐயா அவர்களுக்கு, என்றென்றும் உங்கள் நல்லாசிகள் எனக்குத் தேவை. ஐயா ஒரு வருடமாக எனது கணவர் வேற்று மத பெண்ணோடு தொடர்பு ஏற்பட்டதால் தினமும் என் கணவனால் நொந்து, வெந்து கொண்டிருந்தேன். என் மன வேதனையை என் தோழியிடம் கூறி ஆறுதல் தேடும்போது அவர் மூலமாக உங்களின் சக்தியை அறிந்து கொண்டு, தங்களோடு தொடர்பை ஏற்படுத்தி என் நிலைமைகளை விளக்கினேன். உங்கள் சக்தியால் ஸ்ரீ துர்க்கையின் பூரண அருள் கிடைக்கப் பெற்று, ஐயா இப்பொழுது என் கணவர் மனம் திருந்தி என்னிடமே வந்து விட்டார். என்னோடு மிகவும் பிரியமாகவும் அன்பாகவும் நடந்து கொள்கின்றார். எனது வாழ்வில் நான் நிம்மதியாகவும், சந்தோசமாகவும் இருக்கின்றேன். எல்லாம் உங்கள் அருள் சக்தியின் மகிமையால் நடந்தது. எனது வாழ்க்கையில் ஒளி ஏற்படுத்திய உங்களுக்கு எனது ஆயிரமாயிரம் நன்றிகள்.

**★ கனடா அன்பரின் மடல், புத்தி பேதலித்தவர் பூரண நலம்.**

பெருமைக்குரிய டாக்டர் ஐயா அவர்களுக்கு, எனது மகளுக்கு 07 வருட காலமாக இருந்த மனப்பிரச்சனை, மனப் பயம், பைத்தியம் அனைத்தும் உங்கள் தெய்வ அருளால் பூரண சுகம் கிட்டியது. உங்களுக்கு எனது நன்றிகள்.

**★ டென் மார்க் அன்பரின் மடல், அதிசயிக்கத் தக்க முடி வளர்ச்சி**

அன்புள்ளம் கொண்ட ஐயா, தலையில் தலைமுடி உதிர்வதைத் தடுத்து, நீண்ட கூந்தலுடன் இவ்வுலகில் நலமுடன் வாழ எனக்கு வழி காட்டியமைக்கு என்றென்றும், தங்களுக்கும் துர்க்கை அம்மனுக்கும் நன்றி கூறுகின்றேன்.

**★ லண்டன் அன்பரின் மடல், என் இனியவள் என்னிடமே வந்தாள்**

மதிப்புக்குரிய ஐயாவுக்கு, என்னை வெறுத்து, என்னைப் பிரிந்து சென்ற என் ஆருயிர் காதலியை மீண்டும் என்னிடத்தில் வந்து சேர வைத்தமைக்கு ஆயிரம் நன்றிகள்.

**★ கொழும்பு அன்பரின் மடல், தீய பழக்கத்தில் இருந்து மீட்பு.**

மதிப்புக்குரிய ஐயா அவர்களுக்கு, தீய பழக்கம் உள்ள எனது தம்பியை மீட்டு, அவருக்கு புது வாழ்வும், அவருடைய மகளுக்குத் திக்கு வாய் குணமடையவும், எனது மைத்துனிக்கு கிடைக்க வேண்டிய காசு கிடைக்கவும், எனது மைத்துனனின் மகன் வெளிநாடு செல்லவும் தங்கள் அருள் சக்தியின் மூலம் நிறைவேற்றிய உங்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

**★ லெபனான் அன்பர் வரைந்த மடல், மனநோயில் இருந்து மீட்பு.**

கனம் மதிப்புக்குரிய டாக்டர் ஐயா அவர்களுக்கு. நீண்ட காலமாக இருந்து வந்த எனது நோய் பூரணமாகச் சுகம் பெற்று இவ்வுலகில் என்னையும் ஒரு சாதாரண பெண்ணாக வாழ வழியமைத்துக் கொடுத்து நீண்ட நாள் நரக வேதனையில் இருந்து மீட்டுத் தந்தமைக்கு நன்றிள்.

**★ யாழ்ப்பாணம் அன்பரின் மடல், அச்சொட்டான ஜாதக பலன்.**

ஐயா அவர்களுக்கு என்னுடைய ஜாதக பலனை விரிவாக அறியத் தந்தீர்கள். தாங்கள் கூறியது போல் அனைத்தும் நிகழ்வதையிட்டு ஆச்சரியமும் மகிழ்ச்சியும் அடைகின்றேன். என்றென்றும் உங்களுக்கு நன்றி.

**★ சுவிற்ஸர்லாந்து சுரேஷின் மடல்.**

அன்புள்ளம் கொண்ட ஐயாவுக்கு, சுரேஷர் எழுதிக் கொள்வது. ஆச்சரியமும் ஆனந்தமாய் இருக்கிறது உங்கள் சேவை. நான் பணம் அனுப்பி. என் பிரச்சனையை தொலைபேசி வாயிலாக "என் காதலியை அழைத்துத் தாருங்கள். அவள் இல்லாமல் என்னால் வாழ முடியாது." என்ற எனது அழுகைக் குரலுக்கு மனமிரங்கி, தொலைபேசி வாயிலாகவே ஒரு மணி நேரத்திற்குள் 7000 மைலுக்கு அப்பால் இருந்து நீங்கள் செய்த அருள் சக்தி மாந்திரிகத்தின் சக்தியால் என் காதலிஎன்னை வந்து அடைந்து விட்டாள். தங்கள் சேவை மீண்டும் மீண்டும் மக்களுக்குக் கிடைக்கத் துர்க்கையின் ஆசீர்வாதங்கள்.

**★ சுவிஸ் அன்பரின் மடல். நீண்டு வளர்ந்த கூந்தல்**

ஐயா அவர்களுக்கு, நீண்ட காலமாக முடி உதிர்ந்து முடி கட்டையாகி வெளியில் செல்ல முடியாது. வெட்கப்பட்டுக் கொண்டிருந்த எனக்கு உங்கள் அருள் சக்தியின் மூலம் கூந்தல் நீண்டு கறுப்பாய் இருக்க அருள்புரிந்தீர்கள். ஐயா! உங்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

**★ ஒப்டன் அன்பரின் மடல். சுகமாகிய பற்றுநோய்.**

ஐயா அவர்களுக்கு, நீண்டகாலமாக பற்று நோயால் அவதிப்பட்ட என் மனைவிக்கு தங்களின்அருள் சக்தியின் மூலம் பூரணமாக சுகம் கிடைத்தது. எங்கள் வாழ்வில் ஒளி வீசிய உங்களுக்கு கோடான கோடி நமஸ்காரங்கள்.

*உலக மாந்திரீக சக்கரவர்த்தி.*

**Prot. Dr. P.K Samy ( J.D.G.AN) J.P.**
Sri. Durgadevi. mantharika Utchada Peedam,
162. Kotahena Street. Colombo-13.
T.P. 432464, 344832, 342463, 470615, 431137. Fax: 0094-1-344831.
E.mail: drpk samy . @ sttnet.lk.

பார்வை நேரம் கொழும்பில் காலை 8.00-5.00 மணிவரை
வெளிநாட்டவர் தொ.பே. தொடர்பு காலை 6.00 இரவு 9.00 மணிவரை மட்டுமே. (இலங்கை நேரப்படி)
நுவரெலியாவில் காலை 8.00-6.00 மணிவரை

நுவரெலிய கிளை.
33, Daily Fair Complex, Kandy Road, Nuwara - Eliya.
(நுவரெலியாவில் மட்டுமே கிளை உண்டு.)
T.P. 052 -22508, 35097, 23093, 23336, 23570 Fax: 009452-22508
w.w.w. imexpo lanka . com. drpk samy.

# சுடர் மிகும் அறிவுக்கெதிரான கலகம்

தென்னாசியாவில் தலை சிறந்த அறிவுக் களஞ்சியமாக விளங்கிய யாழ் நூலகம் ஒரு இலட்சம் புத்தகங்களுடன் பேரினவாத அரசினால் திட்டமிட்ட முறையில் அக்கினிக்கு இரையாக்கப்பட்டது. இந்தக் கலாசாரப் படுகொலை நடைபெற்று இரண்டு தசாப்தங்களின் பின் மீண்டும் அந்த நூல் நிலையம் புத்துயிர் பெற்றெழும்போது அதனைத் திறக்கக் கூடாது என்ற குரல்கள் அடிவருடித்தனமாகவும் போலித்தனமாகவும் எழுகின்றன.

இவ்வாறு நூல் நிலையத்தைத் திறக்கக் கூடாது என்று சொல்பவர்கள் உண்மையில் பொது நலனில் அக்கறையுள்ளவர்கள்தானா?

த.வி.கூ. வின் தலைவர் ஆனந்தசங்கரி "அவர்கள் ஆசிரியர்களும், மாணவர்களும் ஏன் நூல் நிலையம் திறப்பதை எதிர்க்கிறார்கள்?" என்று கேள்வி எழுப்பியிருக்கிறார்.

புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, சமாதான சூழ்நிலையில் இரத்தக் களரி ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக நூல் நிலையம் திறக்கப்படுவதை ஒத்திப்போடுமாறு தான் மேயரிடம் கூறியதாக ஊடகவியலாளர்களுக்குத் தெரிவித்திருந்தார். "பேயரசு செய்தால் பிணம் தின்னும் சாத்திரங்கள்" என்று பாரதி கூறிய வார்த்தைகள் எவ்வளவு உண்மையானவை. பொருள் பொதிந்தவை! காலம் வென்ற வரிகள்! என்பதை இந்த நூல் நிலையம் திறப்பதற்கெதிரான ஆரவாரங்கள் புலப்படுத்துகின்றன.

"நல்லதோர் வீணை செய்து அதனை நலங்கெடப் புழுதியில் எறிவதென்பது" இதனைத் தான்.

இந்த நூல் நிலையம் 1930களில் உருவாக்கப்பட்டபோது வணபிதா லோங் அடிகளார் முன்னின்றுழைத்தார். பின்னர் 1950களில் யாழ் மேயர் சாம் சபாபதி, உள்ளூராட்சி அதிகாரியாக இருந்த சூரியகுமாரன் போன்ற சமூகத் தலைவர்கள், கல்விமான்கள் முக்கியமான பணியாற்றி இருந்தார்கள்

யாழ் சமூகமும், தீர்க்கதரிசனமிக்க சமூக, ஆன்மீகத் தலைவர்களும், அரச அதிகாரிகளும் இந்த நூல் நிலையத்திற்கு வித்திட்டவர்கள்.

1981 இல் இந் நூல் நிலையத்தை எரித்த பேரினவாதிகள், யாழ் சமூகத்தின் கல்விப் பாரம்பரியத்திற்கு இந்த அவமானகரமான செயலின் மூலம் சமாதி கட்டிவிடலாம் என்று கனவு கண்டார்கள். உண்மையில் நூல் நிலையம் ஒரு அரசினால் திட்டமிட்டு எரிக்கப்பட்டதென்பது தேசிய அவமானமாகும்.

இந்த நூல் நிலையம் எரிக்கப்பட்ட சம்பவம் வடக்கு-கிழக்கு மக்கள் மத்தியில் பெரும் துக்கத்தையும் ஆத்திரத்தையும் ஏற்படுத்தியது. உலகம் இலங்கையின் ஆட்சியாளர்களை அருவருப்புடன் நோக்கியது.

உலகில் தேசங்கள் மீது ஒடுக்குமுறைகளைச் செய்வோர், அத் தேசங்களின் கலாச்சார, பொருளாதார, கல்விக்கான மூல ஊற்றுக்களை, ஜீவ ஆதாரங்களை அழித்தொழிப்பது ஒன்றும் புதிதான விடயமல்ல.

"அழியுங்கள்! அழியுங்கள்! கட்டிடத்தை புத்தகத்தை காடுகளை அதன் பொருள் குறிக்கும் வார்த்தைகளை அழியுங்கள்!

எங்கள் பாடல் கீதமதில் பாய்ச்சுங்கள் அமிலத்தை" என்று பாலஸ்தீனக் கவிஞன் ஒருவன் ஆவேசக் குரல் எடுத்துப் பாடினான்.

இவற்றையெல்லாம் செய்தாலும் நாம் தொடர்ந்து போராடுவோம் என்பதே அது.

அதே போல் யாழ் பொது நூலகம் எரிக்கப்பட்டபோது யாழ் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராக இருந்த நுஃமான் அவர்கள் "நேற்று என் கனவில் புத்த பகவான் சுடப்பட்டு இறந்

> "வேதாளம் சேருமே,
> வெள்ளெருக்குப் பூக்குமே,
> பாதாள மூலி படருமே,
> மூதேவி சென்றிருந்து
> வாழ்வளே,
> சேடன் குடிபுகுமே"
> என்ற அவலமான
> சூழ்நிலையில் இருந்து
> தமிழ்ச் சமூகம் மீள
> வேண்டும்.

தார்" என்று கவிதை எழுதினார். பேரினவாதிகள் பௌத்தர்களின் புனித நூலான தம்மபதத்தையும் சேர்த்து எரித்தார்கள்.

இந்த நூல் நிலையம் எரிக்கப்பட்டதனால் அதிர்ச்சியடைந்த தாவீது அடிகளார் உயிரையே விட்டுவிட்டார்.

இந்த நூல் நிலையம் எரிக்கப்பட்டதன் பின் யாழ் மக்களுக்கு உருப்படியான ஒரு நூல் நிலையம் இருக்கவில்லை. சமூகத்தின் பல்வேறு தரப்பினரதும் பல்கலைக் கழகமாகத் திகழ்ந்த இந்த நூல் நிலையம் மக்களை இணைக்கும் ஒரு மையமாகத் திகழ்ந்தது. தேடல் அறிவுத் தாகம் கொண்டோர் ஒதுங்கிக்கொள்ளும் இடமாகவும் அமைந்திருந்தது.

தொடர்ந்து இடையறாத யுத்தம் - இடப் பெயர்வினால் யாழ் மக்களின் வீடுகளில் சேகரமாகி இருந்த நூல்களும் அழிந்து போயின.

ஏடுகளை அச்சு வாகனம் ஏற்றிய அறிவுப் பாரம்பரியம் கொண்ட சமூகத்தில் வாழ்க்கையின் கொடூர அனுபவங்களுக்கப்பால் எதனையும் பதிவு செய்வதற்கோ அல்லது அறிவைத் தேடுவதற்கோ வாய்ப்புகள் இல்லாமற் போயின.

1990 களின் நடுப் பகுதியின் பின்னர் இந்த நூலகம் பீனிக்ஸ் பறவை போல உயிர்த்தெழுவதற்கான நிலைமைகள் தோன்றின. இந்த நூலகத்தைப் புனரமைப்பதற்கு உலகமே முன்வந்தது.

பல கல்விமான்கள், பல உள்நாட்டு வெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவனங்கள், பல அரசாங்கங்களும் நூல்களைக் கொடுத்து உதவ முன்வந்தன.

துரதிர்ஷ்டவசமாக எமது சமூகத்தின் வேர்களை அறியக்கூடிய விதமாக இருந்த ஆவணங்கள், தகவல்கள் பெருமளவில் சேகரமாகவில்லை. யுத்தம், இடப் பெயர்வு இவற்றின் காரணமாக அழிந்து போனவை ஒருபுறமிருக்க, கருத்துச் சுதந்திரம், தேடல் மீதான அச்சுறுத்தல்களும் அதனைத் தடைப்படுத்தின. பல ஆய்வாளர்கள், அறிஞர்கள் குடாநாட்டை விட்டு வெளியேறினார்கள்.

புலம் பெயர்ந்த நாடுகளில் தகவல்கள், ஆவணங்களைச் சேகரித்தவர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். பிரான்ஸின் தலைநகர் பாரிசில் சபாலிங்கம் என்ற உணர்வும், அறிவும், அர்ப்பணமும், அனுபவமும் கொண்ட இளைஞர் ஆவணச் சேகரிப்பில் ஈடுபட்டிருந்தார். சம கால கடந்த கால வரலாறுகள் பற்றிய பல விடயங்களை அவர் தெரிந்து வைத்திருந்தார். சேகரித்து வைத்திருந்தார். அவர் ஜனநாயகத்தை வெறுப்பவர்களால், அறிவை வெறுப்பவர்களால் படுகொலை செய்யப்பட்டார். இன்று நூல் நிலையத்தைத் திறக்கக் கூடாது என்று கருதும் சக்திகளே சில வருடங்களுக்கு முன் சபாலிங்கத்தையும் படுகொலை செய்தார்கள்.

விஸ்தாரமான மயானங்கள் அல்ல; விஸ்தாரமான நூலகங்களே எமக்கு இன்று அவசியப்படுகின்றன. கல்வியை மூலதனமாகக் கொண்ட சமூகத்தில் இது முக்கியமான விடயமாகும்.

இந்த நூல் நிலையத்தைத் திறக்கவிடாமற் பண்ணியது சமூகத்தின் தேடல் முயற்சிகளுக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தலாகும். புதிய தலைமுறை விழித்துக்கொள்ளக் கூடாது என்று கருதும் சக்திகளின் நன்கு திட்டமிட்ட வேலை.

எங்கு சமூக அறிவு தொடர்பான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டனவோ அங்கெல்லாம் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

'முறிந்த பனை' என்ற நூலை எழுதியதற்காகக் கலாநிதி ரஜனி திரணகம பல்கலைக் கழக வாசலில் வைத்துப் படுகொலை செய்யப்பட்டமை, கனடாவில் 'தாயகம்' பத்திரிகை தடை செய்யப்பட்டமை, கனடாவில் 'தேடகம் நூலகம்' எரிக்கப்பட்டமை, மட்டக்களப்பில் பத்திரிகைக்

## தாகூர்

காரியாலயம் எரிக்கப்பட்டமை போன்ற சம்பவங்களையெல்லாம் இன்று நூலகம் திறக்கப்படக் கூடாது என்று எழும் குரல்களில் இருந்து பிரித்துப் பார்க்க முடியாது. அறிவுக்கெதிரான போக்கு எமது சமூகத்தில் தொடர்ச்சியாகக் காணப்படுகிறது.

1980 களின் நடுப் பகுதியில் மாற்று இயக்கங்கள் தடை செய்யப்பட்ட போது பல நூற்றுக் கணக்கான நூல்களும் வீதிகளில் போட்டு எரிக்கப்பட்டன.

முஸ்லீம் மக்கள் யாழ்ப்பாணத்தை விட்டுப் பலவந்தமாக வெளியேற்றப்பட்டபோது இஸ்லாமிய மார்க்க நூல்கள் வீதியெங்கும் சிதறின.

எனவே எமது சமூகத்தில் அறிவை நிலைநாட்டுவது என்பதும் பெரும் போராட்டமாகும்.

ஏன்? எதற்கு? என்று கேள்வி கேட்பவர்கள், அறிவுக்கான ஜன்னல்களைத் திறக்க முனைவோர் வாழ முடியாது என்பதே கடந்த இரண்டு தசாப்த கால வரலாறாகும். நடமாடும் அறிவாகத் திகழ்ந்த அமிர்தலிங்கம், கலாநிதி நீலன் திருச்செல்வம் போன்ற கல்விமான்கள் இவ்வுலகை விட்டு அனுப்பி வைக்கப்பட்டார்கள்.

எனவே "வேதாளம் சேருமே வெள்ளெருக்குப் பூக்குமே பாதாள மூலி படருமே மூதேவி சென்றிருந்து வாழ்வளே சேடன் குடிபுகுமே" என்ற அவலமான சூழ்நிலையில் இருந்து தமிழ்ச் சமூகம் மீள வேண்டும், புத்தம் புதிய பூமிக்கான, புது வாழ்வுக்கான, அறிவார்ந்த அடித்தளம் இடப்பட வேண்டும்.

தமிழ் மக்கள் எஞ்சியிருக்கும் அறிவுப் பொக்கிஷங்களைப் பாதுகாப்பதும் சமகால நிகழ்வுகளை உண்மையின் தளத்தில் இருந்து பதிவு செய்வதும் முக்கியமானதாகும்.

சமூகத்தைக் கேள்விச் செவியர்களாக, மந்தைக் கூட்டங்களாக மாற்றும் முயற்சிகள் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும். ■

## யாழ். மாநகரசபை உறுப்பினர்களின் இராஜினாமாத் தீர்மானம் (13.02.2003)

மக்களால் தெரிவு செய்யப்பட்ட நான்கு ஜனநாயகக் கட்சிகளின் உறுப்பினர்களைக் கொண்ட யாழ். மாநகர சபை ஏகமனதான தீர்மானங்களின் மூலம் செயற்பட்டு வந்தது.

மாநகர ஆட்சியின் அதிகாரத்திற்குக் கீழ்வரும் நூல்நிலையம் திறப்பது பற்றி பல்வேறு விவாதங்கள், மக்கள் அபிப்பிராயங்கள் என்பவற்றின் அடிப்படையில் நாளைய தினம் திறந்து வைப்பதாகத் தீர்மானிக்கப்பட்டது.

நூல் நிலையத்தின் புனரமைப்பிற்காக மதிப்பீடு செய்யப்பட்ட 120 மில்லியன் நிதியில் ஜனாதிபதி சந்திரிகாவின் நிதியிலிருந்தும் தற்போதைய அரசின் புனர்வாழ்வு புனரமைப்பு நிதியிலிருந்தும் முழுமையாகப் பெற்று, கட்டட வேலை கிட்டத்தட்ட முழுமையடையும் நிலையிலுள்ளது.

லிஃப்ட், கன்ரீன் போன்ற அமைப்பு வேலைகளுக்காக 21 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டு, புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சிடம் கோரிக்கை விடப்பட்டு அதற்குரிய நிதியைத் தருவதாக வாக்குறுதி அளிக்கப்பட்டது.

திறப்புவிழா ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கும் இத் தருணத்தில் ஒன்றியங்கள் மூலமும் பத்திரிகைகள் மூலமும் தவறான தகவல்கள் வெளியிடப்பட்டன. யாழ். நூல் நிலையத்தின் திறப்புகள் அபகரிக்கப் பட்டன. ஊழியர்கள் அச்சுறுத்தப்பட்டார்கள். நகரபிதா, உறுப்பினர்கள்கூட கடுமையான அச்சுறுத்தலுக்கு உட்படுத்தப்பட்டார்கள்.

மக்களுக்குத் தேவையான இந் நூல் நிலையம் திறப்பதில் தமிழீழ அரசியல் பிரிவு இவ்வாறு தீவிரமாகச் செயற்படுவது துரதிர்ஷ்டமானதாகும். அறிவுக் கருவூலமான நூல்நிலையத்தைத் திறப்பதற்கு மக்களின் அமைப்புகள் என்று கூறிக்கொள்பவர்கள் நடந்துகொண்ட முறையையிட்டு நாங்கள் வேதனையடைகிறோம்.

ஜனநாயக நிறுவனமான மாநகர ஆட்சி தன்னுடைய பராமரிப்பிலுள்ள நூல்நிலையத்தைத் திறப்பதற்கு முடியாத நிலையில் உறுப்பினர்களாகத் தொடர்ந்தும் இருப்பதற்கு எந்த உறுப்பினரும் விரும்பவில்லை. குடாநாட்டிலுள்ள ஜனநாயக சூழ்நிலை இப்படித்தான் இருக்கிறது. இந்த நாடும் சர்வதேசமும் இதனை விளங்கிக் கொள்ள வேண்டும்.

இந்த ஜனநாயக மறுப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து உறுப்பினர்களாகிய நாங்கள் பதவியிலிருந்து இராஜினாமாச் செய்து கொள்கிறோம்.

## அதிரடி அய்யாத்துரை



***பனிக்குழு*** கூடுதாமெண்டு யாரோ சொன்னாங்க. பனி எங்கடாப்பா இந்த ஊர்ல எண்டு யோசிச்சால், அடடா அது பணிக்குழு எண்டு எனக்குப் பிறகுதான் வெளிச்சுது. செய்தி அறியக் கூட்டத்துக்குப் போனன். ஒரு 25 சனம். தமிழ்க் கூட்டமைப்புக்காரர்தான் பணிக்குழுவாயும் உரு மாறி நிண்டிச்சினம். கொழும்பு வேட்பாளர் அருணாசலத்தார்தான் தலைமை. கூட்டமைப்புக்குக் கையொப்பம் வைச்ச நாலு பிரமுகர்களில சங்கரியாரைத் தவிர, சுரேஷ், குமரகுரு, ஸ்ரீகாந்தா மூண்டு பேரும் ஆஜராகி இருந்திச்சினம். விசயம் என்னெண்டால் அந்த மூண்டுபேருமே கூட்டமைப்பைச் சாடோ சாடெண்டு சாடித் தள்ளினதுதான். ஸ்ரீகாந்தாதான் உச்சக் கொப்பில நிண்டார். கூட்டமைப்ப ஆழக் குழி தோண்டி நீளப் புதைக்கவும் தயங்கமாட்டாராம். ம்.... இப்பவும் புதைக்கிற புத்தி போகேல்லப்போல. புதையுங்கோ புதையுங்கோ. புதைச்சுப் போட்டு ஏறிக் குதியிங்கோ. யாருக்கு வலிக்குது...?

***பணிக்குழு*** கூட்டத்துல மகேஸ்வரனாற்ர அமைச்சில இருக்கிற ஐ.டி.சம்பந்தர் ஒரு குண்டத் தூக்கித் திடீரெண்டு போட்டார். தான் இந்திய உளவுப் பிரிவு 'றோ'வில ரெண்டு வருசம் வேலை செய்தவராம் எண்டார். பிறகு குமரகுருபரனார் எழும்பி, இப்பிடி இவர் றோவுக்கு வேலைசெய்தது தனக்கு இப்பதான் தெரியும் எண்டு சொல்ல, அப்பதான் உடன இம்மை வெளிச்சு, பதறியடிச்ச சம்பந்தனார் நான் அப்பிடிச் சொல்லயில்ல, 'றோ'வின்ர விளையாட்டெல்லாம் எனக்குத் தெரியும் எண்டுதான் சொன்னனான் எண்டு சமாளிபிகேஷன் செய்துபோட்டார். சங்கதிய உளறிப்போட்டு சமாளிச்சு என்ன பயன்?

***சுரேஷார்*** இப்ப கொஞ்சம் அதிருப்தி கக்கிறாராம். வன்னிக்குப் போனால் கலந்துரையாடல் எண்ட கதையே இல்லை, சொன்னதக் கேட்டுக் கொண்டு வரவேண்டிக் கிடக்கு எண்டு சலிச்சுக்கொள்ளுறாராம். பணிக்குழுக் கூட்டத்திலயும் கொஞ்சம் சூடாத்தான் பேசினார். இந்தியாவுக்கு நாங்கள் கட்டளை போட ஏலுமோ, அவைய வளைச்செடுக்கிறத விட்டுட்டு மல்லுக்கு நிக்கப்போய் நாசமாக்கிப் போட்டம் எண்டு உரமாத்தான் பேசினாராம். இப்ப இந்தியன் எம்பஸிக்காரர் ஆளுக்கு விருந்துகளுக்கு காட் அனுப்பிறதில்லைப்போல. கவலைப்படாதே சகோதரா...!

***யாழ்.*** அறிவுக் களஞ்சியத்த பழையபடி திறந்துவிடத் தெண்டிச்சவைய கிட்டத்தட்ட சதிகாரார்கள்தான் எண்ட கணக்கில தமிழ்ப் பத்திரிகைகள் எல்லாம் எழுதினதப் பார்த்து திடுக்கிட்டுப்போன ஒருத்தர் சொன்னார்: எங்கட ஆக்கள் மந்திரிமாரையும் வெருட்டிச் சிலவழிக்கப்பண்ணி கல்லறைகளைக் கட்டியெழுப்பி அலங்காரம் பண்ணினமே தவிர கல்விக் கூடங்களின்ர தேவைய விளங்கிக் கொள்ளுவினமோ? எரிஞ்ச நூலகத்த அழிவுச் சின்னமாய்க் காட்டி அனுதாபம் சேர்க்கிறது தான் லாபம். அறிவுச் சின்னமாக்கி என்னத்தக் காணப் போகினம். படிச்சுப் படிச்சு பணிஞ்சுபோனதுதானே மிச்சம் எண்டுதான் இப்ப எங்கட மொடர்ன் திங்கிங் போல. வெரிகுட்! ●

# சிந்தித்துப் பார்க்க...

## ஆதிக்கத்திலிருந்து விடுதலை

மனிதனிடம் நிலவும் மிகவும் மோசமான அடிமைத்தனம் என்பது, ஆன்மீகம் சார்ந்து நிற்பதில் இருந்து வெளிப்படுகின்றது.

உங்கள் தனித் தன்மையை, சுதந்திரத்தை யாரிடமிருந்தும் எந்த உதவியும் இன்றி உங்களுக்குள் நிலை நிறுத்திக் கொள்ளவும் முழுமையான உங்களின் செயலாற்றலை உணர்ந்து கொள்ளவும் நீங்களாகவே முயற்சி செய்யுங்கள்.

உங்களது வளர்ச்சி என்பது, உங்கள் உயிருருவின் உள்ளே அமைந்த ஒன்றாகும். அது வெளியிலிருந்து வருவதல்ல; சுமத்தப்படும் ஒன்று அல்ல. அது ஒரு விரிதல்.

மனிதனின் முழுக் கடந்த காலமும், பல்வேறு வழிகளிலும் சுரண்டுதலின் ஒரு சரித்திரமாகும். ஆன்மீக மக்கள் என்று அழைக்கப்பட்டவர்களால் கூட, சுரண்டல் நிகழ்வுக்குள் தாம் தூண்டப்படுவதை அவர்களால் ஏற்க முடியவில்லை.

நூறு குருக்களிலே தொண்ணூற்று ஒன்பது குருக்கள் இந்த நிலையிலேயே இருந்து வருகின்றனர். "நானில்லாமல் உங்களால் வளர முடியாது, எந்த முன்னேற்றமும் சாத்தியமில்லை; உங்களது முழுப் பொறுப்பையும் என்னிடம் கொடுத்துவிடுங்கள்" என்ற இந்தத் தோரணையிலேயே அவர்கள் மக்களை வழிநடத்த முயல்கின்றனர்.

உயிர் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் செத்தவர்களைப் பின்பற்றிக் கொண்டிருப்பதும், உயிர் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் மீது செத்தவர்கள் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருப்பதும் மேலும், உங்களைக் காப்பாற்ற வருவோம் என்ற அவர்களது வாக்குறுதிகளையும் நாம் சார்ந்து நின்று கொண்டிருப்பதும் விநோதமாக இல்லையா?

அவர்களில் யாரும் உங்களைக் காப்பாற்ற வரவில்லை. உண்மையில் யாராலும், பிறர் யாரையும் காப்பாற்ற முடியாது. அது மனிதனின் தனித் தன்மை, சுதந்திரம் என்பவற்றின் அடிப்படையான உண்மைக்கு மாறாகச் செல்கின்றது.

உங்களைப் பொறுத்த வரையில், நீங்கள் மற்றவர்களிடமிருந்து உங்களை விடுவித்துக்கொள்ளவும் உண்மையைத் தேடுகின்ற பாதையில் தனித்து நின்று செயற்படவும் உங்களாலான முயற்சியைச் செய்யுங்கள்.

அடிமைகளை உயிர் வாழ்தல் மதிப்பதே இல்லை. அவர்கள் மரியாதைக்குத் தகுதியற்றவர்களாக ஆக்கப்படுகிறார்கள். அவர்கள் தமக்கான மரியாதை பற்றி மதிப்பிட முடியாதவர்களாக மாறிவிடுகிறார்கள்.

உண்மையில் உங்களது தனித்து நிற்றலானது முழுமை பெற்ற ஒன்றாக இருக்குமாயின், எதையும் நீங்கள் இழக்கப்போவதில்லை. ஒரு வேளை உங்களுக்கே முழுமையாகத் தெரியாத ஒன்றை நீங்கள் பெற்றுக் கொள்ளக்கூடும்.

**சோமேஸ்வரர், மௌனாச்சிரமம்.**

# மௌனப் பேரோசை!

மஞ்சத்தை விட்டெழுந்து சாளரம் நோக்கி நடந்தாள் சுபோதினி. சில்லென்ற பனி உடல் முழுதும் ஒடியது. கைகளை நெஞ்சுக்குக் குறுக்காகக் கட்டிக்கொண்டாள்.

வெளியே வானமும் பூமியும் மரங்களும் மனிதர்களும் மற்றைய உயிரினங்களும் ஆழ்ந்த நித்திரையில் இருந்தன. வானத்தின் நிழல் போல பூமியின் மீது நிலவின் வெளிச்சம் பரவியிருந்தது.

அமைதியாக உறங்கும் உலகைப் பார்க்க மனம் பொருமியது சுபோதினிக்கு. 'என்னைப் போல் வஞ்சிக்கப்பட்ட ஆத்மா இந்த உலகில் வேறொன்றில்லை. எல்லோரும் நிம்மதியாகத் தூங்குகிறார்கள். ம்... இப்போதென்ன நேரம்? நள்ளிரவு தாண்டியிருக்குமா? இந்த மௌனம் ஏன் என்னை இப்படி உசுப்புகிறது? என் உறக்கத்தை, நிம்மதியைக் கொலை செய்துவிட்ட இந்த இரவு எப்படி மற்றவர்களின் உறக்கத்திற்கு மௌனமாய்க் காவல் காக்கிறது.

என்ன மௌனம் இது? எனக்குள் மட்டும் கடல் போல கொந்தளித்துப் பொங்குகிறதே பேரோசை! இதயத்தின் மௌனமான பேரோசை...

திரும்ப வந்து மஞ்சத்தில் அமர்ந்தாள் சுபோதினி. உள்ளங்கைகளைத் தேய்த்துக் கொண்டாள். பின்னர் இரு கன்னங்களிலும் வைத்தாள். அந்தச் சூடு இதமாக இருந்தது.

அன்று கடற்கரையில் ஒரு அந்திப் பொழுதில் தன் உள்ளங்கையில் அபயன் முத்தமிட்டதை நினைத்தாள். இப்போதும் அந்த நிமிடத்தை நினைக்க அவள் நெஞ்சம் விம்மியது. கண்கள் பொங்கின.

மீண்டும் எழுந்து ஜன்னலருகே சென்றாள். மங்கிய நிலவொளியை ஊடுருவித் தொலைவில் பார்த்தாள். ஆனால் அவள் கண்டது நிலவொளி வரைந்திருந்த மர ஓவியங்களையோ, வானத்தையோ, வெள்ளிப் பாய் விரிப்பென இருந்த நிலத்தையோ அல்ல. அவளுடைய மனதில் அப்போது அந்த முன்னொரு நாளின் கடற்கரைச் சாயங்காலமே நிரம்பி இருந்தது.

'கடவுடளே எனக்கு என்ன நேர்ந்துவிட்டது? என் இதயத்துக்குள் என்ன நடந்துகொண்டிருக்கிறது? தூங்க விடாமல் இந்த நெஞ்சுக்குள் புரண்டு கலக்குவது என்ன?

அன்று திடீரென அவள் கைகளைப் பற்றிக்கொண்டு உள்ளங்கையில் முத்தமிட்டதுதான் அவன் ஆரம்பமாக இருந்தது. உணர்ச்சி வெறி நிரம்பியதும், தடுக்க இயலாததுமான உணர்ச்சிப் பெருக்கால் அவள் தன் பெண்மைக் கட்டுப்பாடுகளை நெகிழ விட்டாள். அவ்வாறு தன் கட்டுப்பாடுகளைத் தானே மீறுவது கண்டு அவள் அச்சமும் கொண்டாள்.

எப்படி ஒரு நீர்ப்பெருக்குப் போல ஆனந்தம் வந்து நிறைந்து தளும்புகிறது இதயம் என்று புரிந்துகொள்ள முடியாத் தவிப்பில் நெளிந்தாள்.

அச்சமா, ஆனந்தமா, உணர்ச்சி மோதலின் வெடிப்பா...? சட்டென அவள் கண்களில் நீர் நிறைந்தது. சுபோதினி அழுகையின் விளிம்புக்கு வந்திருந்தாள்.

அவள் முகத்தைத் தன் கைளில் ஏந்திய அபயன், தன் உதடுகளில் அவள் கண்ணீரை வாங்கினான்.

"ஏன், அச்சமா?" என்றும் மெல்ல வினவினான். உதடு திறந்து பதில் சொல்லும் திராணி இல்லாததால் 'உம்' மாத்திரம் கொட்டினாள் சுபோதினி. உணர்ச்சி நிறைந்து துடித்திருந்த அந்த உதடுகளைத் தன் விரல்களினால் பற்றியபடி, "ஏமாற்றிவிடுவேன் என்றா?" எனக் கேட்டான்.

அவள் 'இல்லை' என்பதாகத் தலையசைத்தாள்.

"அப்போ?"

"கல்யாணத்தின் பின் வைத்துக் கொள்ளலாமே..." அபயன் பிடியைத் தளர விட்டான். அவளையே பார்த்து யோசித்தவாறு நின்றான்.

"ஏன் கோபமா?" அவள் பயந்து கேட்டாள்.

'இல்லை' என்பதாகத் தலையசைத்துவிட்டுத் திரும்ப எத்தனித்தான்.

இப்போது சுபோதினி குற்றவுணர்ச்சி மிகுந்து சங்கடப்பட்டாள். எவ்வளவு ஏமாற்றமாகத் திரும்புகிறான்! அவன் இல்லாத வாழ்க்கை ஒன்று அவளுக்கு உண்டா?

ஆவேசம் கொண்டவளாகச் சட்டென்று தன் இரு கைகளாலும் அபயன் தோள்களைச் சுற்றித் தடுத்து நிறுத்தினாள். அவள் கழுத்தையும் முகத்தையும் சுற்றிக் கொடி போல் தன் கைகளைப் படரவிட்டு, அவன் முகத்தைத் தன் மார்புக்காக இழுத்தாள்.

"நான்...நான்..." என்று குழறலாக ஏதோ சொல்ல முற்பட்டாள் சுபோதினி.

அவள் மார்பிலிருந்து முகத்தை நிமிர்த்திய அபயன், அவள் உதடுகளைத் தன் உதடுகளால் இறுக முடினான். கனிரசம் ததும்பி நின்ற அந்தக் காதல் சுவையில் மயங்கி நின்ற சுபோதினியை அவன் கரங்களும் வலிய அணைத்தன. அவன் அணைப்பில் அவள் சுழன்றாள்.

மீண்டும் மஞ்சத்தில் வந்தமர்ந்தாள் சுபோதினி. தூக்கம் வரும் போலத் தெரியவில்லை. 'இதென்ன இந்த இரவு ஒரேயடியாய் நீள்கிறது! வேறு எந்தப் பக்கமும் மனதைத் திருப்ப முடியவில்லை. அபயன் நினைவொன்றே நெஞ்சின் மேல் தளத்தில் நுரைத்துப் பொங்கி நிற்கிறது. அந்த நினைவுகளைக் கழித்துவிட்டு நித்திரையைச் சேர்த்துக்கொள்ள முடியும் என்று தோன்றவில்லை.

சுபோதினி எழுந்து நின்று கைகளை உயர்த்திச் சோம்பல் முறித்துக்கொண்டாள்.

இதயத்திற்குள் மீண்டும் கடலின் இரைச்சல் கேட்டது. இல்லை, இது வெளியேயும் எங்கோ கேட்கிறது. ஆமாம் அபயனோடு தனித்திருந்த அந்தக் கடலின் இரைச்சல்தான் இந்த இரவின் அமைதியைக் கிழித்துக் கேட்கிறது. பழைய புண்ணை வைத்துக்கொண்டு ஓயாமல் முனங்கிக் கொண்டிருப்பவர்களைப் போல, தூரத்தில் முழங்கும் அலைகளின் ஓசை மெல்ல மெல்லக் கேட்டது. உள்ளும் புறமுமான இரைச்சல்களால் உடல் நடுங்க அமர்ந்திருந்தாள் சுபோதினி. அபயன்பால் மிகுந்து பொங்கிய வேட்கையாலும், பெருகும் துயரத்தாலும் கண் உறங்கவொட்டாது என அறிந்து கொண்டாள்.

ஆயாசத்தோடு எழுந்து மீண்டும் ஜன்னலருகே சென்றாள். இரவு முடிந்து பகல் தோன்ற இன்னும் நெடுநேரமாகும். இரவைக் கடக்கும் வழியறியாது ஏக்கமுற நின்றாள் சுபோதினி.

**யாமமும் நெடிய கழியும்**
**காமமும் கண்படல் ஈயாது**
**பெருகும் தெண்கடல்**
**முழங்குதிரை முழவின் பாணியிற்**
**பைபயப் பழம்புண் உறுநரின்**
**பரவையின் ஆலும் ஆங்கு**
**அவை நலியவும் நீங்கி**
**யாங்கும் இரவு இறந்து**
**எல்லை தோன்றலது...**

(நற்றிணை 378:1-6)

## சிந்தியா பதில்கள்

**★ டியர் சிந்தியா! தினமுரசு எப்போது பிறந்தது?**

க.கமலதாசன், வந்தாறுமூலை.

*வரும் ஜூனில் பத்தாவது வயதுப் பூர்த்தியைக் கொண்டாடப் போகிறது உங்கள் முரசு.*

❀•❀

**★ உமக்குப் பிடித்த நகைச்சுவை நடிகர் யார்?**

க.அஜந்தகுமார், அக்கரைப்பற்று-07.

*கலைவாணர் கிருஷ்ணன், நடிகவேள் ராதா, குணசித்திர மேதை பாலையா இவர்கள் மூவரையும் இன்று நினைவு படுத்திக்கொண்டிருக்கும் விவேக்.*

❀•❀

**★ அர்ஜுனின் என்னென்ன படங்கள் வரவிருக்கின்றன?**

முஹமட் மைசான், மீராவோடை-04.

*சிம்ரனுடன் நடித்த 'ஒற்றன்' வரவிருக்கிறது. இப்போது அவர் தயாரித்து இயக்கிக்கொண்டிருக்கும் படம் 'பரசுராம்'. நாயகிகள் கிரணும், காயத்ரி ரகுராமும்.*

❀•❀

**★ தமிழ்ப் படங்கள் அல்லது இந்தியப் படங்கள் ஏதேனும் இது வரை ஒஸ்கார் பரிசு வென்றிருக்கிறதா?**

முஹமட் மைசான், மீராவோடை-04.

இல்லை. ஒஸ்கார் வெளிநாட்டுப் படங்களுக்கான விருது பிரிவில் சிறந்த ஐந்து படங்களுக்குள் தெரிவாகிய இந்தியப் படங்கள் 'மதர் இந்தியா', 'சலாம் பாம்பே', 'லகான்' ஆகியவை மட்டுமே. லகான் விருது பெற்றுவிடும் என்று எதிர்பார்க்கப்பட்டு கடந்த வருடம் ஏமாற்றத்துக்குள்ளானதைத் தெரிந்திருப்பீர்கள். தமிழ்ப் படங்களெல்லாம் இனிமேல்தான் 'சிறந்த ஐந்து' பரிசோதனைக்கே தெரிவாக வேண்டும்.

❀•❀

**★ அறிவுரைகளால் துளைத்தெடுப்பவர்களிடமிருந்து எப்படித் தப்பித்துக் கொள்வது?**

இ.சூரியகுமார், மான்காடு.

*அது மனிதப் பொது நோய். யாரும் தப்பித்துக்கொண்டு விட முடியாது. அறிவுரை எப்படி இருக்க வேண்டும் என்று யாரோ சொல்லியிருந்தது சுவாரசியமானது. "அறிவுரை என்பது நவ நாகரிக மங்கையின் ஆடையைப் போல சுருக்கமாய் அமைந்து சுவை கூட்டுவதாகவும், ஆனால் முக்கியமான செய்தியை உள்ளடக்கியதாகவும் இருக்க வேண்டும்.*

❀•❀

**★ சிந்தியா, நான் நன்றாகப் பாடுவேன். வாய்ப்புக்காகக் காத்திருக்கிறேன். உங்களிடம் நேரில் வந்து பாடிக் காட்டினால் என்னைப் பற்றி எழுதுவீர்களா?**

இ.இன்பராஜன், கண்டி.

*என்னைப் பயமுறுத்தி, எழுதுவதை விட்டு ஓடச் செய்துவிடலாம் என்று தானே பார்க்கிறீர்கள்? நடக்காது.*

❀•❀

**★ இந்த யுத்தமற்ற காலத்திலும் நெடுந்தீவுக் கடலில் மூன்று புலிகள் அநியாயமாகப் பலியாகியிருக்கின்றனரே, அந்தத் தமிழ் இளைஞர்களின் வீணான உயிரிழப்புக்கு நாம் யாரை நோவது?**

ச.முத்துக்குமார், கொழும்பு-13.

உங்கள் குழப்பம் எனக்கு ஆச்சரியமூட்டுகிறது. நான் தொடர்ந்து தமிழ்ப் பத்திரிகைகளைப் படித்து வருகிறவன் என்பதால் எனக்குத் தெளிவுண்டு. இதெல்லாம் சமாதானத்தைக் குலைக்க முயலும் தீய சக்திகளின் வேலை. எதிர்க் கேள்விகள் கேட்டு, சமாதானத்துக்காகவே இருப்பவர்களைச் சங்கடப்படுத்தாமல், தமிழ் மக்கள் அவதானமாக நடந்துகொள்ள வேண்டும்.

❀•❀

**★ கொண்டது விடாக் குணம் கொண்டவர்கள் எப்படியிருப்பர்?**

ஜெ.லக்கி, பெரியகல்லாறு.

*தெருவில் இருவர் சந்தித்துக் கொண்டனர். "அட, என்ன சேர்ப்பிரைஸ்! எப்பிடி மாறியிட்டாய்? நல்ல அடர்த்தியான தலைமயிர் இருந்தது. இப்ப அப்பிடியே வழுக்கையடிச்சுப் போய் நிக்கிறாய். சரியாய்க் கறுத்தும் போனாய். நல்ல குண்டாய் இருந்தனி இப்ப ஒல்லிக்குச்சி உடம்புக்காரனாகி யிட்டாய். ஆச்சரியமாயிருக்கு. ஆளே எப்பிடி மாறியிட்டாய் கந்தசாமி? நான் எதிர்பார்க்கவே இல்லை!"*

*"நான் கந்தசாமி இல்லை."*

*"அட, பேரையுமா மாத்திப் போட்டாய்?"*

❀•❀

**★ உன்னி கிருஷ்ணன் முகவரியைத் தர முடியுமா ப்ளீஸ்?**

பெ.பரமேஸ்வரி, தெற்கிலுப்பைக்குளம்.

*நீண்ட நாட்களாக இதைக் கேட்டுக் காத்திருக்கும் தலவாக்கலை ரி.நிஷாந்தினி, உரும்பிராய் கிழக்கு ஜெ.சுகன்ஜா ஆகியோருக்காகவும் இதோ முகவரி:*

**RAMS PLOT, SECOND FLOOR,**
**WEST COURT ROAD,**
**CHENNAI 600 002. PHONE: 6211158.**

❀•❀

**★ கோவிலில் சாமி கும்பிடும்போது நீங்கள் என்ன வேண்டிக்கொள்வீர்கள்?**

மு.விமல், பூண்டுலோயா.

*நாட்டில் அமைதி ஏற்பட்டு எல்லோரும் நல்லாயிருக்க வேண்டும் என்ற வேண்டுதலுக்கு மனதைத் திருப்பித் திருப்பி இழுத்து வருவேன். அதுபாட்டுக்கு வாசலில் கழற்றிவிட்டு வந்த செருப்பை யார் எடுத்துப் போனார்களோ என்று அங்கேயே சுற்றிக் கொண்டிருக்கும!*

❀•❀

**★ 'வசீகரா' பற்றி நீங்கள் ஒன்றும் சொல்லவில்லையே?**

அ.சுஹாஷினி, பண்டாரவளை.

*ஓமோம்! மூன்று வருடங்களுக்கு முன் வந்த ஒரு படத்தில் நாயகன், "ஒரு பொய்யாவது சொல் கண்ணே உன் காதலன் நான்தானென்று.." என்று பாடிக் கொண்டிருந்தான். இங்கே, "ஒரு தடவை சும்மாவேனும் சொல்லு 'உன்னை எனக்குப் பிடிக்கும் என்று..'" (லவ்பண்ணாட்டிக் கொன்னுடுவேன்..) எனக் கேட்டுக் கொண்டு இந்தப் படத்தில் நாயகி அலைகிறாள்.*

*மாற்றங்கள் எவ்வளவு விரைவாக வந்துவிடுகின்றன!*

❀•❀

**★ இப்போது சொல்லுங்கள். உலகக் கிண்ணம் யாருக்கு?**

பி.எம்.எம்.பைசுல், கரம்பை.

*அவுஸ்திரேலியாவுடன் அதற்காக மோதப்போவது தென்னாபிரிக்காவா அல்லது வேறு ஒரு அணியா என்று ஆரம்பத்தில் கேள்வியாக இருந்தது. அட, மேற்கிந்தியத் தீவுகளா? என்று நம்மை நிமிர வைத்து, தெ.ஆபிரிக்காவுடன் பொங்கிய 'காஸ்' நியூஸிலாந்தில் வடிந்துவிட்டது. நெதர்லாந்திடமே தண்ணி குடித்த இந்தியர்களையும், அவுஸ்திரேலிய சிமண்ட்ஸிடம் பரிதாபமாக வாங்கிக் கட்டிய பாகிஸ்தானியர்களையும் பார்த்தபோது... ஜெயசூரியாவின் அதிரடி அணி அரையிறுதியைத் தொடலாம் என்று ஆசை வந்திருக்கிறது. பார்க்கலாம். உங்களைப் போலவே பரபரப்புடன் நானும்!*

❀•❀

**★ மக்கள் நினைத்தால் எதைத்தான் சாதிக்க முடியாது. கடைசியில் யாழ்.நூலகத் திறப்பு விழாவைத் தள்ளிப் போட வைத்துவிட்டார்களே யாழ்ப்பாண மக்கள்?**

எஸ்.ஸ்ரீபன், காலி.

*இதென்ன பெரிய விஷயம்? நூலகத்தைத் திரும்பக் கட்டுவதற்கு அரசாங்கத்திடமிருந்தோ அல்லது அதனூடாக வெளிநாடுகளிடமிருந்தோ 200 கோடி ரூபாவைப் பெற்றுக்கொள்ள முடியுமென்றால், அதில் பாதி தமிழ் மண்ணை மீட்கும் போராட்டத்திற்குப் போய்ச் சேருமாக இருந்தால் அந்தக் கட்டடத்தையே தகர்த்தும் விடுவார்கள்... தமிழ் மக்களா, கொக்கா?*

❀•❀

**★ புரிந்துணர்வு ஒப்பந்தத்தை நம் தமிழ்த் தரப்பினர் மீறும் போதெல்லாம் அதை மறைத்தோ அல்லது நியாயப் படுத்தியோ 'தமிழ் மானம்' காத்து எழுதி வரும் நம் புத்திசீவிகள் எதைச் சாதிக்க நினைக்கின்றனர்?**

எஸ்.சஞ்சீவன், லண்டன்.

*பேசுவது மானம்; உயிர் பேணுவது ஞானம்.*

❀•❀



## அழகிய குண்டுகள்


சாதாரண அழகிகளல்ல குண்டு அழகிகள். 'ஜம்போ குயீன்' என்று இவர்களை அழைக்கிறார்கள். காதலர் தினத்தை முன்னிட்டு தாய்லாந்தின் தலைநகரமான பாங்கொக்கில் இந்தக் குண்டுகளின் அழகுராணிப் போட்டி இடம்பெற்றது. போட்டியில் கலந்து கொண்ட "அழகான அணுகுண்டுகள்" சிலவற்றையே காண்கிறீர்கள்.

# தகவல் பெட்டி

## கிரிக்கெட் கிளி

கிரிக்கெட் உலகக் கிண்ணத்தை யார் கைப்பற்றுவார்கள் என்று அறிந்து கொள்ள இரசிகர்கள் மத்தியில் இருக்கும் ஆவலைக் காசாக மாற்றும் உத்தி இது. இந்தியாவின் கல்கத்தா நகரில் உள்ள ஒரு கிளி ஜோசியர் உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றும் அணி எது என்று தன் கிளி மூலம் கணித்துக் கூறி இரசிகர்களை மகிழ்ச்சிப்படுத்துகிறார்.





## நெஞ்சுறுதி

அமெரிக்காவிடமிருந்து அடி விழ இன்றோ நாளையோ என்று நேரம் நெருங்கும் சமயம் எவ்வித பதற்றமுமில்லாமல் ஹஜ் பெருநாள் தொழுகையை முடித்துக் கொண்டு தனது தளபதிகள், முக்கிய அமைச்சர்களுடன் ஆலோசனை நடத்துகிறார் ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுஸைன். ஒரு வேளை சதாம் இவ்வாறு தோன்றும் கடைசி ஹஜ் பெருநாள் நிகழ்வின் புகைப்படமாகக் கூட இது இருக்கலாம். அடுத்து வரும் நாட்கள்தான் இதற்குப் பதில் தர வேண்டும். போர் மூண்டால் சதாம் கடைசி வரை ஈராக்கிலேயே நின்று எதிர்த்துப் போராடுவார் என அவருக்கு நெருக்கமானவர்கள் கூறியுள்ளனர்.



## விஷ ஆசை

சீனா, தாய்வான் போன்ற நாடுகளில் வாழும் மொங்கோலிய இனத்தவர்களுக்கும் பாம்புக்கும் இடையில் காலாகாலமாக நெருங்கிய தொடர்பிருக்கிறது. விஷப் பாம்புகளுடன் விளையாடுவது முதல் அவற்றைப் பிடித்து சூப் செய்து சாப்பிடுவது வரை அந்த மக்களின் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்த விடயமாக இருக்கிறது.

பாம்பென்றால் படையும் நடுங்கும் என்ற பழங்காலப் பல்லவியெல்லாம் இவர்களிடம் எடுபடாது. பெய்ஜிங்கில் நடைபெற்ற கண்காட்சி ஒன்றில் சீன மங்கை ஒருவர் பாம்பைப் பிடித்து அட்டகாசமாக வித்தை காட்டுகிறார். வாய்க்குள் பாம்பைச் செலுத்தி அதனை மூக்கு வழியாக வெளியே எடுத்து... நினைத்தாலே மயிர்க்கூச்செறிகிறதா...?

# ரம்பாவைப் புகழும் இயக்குநர்

'பந்தா பரமசிவம்' படத்தில் பிரபு ஜோடியாக நடிக்கும் ரம்பா, கவர்ச்சி காட்டும் விஷயத்தில் என் என்றால் எண்ணெயாகச் செயற்படுகிறாராம்! முதுகு அழகைக் காட்டி நடித்துள்ள அவர், ஒழுங்காக கால்ஷீட் கொடுத்து நடிக்கிறாராம். ஏன் இந்தத் திடீர் ஞானோதயம்? முன்பெல்லாம் கால்ஷீட் குளறுபடி செய்யும் நடிகை என்று பெயரெடுத்த ரம்பாவா இது? என்று எல்லோருமே மூக்கின் மேல் விரல் வைத்து வியக்கிறார்களாம். இயக்குநர் என்ன சொல்கிறார்? பிரபு ஜோடியாக நடிக்கும் ரம்பாவுக்கு இந்தப் படம் கண்டிப்பாகத் திருப்புமுனை தரும். ஒரு காலத்தில் எல்லாப் படங்களிலும் நடித்துக் கொண்டிருந்தார் அல்லவா? அது போல ஒரு மாற்றம் 'பந்தா பரமசிவம்' படத்துக்குப் பிறகு அவருக்கு ஏற்படும். அந்த வகையில் ரம்பா கொடுத்து வைத்த நடிகை என்று புகழ்கிறார்.



# காதலனை உதறினார் மீரா ஜாஸ்மின்

தமிழ்ப் படங்களில் நடிக்கக் கூடாது என்று தடை விதித்த தன் காதலனுக்கு நடிகை மீரா ஜாஸ்மின் 'குட்பை' கூறிவிட்டார்.

தமிழ் சினிமா ரசிகர்களின் மனங்களில் நீங்கா இடம் பெற்றுவிட்ட மீரா கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தபோதே அவரை 'சூத்ரதாரன்' என்ற மலையாளப் படத்தில் அறிமுகப்படுத்தியவர் லோகிதா தாஸ்.

அன்று முதல் மீராவின் அனைத்து நடவடிக்கைகளையும் லோகிதா தாஸ்தான் பார்த்துக் கொண்டார். கிட்டத்தட்ட மீராவைத் தன் கட்டுப்பாட்டிலேயே வைத்திருந்தார் இவர்.

மலையாளத்தில் கொடிகட்டிப் பறந்த மீராவுக்கு 'ரன்' படத்தின் மூலம் தமிழ்ப் பட வாய்ப்புகள் வரத் தொடங்கின. 'ரன்' வெற்றியின் மூலம் முதல் படத்திலேயே உச்சாணிக் கொம்பை எட்டிவிட்டார் மீரா.

இதையடுத்து 'பாலா' படத்திலும் மீரா நடித்தார். இப் படம் ஊத்திக் கொண்டபோதிலும், ரசிகர்களைக் கிறங்கடிப்பதால் தமிழில் அவருக்கு ஏகப்பட்ட கிராக்கிதான்.

ஆனால் மீரா தமிழ்ப் படங்களில் நடிப்பதற்கு லோகிதா தாஸ் பெரும் தடையாக இருந்தார். ஏகப்பட்ட வாய்ப்புக்கள் வந்து கதவைத் தட்டியபோதிலும், 'பாலா' படத்திற்குப் பின்னர் அவர் தமிழில் நடிக்கக் கூடாது என்று லோகிதா தாஸ் எச்சரிக்கை விடுத்தார்.

ஆனால் பல பெரிய தமிழ நடிகர்களுடன் நடிப்பதற்கெல்லாம் மீராவுக்கு வாய்ப்புக்கள் வந்து கொண்டிருக்கின்றன. மலையாளத்தில் கிடைக்காத வாய்ப்பு தமிழ் படங்களில் கிடைக்கும்போது இதை ஏன் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது என்று மீரா நினைத்தார்.

இதையடுத்து மலையாளப் பட உலகிற்கு மட்டுமல்லாமல் லோகிதா தாஸுக்கும் ஒரு பெரிய 'குட்பை' போட்டுவிட்டார் மீரா. லோகிதா தாஸின் 'டார்ச்சர்' காரணமாகவே அவரை மீரா காதலித்து வந்ததும் இப்போது தெரிய வந்துள்ளது.

காதல் பற்றிக் கேட்டால், "காதலாவது, கத்தரிக்காயாவது. எல்லாமே பொய். என்னைக் கவிழ்க்கத் திட்டம் போடுகின்றனர். என்னைப் பற்றி என் பெற்றோருக்கு நன்றாகத் தெரியும்" என்று மிகவும் தெளிவாகக் கூறினார்.

இதையடுத்து மீராவுக்குத் தமிழில் வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளன. பல தமிழ்ப் படத் தயாரிப்பாளர்கள் மீராவை முற்றுகையிட்டுள்ளனர். தமிழில் அவர் ஒரு பெரிய 'ரவுண்டு' வருவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது விஜய்யுடன் 'கீதை' படத்திலும், அஜித்துடன் 'மகா' படத்திலும் மீரா நடித்து வருகிறார் என்பது குறிப்பிடத் தக்கது.



# ஓ... போடு ராணியின் ஓய்வு!

ஓ... போடு ராணிக்கு சில படங்கள் கைவசம் இருந்தாலும் பரபரப்பு என்பது இல்லை. கூடவே ஒரு பாடலுக்கு நடனமாடுவதற்கு முன்னணி நடிகைகளே தயார் நிலையில் இருப்பதால் ராணியை 'புக்'பண்ணி வைத்திருந்தவர்கள் கூட மனசு மாறி வேறு நடிகைகளுக்கு வாய்ப்புக் கொடுத்து வருகிறார்களாம்.



## ஏலேலோ

தனது சொந்தத் தயாரிப்பு மற்றும் இயக்கம், நடிப்பில் உருவாக்கத் திட்டமிட்டு இருந்த 'ஏலேலோ...' பட திட்டத்தைத் தற்காலிகமாகத் தள்ளி வைத்து விட்ட பார்த்திபன், ஷங்கர் உதவியாளர் செல்வன் இயக்கும் 'சூரி' படத்தில் ஒரு கௌரவ கதாபாத்திரத்தில் நடிக்கிறார். அதோடு, வி.சேகர் இயக்கும் ஒரு படத்தில் கதாநாயகனாக நடிக்கிறார்.

## பாவம் கௌசல்யா

நிஜமாகவே பாவம் கௌசல்யா. அழகும், நல்ல நடிப்புத் திறமையும் இருக்கிறது என்றாலும், தமிழில் அவர் எதிர் பார்த்தபடி நல்ல பட வாய்ப்புகள் கிடைக்கவில்லை. வெறுத்துப் போய் மலையாளப் படவுலகின் பக்கமாகக் கவனம் செலுத்தினார். அங்கும் பெரிய அளவில் முன்னுக்கு வர முடியவில்லை. தமிழில் கார்த்திக் ஜோடியாக நடிக்கும் 'முதலாம் சந்திப்பில்' படம் தனக்குக் கைகொடுக்கவில்லை என்றால், பழையபடி பெங்களூருக்குச் சென்று செட்டிலாகிவிடுவாராம்!



## அடுத்த படத்தில் விஜயகாந்தின் அரசியல் சமிக்ஞை

எதிர்காலத்தில் அரசியலுக்கு வருவதைப் பற்றித் தனது அடுத்த படத்தின் மூலம் ஆணித்தரமாகச் சொல்லத் திட்டமிட்டு உள்ளார் விஜயகாந்த். இதற்காக வித்தியாசமான அதிரடிக் கதை ஒன்றைத் தேர்வு செய்துள்ள அவர், அந்தப் படத்துக்கு 'மேயர்' என்று பெயரிட்டு உள்ளார்.



ராஜுசுந்தரம்-சிம்ரன்
படம்: ஐ லவ் யூடா

## மினி சினி

*கமல்ஹாசனின் 'நள தமயந்தி' படத்தில் நடிக்க தமயந்தி கிடைத்து விட்டார். அவுஸ்திரேலியாவில் வசிக்கும் இலங்கைத் தமிழ்ப் பெண் பாத்திரம்தான் தமயந்தி. இதற்கென மலையாள நடிகை கீது மோகன்தாஸ் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

* அண்மைக் காலமாகத் தனது மார்க்கெட்டில் சரிவு ஏற்பட்டு வருவதையடுத்து தெலுங்குப் படங்களில் வாய்ப்புத் தேட ஆரம்பித்திருக்கிறார் சினேகா. நாகார்ஜுன்-தருண் ஆகியோருடன் இரண்டு தெலுங்குப் படங்களில் நடிக்க ஒப்புக்கொண்டிருக்கிறார்.

* ராஜுசுந்தரத்தின் திருமணத்திற்கு சிம்ரன் அழைக்கப்படவில்லை. ஆனால் கமல் அழைக்கப்பட்டிருந்தார். அவர் நேரில் சென்று தன் காதலியின் முன்னாள் காதலனுக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

* நல்ல காதலனைத் தேடிக்கொண்டிருப்பதாகத் தமிழக சஞ்சிகை ஒன்றுக்குக் கூறியிருக்கிறார் சிம்ரன்

* 'சொக்கத்தங்கம்' படம் தோல்வியடைந்ததால் இயக்குநர் பாக்கியராஜ் மீது கடுப்பில் இருக்கிறார் விஜயகாந்த்.



## வில்லனாகும் தயாரிப்பாளர்

ஜி.ஜே.சினிமா பட நிறுவனத்தைச் சேர்ந்த தயாரிப்பாளர்களில் ஒருவரான வி.ஞான வேல், பாலா இயக்கும் 'பிதாமகன்' படத்தில் வில்லன் கதாபாத்திரத்தில் நடிக்கிறார்! இதில் கதையின் நாயகர்களாக விக்ரம், சூர்யா நடிக்கின்றனர். கதாநாயகியாக லைலா நடிக்க, அவரிடம் 150 நாட்களுக்கு மேல் கால்ஷீட் வாங்கி வைத்துள்ளனர்!

## ...தாஜுக்கெனப் பாடல்கள்

...தாஜுக்கென்று பாடல்கள் உருவாக்குவது ...மும் குறையவில்லை. குறிப்பாக மலமல ...லுக்கு மெட்டமைத்த தேவா இப்போது ...னொரு புதிய படத்திலும் மும்தாஜ் ...வில் ஒரு பாடலை உருவாக்கியிருக் ...ாம். அதனால் மார்க்கெட் சரிந்து ... இந்த நேரத்தில் இது போன்ற ...ள் இன்னமும் தன்னை நிலை ...ும் என்ற நம்பிக்கையில் ...கிறார் மும்தாஜ். ... முன்னணிக் ...வனிகள் ...போது ...ா புக் ...தில்லை. ...ன்ன ...ட ...தான்



## அதிர்ச்சி தரும் சிம்பு

'காதல் அழிவதில்லை' படம் வெளியிட்டதும் சிலம்பரசன் லண்டனுக்குப் போய்விட்டார். அங்கு அவரது படம் வெளியான தியேட்டரில் இரசிகர்கள் முன் தோன்றி இவப் அதிர்ச்சி தந்துள்ளார்.

சிலம்பரசன். லண்டனில் வசூலில் நம்பர் ஒன் 'காதல் அழிவதில்லை'தானாம்.

சிலம்பரசனைக் கதாநாயகனாக நடிக்க வைக்க தயாரிப்பாளர்கள் சிலம்பரசனை மொய்க்கிறார்கள். நல்ல கதை, நல்ல தயாரிப்பாளர், நல்ல இயக்குநர் ஆகிய அளவுகோலின்படி படங்களில் ஒப்பந்தமாகி வருகிறார். அடுத்து 'சாக்லெட்', 'பகவதி' படங்களை இயக்கிய வெங்கடேஷ் இயக்கத்தில் சிலம்பரசன் கதாநாயகனாக நடிக்கிறார். தொடர்ந்து லட்சுமி மூவி மேக்கர்ஸ், ஆஸ்கார் பிலிம்ஸ் போன்ற நிறுவனங்களிலும் சிலம்பரசனைக் கதாநாயகனாகப் போட்டுப் படம் எடுக்கப் பேசி வருகிறார்கள்.



ஜோதிகா

## காதோடு சொல்லுகிறோம்

**'து**ள்ளுவதோ இளமை' நடிகையோடு ஒரு படத்திலாவது நடிக்க வேண்டும் என 'ஜொள்ளி' வருகிறாராம் ஆக்ஷன் கிங். நிறையப் புது முகங்களை அறிமுகப்படுத்தித் திறமையை வெளிப்படுத்துவதில் ஆர்வம் கொண்டவராயிற்றே ஆக்ஷன் கிங்.

**வெ**ளிநாடுகளில் கலை நிகழ்ச்சி நடத்த மும்தாஜுக்கு ஏராளமான அழைப்புகள் வந்த வண்ணம் இருக்கின்றன. மும்தாஜும் ஒத்துக்கொண்டு 'கலைச்சேவை' செய்து கல்லாவை நிரப்புவதில் குறியாக இருக்கிறார்.

**'கா**தலன்' படத்தில் நடித்த காதலி நடிகை அடிக்கடி சென்னை வருகிறார். ஹோட்டல்களில் தங்குகிறார். என்ன விஷயமாக வருகிறார் என்பது தெரியவில்லை.

**சி**னிமா புதுமுக நடிகைகளைத் தனது செட்-அப்பாக்கிக் கொள்ள சில அரசியல் புள்ளிகள், தொழிலதிபர்கள் வலை வீசுவது வழக்கம். புத்திசாலிப் பெண்கள் பலர் அப்படி இருந்துகொண்டு கறக்கும் வித்தையைக் கடைப்பிடிப்பார்கள். சின்னத்திரையிலும், 'பாபா', 'மாறன்', 'காதல் சாம்ராஜ்யம்' படங்களிலும் நடித்தவரான இளம் மொட்டு சந்தோஷிக்கு அப்ளிகேஷன் நிறையக் குவிகிறதாம். நடிகை எவ் விதியைக் கடைப்பிடிக்கப் போகிறாரோ?

**'கா**ர்மேகம்' படத்தில் மம்மூட்டி நடிகரின் தங்கையாக, அழகான பைத்தியமாக நடித்தவர் ப்ரியமான தர்ஷினி நடிகை. சும்மா கும்முனு திமிசுகட்டை மாதிரி இருக்கும் அந்த நடிகை 'கார்மேகம்' டைரக்டர் எஸ்.பி.ராஜ்குமாரோட கிசுகிசுக்கப்பட்டார். ஆனால் அது 'வாய்ப்புக் கொடுத்தற்கான நட்பு' முறைதானாம். 'காதல் கீதல் எல்லாம் இப்போதைக்கு இல்லை. முதலில் நான் பணத்தையும் புகழையும் சம்பாதிக்கணும். அதுதான் என் முதல் நோக்கம்' என்று சொல்லும் ப்ரியமானவருக்கு இப்போது இரண்டு பட வாய்ப்புக் கிடைத்திருக்கிறதாம்.



பிரசாந்த்-சிநேகா
படம்: விரும்புகிறேன்

## ...ிரத்னம் இயக்கத்தில் நான்கு ஹீரோக்கள்

...ிரத்னம் கதை-திரைக்கதை எழுதி இயக்க, மெட்ராஸ் டாக்கீஸ் நிறுவனம் ...ிக்கும் புதுப்படத்தில் மாதவன், சூர்யா, ஸ்ரீகாந்த், கன்னடத்தைச் சேர்ந்த ...ீப் ஆகிய நான்கு கதாநாயகர்கள் நடிக்கின்றனர். ஏ.ஆர்.ரஹ்மான் இசை அமைக்க, த்ரிஷா கதாநாயகியாக நடிக்கிறார்.

## நடிக்க மறுக்கும் நடிகை

'அன்பு' படத்தில் கதாநாயகியாக அறிமுகமாகும் தீபுவைத் தேடி நிறைய புதுப்பட வாய்ப்புகள் வந்து கொண்டிருக்கிறது. ஆனால் அவரோ, "இந்த மார்ச் மாதம் நான் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு எழுத வேண்டும். அதற்காக நிறையப் படிக்க வேண்டியிருப்பதால், புதுப்பட வாய்ப்புகளை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஏப்ரல் மாதம் முதல் புதிய படங்களில் நடிப்பேன்." என்று சொல்கிறார்! இப்படி தீபு நடிக்க மறுத்த 'இடியட்' என்ற படத்தில் சிலம்பரசன் ஜோடியாக கிரண் ஒப்பந்தமாகி இருக்கிறார்.





தபு

சினி விசிட்

## ஞாபகவிளிம்புகளில்...!

உறைந்துபோன
ஊமைச் சோகத்திற்கு!
உயிர் கொடுத்து
அருட்டியபோது!
எண்ணங்கள் சிலிர்த்துச்
சிதறுகிறது!
***
மௌனம் போர்த்திய
இரவுகளில்
கசியும் கண்ணீரும்
மங்கலாய் மாறிய
உன் முகமும்
எப்போதோ உதிர்ந்த
வார்த்தைகள் மட்டும்
உன் சலங்கையின்
ஒலிபோல் இன்னும்
என் செவிகளில்
நேசத்தை மட்டும்
நேசிப்பதில் வென்றுவிட்டது.
***
விரைகின்ற வண்டியின்
யன்னலூடே நோக்கையில்
தொலைவின் நீர்ப்பரப்பின்
நடுவே ஒற்றைப்
பட்டமரமாய்
காலங்கள் தின்றது.
பசுமையும் இலையும்
மட்டுமல்ல அதன்
உயிர்த்துடிப்பும்தான்
நாதியற்றுக் கிடக்கிறது!
***
என் அழகுகளை
வார்த்தைகளால் வாழ்த்திவிட்டுப்
போகின்றேன்.
ஆணி வேரறுத்த
கோடரிகளின் வீச்சுக்குள்
வீழ்ந்து விடக்
கூடாதென்ற கவலையுடன்!

செல்வி.யசோ-
யாழ்ப்பாணம்.

## அடைவு

தூரங்கள் பிரித்தபோது
பிரிவு பற்றி
நீ கொண்டிருந்த கரிசனையும்
உன் கீதையும்
அருகில் வந்தபோது
என்னவாயிற்று?
***
நட்பின் பெயரால்
மிகவுமே உயரமான
சிகரத்தில்
நீ வீற்றிருந்தாய்
நீதியுரைத்தபடி!
***
ஓடும் நீரில்
ஒதுங்கித் தேங்கிவிடும்
இலையாய், சருகாய்
நானாகிப் போகின்றேன்
நீ
உறுத்தலற்று வாழ்!
***
அடிக்கும் சுழலில்
மேலெழும்பியதாலேயே
வேலியில் சிக்கிச் சிதிலமாகி
வெளிறிப்போகும்
"சொப்பிங் பேக்"கின் பரிதாபம்
எனக்கும் நேர்ந்ததையிட்டு
உன் அனுதாபங்கள்
இனியும் வேண்டாம்.
***
நான்
நானற்றதாய் இருந்த
காலத்தின்போதே
வழிநடத்திச் சென்ற
நின் அருவக்குரலுக்கு
என்றும் மதிப்பு உண்டு
அந்தளவுடன் விடைபெறுகின்றேன்,
வாழ்வின் அந்தம்வரை கூடவரும்
உறவையே முதன்மைப் படுத்தும்
சராசரிப் பெண்ணாய்
நீயும் ஆகிப்போனாய் என்ற
மெல்லிய வலியுடன்
ஒரு சின்ன வேண்டுகோள்,
***
"என்ன செய்வது
இப்படித்தான் வாழ்வு
திசைமாறிப் போகின்றது"
என இனியும்
யாருக்கும் எழுதிவிடாதே
திசைமாறுவது வாழ்வு அல்ல
நம் மனசுகளே!

யு.நிலாவசன்-
அக்கரைப்பற்று.

## அந்த நாள் ஒன்றை...

பிரிவின் வேதனை
இதயத்தை நசுக்கும்போது,
இரவுகளைச் சப்பி
நீயும், நானும்
நித்திரையின்றிக் கிடந்ததை
நினைத்துப் பார்க்கிறேன்!
***
உனது கண்ணீர் ஆறு
சுமந்து வந்த
காதல் ஓடம்
எனது திறமைத்
துடுப்புகளால்
வாழ்க்கைக் கரையை
தேடி வருகிறது!
***
கண்ணீர்த் துளிகளால்
ஊறிப்போன நம்
தலையணைகளை
இனி-
காயப்போடுவோம்
கதிரவன் போவதற்குள்.
***
புயல் அடித்தும்,
பூகம்பம் வெடித்தும்
அசையாத நம்
காதல் பூந்தோட்டம்
நம் இருவரையும்
காத்துக் கிடக்கிறது கண்மணி!
***
காதலை விட்டுக் கொடுக்காத
கண்ணியமானவளே,
சூரியனை ஒவ்வொரு நாளும்
கூடவே சேர்ந்து
வழியனுப்பி வைக்கிறேன்
உன்னைப்போல் நானும்.
***

ஒலுவில்-கலைப்பிறை
வஹாப்தீன்.

## தேன்கிண்ணம்

## புரியாதவைகள்

கடந்து சென்ற
காலங்கள் கசப்பானவை!
எனினும்
கசங்கிப் போகாத
உன் கனவுகளுக்காய்
நான் நித்தமும்
உறங்குகிறேன்!
***
ஒவ்வொரு இரவும்
விடியும் போது-நீ
வரும் நாளென்றால்
விடியலாய்
வராவிட்டால் இரவாய்
எனக்கு மட்டும்
ஆனது ஏனோ?
***
நாளைய மீதான
நம்பிக்கைகள் எனக்கு
இனியும் இல்லை!
நிகழ்ந்தவைகள்
நினைவுகளாய்
நிகழவிருப்பவைகள்
கனவுகளாய்
இருப்பதனால்
நீ- இனி
நிகழ்காலக் கனவுகளா?
இல்லை
இறந்த கால நினைவுகளா?
இன்னும் எனக்கு
புரியவில்லை

எஸ்.பி.தர்மராஜ்-டயகம.



## குருதியில் குளித்து நட....!


இதோ என் முள்ளந்தண்டு
ஊன்று கோலாய் தருகிறேன்...
பிடித்துக் கொள்...
இந்த நெடுவெளிப் பாலையில்
உயிர் உலர உலர
காத்திருந்தது போதும்...!
கொதித்து தகிக்கும்
சூரியனின் வெம்மை விடுத்து
என் தோல் போர்த்த நிழலில்
கொஞ்சம் இளைப்பாறு...!
***
இந்த பூமி
எரிந்து சாம்பலாகிப் போனது
கவலையில்லை...
***
உனக்கும் எனக்கும்
பிரபஞ்ச மூலையில்
நாம் வாழ்தலுக்கான
சாத்தியம் நிரம்பிய இடமிருக்கும்...
வாழ்ந்து கொள்வோம்...
இந்த ஜடபூமியை
தட்டுத் தடுமாறி
எல்லைகளை கடந்து...
சூனியவெளி பிரிந்து...
நமதான உலகத்தில்
வாழப்பாடாமல் உதிர்ந்து போன
வாழ்வை வாழ்ந்து விடுவோம்...
***
காத்திருந்தது போதும்..
பெண்ணே...
இதோ
என் முள்ளந்தண்டு
ஊன்று... ஏழு...
உன் மீதான அடக்குமுறைகளின்
கண்களில் குத்தி...
காயங்களில் வழியும் குருதியில்
குளித்து...
எழுந்து நட...
***
சிவப்பு சூரியனாய்
நிச்சயம்...
நாளைய விடியல்
ஒளியால் நிரம்பும்...
உனக்கும்....
எனகும்....
உலகிற்கும்...!
***

சண்முகம் சிவகுமார்-
பத்தனை.

## பேனா நண்பர்கள்



பெயர்:
மொஹமட் நிசான்
வயது: 20
முகவரி:
P.O.BOX- 6232,
BIN MOHUMOOD,
DOHA, QATAR.
பொழுது போக்கு:
பத்திரிகை கிரிக்கெட்



பெயர்:
எஸ். வி. ராஜசீலன்
வயது: 28
P'F:
P.O.BOX- 2200,
DOHA, QATAR.
பொழுது போக்கு:
தொலைக்காட்சி.



பெயர்:
ஏ.எம். றிஸ்வான்
வயது: 22
முகவரி: இல. 188,
சிராஜ் நகர்,
தம்பலகாமம்.
பொழுது போக்கு:
பத்திரிகை வாசித்தல்.

## என்னுள் நிறைந்த இனிய நட்பு!

உள்ளத்தின் பூரிப்பில்
மலரும் வார்த்தைகள்
ஆத்மாவின் துடிப்பை
ஆரத் தழுவியபடி.
அரங்கேற்றுவது நட்பு
இனிய கானங்களின
இன்னிசையில் வீசிடும்
இனிய ஸ்வரமே நட்பு
***
நினைவுகளைக்கூட
நிசப்தமாய் கண்டு
கனவுகளை நிஜமாக்கி
கூடவே உணர்வுடன்
இதயத் துடிப்பை
இசையென ரசித்து
இன்ப துன்பத்தில் ஒன்றாய்
கலந்ததே நட்பு
***
சோகத்தைக் கூட
சுகமாய் மாற்றி
இதயத்தின் நாளத்தில்
நாதமாய் ஒலிக்கும்
நிஜமான கீதமே நட்பு
இனியவை கூறி
இன்முகம் காட்டிடும்
இனிய நட்பின் முன்
காதலும் தோற்று நிற்கும்!
***
காய்ந்து போன உள்ளத்தை
காந்தமாய் சோகம்
கட்டியணைக்கையில்
அதை தட்டி எறிந்து
தொட்டுத் தழுவும் உன்னத
நட்பின் முன் இரத்த
உறவுகளும் தோற்றுப்போகும்
தேடியும் கண்டுபிடிக்க
முடியாத
தேசத்திற்குப் போன பின்னும்
நினைவுகளின் நம்பிக்கையில்
சுவாசங்கள் தூக்கமிழந்து
காத்திருப்பதும் நட்பில்தான்!

எ. ஆர். எம். நௌஷீல்-கல்முனை-07.

## 'நான்' என்ற அகந்தையே வன்முறையின் அடித்தளம்

போர் தொடங்கும் ஒவ்வொரு பிரிவும் எப்போதுமே கூறுவது என்னவென்றால், 'இது ஒரு தற்காப்பு யுத்தம்' என்பதுதான் என்று நான் எண்ணுகிறேன். போர்கள் எப்போதுமே இருந்து வந்து கொண்டிருக்கின்றன; எதிர்த்தோ தற்காத்துக் கொண்டோ!

ஆனால் சில யுத்தங்கள் ஒரு வகையான வினோதமான மிருகத்தனமான விளையாட்டாகப் பல நூறு வருடங்களாக இருந்து வந்துள்ளன. கல்வியும் நாகரிகமும் பெற்றவர்கள் என்று அழைக்கப்படும் நாமும், துரதிருஷ்டவசமாக மிகவும் முரட்டுத்தனமான கொலைத் தொழிலில் இறங்கியுள்ளோம். ஆகவே நாம் இந்த ஆழமான வன்முறை, மனிதனுக்குள் இருக்கும் இந்த முரட்டுத்தனம் என்ன என்ற கேள்வியில் இறங்கலாமா? இதனின்றும் விடுபட்டு விட முடியுமா என்ற சாத்தியத்தையும் பார்க்கலாமா?

"எந்தத் தருணத்திலும் வன்முறையைக் காட்டாதீர்கள்" என்று சொன்னவர்கள் உண்டு. அதாவது தன்னைச் சுற்றியுள்ளவர்கள் முரட்டுத்தனமாய், வன்முறையோடு வாழ்ந்தாலும் ஒரு அமைதியான வாழ்க்கையை வாழுவதைக் குறிக்கிறது. முரட்டுத்தனமான, காட்டுத் தனமான வன்முறையைக் கையாளும் மக்களின் நடுவிலே ஒரு சிறிய கருவையே அது குறிக்கிறது.

ஆனால் ஒரு மனித மனமானது தனக்குள் தேங்கியுள்ள வன்முறை, நாகரிகப் படுத்தப்பட்ட வன்முறை, தற்காத்துக் கொள்ளும் வன்முறை, அத்துமீறுகின்ற வன்முறை, போட்டி போடுகின்ற வன்முறை, ஒரு பெரிய ஆளாக முயலுகின்ற வன்முறை, தன்னைத் தானே ஒழுங்குபடுத்திக் கொள்ள முயலுகின்ற வன்முறை, தன்னைத் தானே அடக்கியாண்டு விரட்டுகின்ற, வன்முறையில் ஈடுபடாமல் இருப்பதற்காகத் தன் மேலேயே கையாண்டு கொள்ளும் குரூரத் தன்மை கொண்ட வன்முறை ஆகிய இந்தப் பல வகை உருவங்களாலான வன்முறையிலிருந்து விடுபடுவது எவ்வாறு?

வன்முறைகளிலே பல விதங்கள் உண்டு. இவை ஒவ்வொன்றையும் தனித் தனியே நாம் காணலாமா அல்லது வன்முறையின் மொத்த அமைப்பையும் காணலாமா? வன்முறையின் முழு நிறமாலையையும் நம்மால் காண முடியுமா, அதன் ஒரு சிறு பகுதி மட்டுமல்லாமல்?

வன்முறையின் மூலகாரணம் 'நான்', 'எனது' என்கிற அகம்பாவம். இது தன்னைப் பல விதங்களிலும் வெளிப்படுத்திக் கொள்கிறது. பிரித்து வைத்தல், தன்னை ஒரு பெரிய ஆளாக்கிக் கொள்ள முயலுதல்- இது 'தான்' என்ற ஒன்றிலிருந்து 'தனது அல்லாதது' என்பதைப் பிரித்து வைத்துக் கொள்கிறது. அறிந்தது என்பதிலிருந்து அறியாதது என்பதைப் பிரிக்கிறது.

குடும்பத்தோடு ஒன்றிப் போகும் 'தான்' அல்லது ஒன்றிப் போகாதது, தனது குழுவோடு ஒன்றிப் போகும் 'தான்' அல்லது ஒன்றிப் போகாதது என்று இவ்வாறு பல விதமாகப் பிரித்து வைக்கிறது.

அது ஒரு நீர்நிலையில் கல்லை எறிவதைப் போன்றது. தொடர்ந்து சுழல்களாக அலைகளைப் பரப்புகின்றது. இதன் நடு மையம் 'தான்' என்பதுதான். இந்தத் 'தான்' எந்த உருவிலாவது இருந்து கொண்டிருக்கும் வரை, அது வெகு நாசூக்காகவோ அல்லது வெளிப்படையாகவோ இருக்கலாம். அங்கு வன்முறை இருந்தேயாக வேண்டும்.

ஆனால் "வன்முறையின் அடிப்படைக் காரணம் என்ன?" என்ற கேள்வியைக் கேட்பதற்கும், அந்தக் காரணத்தைக் கண்டுபிடிப்பதற்கும் உள்ளர்த்தம், அதை ஒழித்துக்கட்ட வேண்டும் என்ற அவசியம் இல்லை.

நான் ஏன் மிருகத்தனமாக இருக்கிறேன் என்பதை மட்டும் நான் தெரிந்துகொண்டேனேயானால் அப்போது நான் அதை விட்டொழித்து விடலாம் என்று நான் எண்ணுகிறேன். எனவே நான் பல வாரங்கள், மாதங்கள், வருடங்கள் செலவிட்டு அந்தக் காரணத்தைத் தேடுகிறேன். வல்லுநர்கள் வன்முறைக்கானவை என்று கூறியுள்ள காரணங்களைப் புத்தகங்களில் படிக்கிறேன். ஆனால் இவை எல்லாவற்றையும் செய்து முடித்த பின்னரும் நான் வன்முறையில் ஈடுபட்டே இருக்கிறேன்.

**கவிதை நெஞ்சங்களுக்கு!**

"ஒரு கவிதை தெளிவாக இருந்தால், சீராக சிந்திக்கப் பட்டிருந்தால், ஒரு குறிக்கோளைக் கொண்டிருந்தால், தர்க்கபூர்வமாகவும் உண்மையாகவும் இருந்தால் அந்தக் கவிதை ஏதோவொன்றை மாற்றியிருக்கும்.... கவிஞனிலேயே அந்த மாற்றம் நிகழ்ந்திருக்கலாம். இவ்வாறு நிகழவில்லை என்றால், கவிதையே உருவாகவில்லை என்று கூறிவிடலாம்."

என்க் குறிப்பிடும் ஹிந்தி மொழிக் கவிஞர் ஜீவ் பட்டேல் அவர்களின் 'ஒரு மரத்தைக் கொல்வது பற்றி' என்ற கவிதையும், மரம் பற்றிய மற்றுமிரு கவிதைகளும் இவ்வாரச் சிறப்புக் கவிதைகளாக....

## ஒரு மரத்தைக் கொல்வது பற்றி

ஒரு மரத்தைக் கொல்ல நிறைய நேரம் ஆகிறது
கத்தியின் எளிய குத்தலில் அது
முடிந்துவிடுவதில்லை
அது பூமியை மெல்லத் தின்று
அதிலிருந்து மேலெழும்பி
அதன் இறுகிய மேற்பரப்பை உண்டு
சூரிய ஒளி, காற்று,தண்ணீர் என
பல்லாண்டுகள் உறிஞ்சி
தொழுநோயாளிக்குரிய தன் மறைவை நீக்கி
இலைகளை முளைக்க விடுகிறது.
***
ஆக, வெட்டித் துண்டுபோடுவது
மட்டுமே பலித்துவிடுவதில்லை
மிதமிஞ்சிய வலியால் முடிந்துபோய்
விடுவதுமில்லை.
இரத்தம் பீறிடும் மரப்பட்டைப் புண் ஆறும்.
மண்ணையொட்டி சுருண்ட பச்சைக் கிளைகள்
முளைக்கும்.
அந்தச் சிறிய கிளைகளை அதன் போக்கில்
விட்டால்
அவை மீண்டும் பழைய அளவுக்கே விரியும்.
விடக் கூடாது
வேரை அடியோடு பிடுங்கிவிட வேண்டும்
நங்கூரம் பாய்ச்சி நிற்கும் பூமியிலிருந்து.
பூமிக்குகையிலிருந்து கயிற்றால்
கட்டி இழுக்க வேண்டும்; பிடுங்க வேண்டும்.
துண்டித்து அல்லது முழுமையாகப் பிடுங்கி
மரத்தின் பலத்தை அம்பலப்படுத்த வேண்டும்.
பூமியின் உள்ளே பல்லாணடுகள் மறைந்துகிடந்த,
உணர்வு மிகுந்த, வெண்மையும் ஈரமும் கொண்ட
அந்த மூல சக்தி-
***
கடைசியில் அந்தப் பொருள்
சூரிய ஒளியிலும் காற்றிலும் காய்ந்து
மூச்சுத் திணறி பழுப்பேறி இறுகி
முறுகி வாடி வதங்குகிற போது
***
அதன் கதை முடிந்து போகிறது.

ஜீவ் பட்டேல்- தமிழில்: பசுவய்யா.

## சிறப்புக் கவிதை

### மரங்கள்

ஒரு மரத்தைப் போன்ற அழகான கவிதையைப் பார்க்க
முடியாது என்று நினைக்கிறேன்.
பசித்த வாயைப் பூமியின் இனிய மார்பில் பதித்திருக்கும் மரம்.
தினம் முழுதும் கடவுளை நோக்கி
இலை நிறை கைகளை உயர்த்திப் பிரார்த்திக்கும் மரம்.
கோடையில் கூந்தலில் பறவைக் கூடுகள் அணிந்து குளிரில்
மார்பில் பனிக்கட்டி படிந்து
மழையுடன் நெருக்கமாய் வாழும் மரம்.
***
கவிதைகள் செய்வது என் போன்ற முட்டாள்கள்
கடவுள் ஒருவர்தான் மரம் செயத் தெரிந்தவர்.

ஜோய்ஸ் கில்மர்- தமிழில்: சுஜாதா.

### மரத்தின் வீடு

யார் சொன்னது,
மரம் தனக்கோர்
வீடு கட்டிக் கொள்ளவில்லையென்று?
***
தனது இலைகளாலும் கிளைகளாலும்
கொம்புகளின் அற்புத அமைப்புகளாலும்
தனக்குள்ளே மரம் தனக்கோர்
வீடு கட்டிக் கொண்டுள்ளது.
***
மழை புயல் வெயில் பனி திருடர்கள்
ஆகியவற்றிடமிருந்து நம்மைப்
பாதுகாக்கவே வீடு என அறிந்திருந்த
மனிதனைத் திகைக்க வைத்தது அதன் வீடு.
***
காலம், மரணம், வேதனை ஆகியவற்றிலிருந்து
தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும்
தன் மலர் காய் கனி மற்றும்
இலை எல்லாமுமான தனக்காகவே
அதுதனக்கோர் வீடு கட்டிக்கொண்டுள்ளது.

தேவதேவன்

# வீட்டு வைத்தியம்

☛ பெருங்காயத்தைச் சிறு சிறு துண்டுகளாக நறுக்கி சட்டியிலிட்டு வறுக்கவும். சிறிது உப்பையும் சட்டியிலிட்டு வறுத்தால் வடவட வெனப் பொரிந்து அடங்கும். இரண்டையும் தூளாக்கி இத்துடன் சுக்கு, திப்பிலி, ஓமம், மிளகு, சீரகம், கருஞ்சீரகம் தேவைக்கேற்ப கலந்து பொடி செய்து கலந்து கொள்ளவும். இரண்டையும் கலந்து வைத்துக் கொண்டு தினமும் காலையில் வெறும் வயிற்றில் இரண்டு தேக்கரண்டி ஒரு குவளை தண்ணீரில் போட்டுச் சூடாகக் காய்ச்சவும். அதில் பனை வெல்லத்தைக் கலந்து குடிக்கவும். பத்து நாள் குடித்தால் போதும், வாயு உபத்திரவம் குறையும்.



☛ கொத்த மல்லி 100 கிராம் எடுத்து வறுத்துப் பொடி செய்து கொள்ளவும். இது போல 50 கிராம் சீரகத்தைப் பொடி செய்து வைத்துக்கொண்டு தினம் ஒரு தேக்கரண்டி மோரில் கலந்து சாப்பிட்டால் வாயுக் கோளாறு குணமாகும்.

☛ வெந்தயத்தை முதல் நாள் இரவு ஊற வைத்து மறுநாள் காலையில் வெறும் வயிற்றில் மென்று தின்றுவிட்டு, வெந்நீர் குடித்தால் வாயுக் கோளாறு குறையும்.

☛ இஞ்சிச் சாறில் சிறிது உப்பைப் போட்டுக் கலக்கிக் குடித்துவிட்டு வெந்நீர் அருந்தினால் வாயு உபத்திரவம் அகலும்.

☛ பச்சைக் கொத்தமல்லிக் கீரையை நன்றாகக் கொதிக்க வைத்துச் சாறு இறங்கியவுடன் அதில் தேவையான அளவு உப்பைக் கலந்து இரவு படுக்கப் போகுமுன் ஒரு குவளை இளம் சூடாக அருந்தி வந்தால் வாயு உபத்திரவம், வயிறு உப்புசம், வாயுவால் ஏற்படும் ஏப்பம், மூச்சுத் திணறல் மட்டுப்படும்.

☛ வாயு உபத்திரவம் உள்ளவர்கள்-இளநீர், பதநீர் போன்றவற்றை அதிகமாகக் குடித்துவரலாம். நிச்சயம் பயன் கிடைக்கும்.

☛ வாயு உபத்திரவம் உள்ளவர்கள் எப்போதும் குளிர்ந்த நீரைத் தவிர்த்து வெந்நீரையே குடிக்கப் பயன்படுத்தி வர வேண்டும்.

# எடையைக் குறைக்க...

● பறவைக்கேற்ற சிறகு, சிறகுக்கேற்ற வலிமை. சிறகே சுமையானால் பறப்பது எப்படி? அதுபோல் ஒவ்வொருவருக்கும் உயரத்திற்கு ஏற்ப உடலின் எடை இருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான் அவர்களுக்கு ஒவ்வொரு நாளும் உற்சாகமாகக் கழிந்திடும்.

## ஆலோசனைகள்

⋆ எவ்வளவுதான் ஆசைப்பட்டாலும், முயற்சிபண்ணினாலும் இந்த உடல் எடை மட்டும் குறையவே மாட்டேங்கிறதே என்று அலுத்துக் கொள்கிறீர்களா? உடல் எடையைக் குறைக்க வேண்டும் என்று ஆசைப் பட்டிருப்பீர்கள். ஆனால் முயற்சி செய்திருக்க மாட்டீர்கள். சில எளிய வழி முறைகளையும் ஆலோசனைகளையும் செயற்படுத்தினால் போதும். உலக அழகி ஐஸ்வர்யா ராய் எனக்கு இரகசியமாய்ச் சொன்ன ரிப்ஸ்கள். என்னைப் போலவே நீங்களும் மற்றவர்களுக்குச் சொல்லுங்கள். சாப்பிடச் செல்வதற்கு முன்பாக எவ்வளவு தண்ணீர் குடிக்க முடியுமோ அந்த அளவு குடித்துவிட்டுச் சாப்பிடுங்கள். நிச்சயமாக வழக்கமாகச் சாப்பிடுவதை விடக் குறைவாகவே சாப்பிடுவீர்கள்.

ஒவ்வொரு ஆணும், பெண்ணும் துடிப்புடன் செயற்பட நாளொன்றுக்கு 1800 கலோரி சக்தியே போதுமானது. எனவே அந்த அளவு உணவையே சாப்பிடுங்கள். சாப்பிடுகின்ற கலோரி அதிகமாகி, அந்த சக்தியைப் பிரயோகிக்க வழியில்லாமல் வீட்டில் இருந்தால் நிச்சயம் உடல் எடை கூடவே செய்யும்.

பெண்கள் எக் காரணம் கொண்டும் மதிய வேளைகளில் தூங்கக் கூடாது. உண்ட களை தொண்டனுக்கும் உண்டு என்று நீங்கள் தூக்கம் போட்டால், உடல் எடை கிடுகிடு வெனக் கூடிப் போகும். சாப்பிட்டவுடன் 15 நிமிடம் கண்களை மூடி ஓய்வெடுக்கலாம், தவறில்லை. அதற்கு மேல் படுத்திருக்கக் கூடாது. பாட்டுக் கேட்பது, வீட்டை அழகுபடுத்துவது, தோட்டப் பராமரிப்பு என்று சிறு சிறு வேலைகளைச் செய்வது நல்லது.

சாப்பிடும் உணவு வகைகளின் கலோரி அதிகமாக இருந்தால், நடத்தல், உடற் பயிற்சிகள் மூலமாகக் கூடுதலான கலோரியினால் ஏற்பட்ட உடற் சக்தி பிரயோகிக்கப் பட வேண்டும்.

ஒரு இட்லி 100 கலோரி, ஒரு உருளைக்கிழங்கு 200 கலோரி. 7000 கலோரி உடற் சக்தியைப் பிரயோகித்தால்தான் 1 கிலோ எடை குறையும். எனவே நாம் சாப்பிடும் ஐஸ்கிறீம், வெண்ணெய், பால் இவற்றையெல்லாம் சமன் செய்யப்பட்ட அளவில் சாப்பிட வேண்டும்.

உடல் எடையைக் குறைக்க விரும்புபவர்கள் ஒரே சமயத்தில் அதிகம் எடையைக் குறைக்க வேண்டும் என்று ஆசைப்பட்டுப் பட்டினி கிடக்கக் கூடாது. ஒரு வேளை சாப்பிடாமல் இருந்தீர்கள் என்றால், அடுத்த வேளை வட்டியும் முதலுமாக அதிகம் சாப்பிட்டு உடல் எடை கூடுவதற்கு வழி ஏற்படுத்தி விடுவீர்கள்.

கவலை, சோகம், தளர்ந்த மன நிலையில் இருக்கும்போது அதிகம் சாப்பிடத் தோன்றும். அந்தப் பொழுதுகளிலும் கவனமாக இருக்க வேண்டும்.



ஒரு நாளைக்கு மூன்று வேளை சாப்பிடுவதை ஆறு வேளையாக மாற்றிக் கொள்ளுங்கள். உடல் எடையைக் குறைக்க வழி கேட்டால் கூடுவதற்கு வழி சொல்வதாக நினைக்கிறீர்களா? உதாரணமாக காலையில் 8 மணிக்கு நீங்கள் 4 இட்லி, சட்னி, சாம்பார் சாப்பிடுபவராக இருந்தால் 2 இட்லி மட்டும் எடுத்துக் கொள்ளுங்கள். 2 மணி நேரம் கழித்து மீதமுள்ள 2 இட்லியைச் சாப்பிடுங்கள். ஒரே தடவையாகச் சாப்பிட்டால்தான் நன்றாக இருக்கும் என்றெல்லாம் நினைக்காதீர்கள். இரண்டாவது முறை சாப்பிடும் போது பிடிக்கவில்லை என்றால், ஏதேனும் ஒரு பழ வகை, அவித்த காய்கறிகளைச் சாப்பிடுங்கள். காய்கறிகளையும் பழங்களையும் அதிகமாகச் சாப்பிடுங்கள்.

⋆ சாப்பிடும்போது சின்னச் சின்னப் பகுதிகளாக எடுத்து நன்றாக மென்று சாப்பிடுங்கள். இரண்டு இட்லிகளை நான்கு துண்டுகளாக்கிச் சாப்பிட்டு விடாதீர்கள். வயிறு மற்றும் இடுப்புப் பகுதிக்குரிய உடற் பயிற்சிகளை எப்போதெல்லாம் முடியுமோ அப்போதெல்லாம் செய்திடுங்கள். மேலும் வயிற்றை உட்புறமாக இழுத்துச் சில விநாடிகளுக்குப் பிறகு தளர்த்தி விடுங்கள்.

இந்த வழி முறைகளையெல்லாம் ஒரு வாரம் 15 நாள் மட்டும் செய்தால் போதாது. ஸ்லிம் -ஆக இருக்க வேண்டும் என்று எவ்வளவு நாள் நினைக்கிறீர்களோ அவ்வளவு நாளும் செய்ய வேண்டும்.

# பக்கவாதம் துரத்தும் தூதுவளை



**நா**ம் மூலிகை மணி வாசகப்படி பக்கவாதம் துரத்தும் தூதுவளையின் தன்மையை அறியலாம்.

மூளையிலுள்ள இரத்தக் குழாயில் அடைப்பு அல்லது இரத்தக் கசிவு பக்கவாத நோய்க்குக் காரணமாகும்.

அதிக இரத்தக் கொதிப்பு, நீரிழிவு, அதிகக் கொழுப்பு உள்ளோர் இந் நோய்க்கு உரிய மூலிகை மருந்துகளைச் சாப்பிட்டு, நோயைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொண்டால் பக்கவாதம் தாக்காமல் தடுத்துக் கொள்ளலாம்.

மூளையில் வலது புறத்தில் இரத்த ஓட்டத் தடை ஏற்படும்போது உடம்பின் இடது பாகமும், மூளையின் இடது புறத்தில் இரத்த ஓட்டத் தடை ஏற்படும்போது உடலின் வலது பாகமும் செயலிழந்து போகிறது. மூலிகைத் தைலங்களை செயலிழந்த கை-கால் பகுதிகளில் தடவி தினசரி காலை, மாலை பத்துத் தடவைகள் நீட்டி மடக்குதல் அவசியமாகும். ■

செல்வாஸின் ↘
சல்வார் பரிசுப் போட்டி
நவநாகரீக மங்கையர்
தரமான சல்வார்களுக்கு
தலைநகரில் நாடும் ஒரே இடம்
SELVAS
No. 4, Nelson Place
Wellawatta, Colombo-06. Tel: 552328
மகளிர் மட்டும் : மகளிர் மட்டும்



⋆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே சல்வார் பரிசு வழங்கப்படும்.
⋆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)
⋆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

செல்வாஸின் வாரம் ஒரு சல்வார்
பெயர்:.........................
முகவரி:.........................
.........................
தொழில்:.........................
உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப்படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.


கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 22-02-2003
அனுப்பவேண்டிய முகவரி:- 'செல்வாஸின் வாரம் ஒரு சல்வார்', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

இந்த வாரம் யாருக்கு சல்வார்?
ரத்தோட்ட வாசகிக்கு அதிஷ்டம்!
இவ்வாரம் சல்வார் பரிசுபெறும் வாசகி இவர்தான் ☞
எஸ். சுமதி
இல.122, மெல்லகொல்ல, ரத்தோட்ட.
பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.
அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!
இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.



மாடனைக் காடனை வேடனைப் போற்றி
மயக்கும் மதியிலிகாள்!- எத
னூடுமநின் றோங்கும்அறிவொன்றே தெய்வமென்
றோதி யறியீரோ?

சுப்பிரமணிய பாரதியார்–



## பாப்பா முரசு சிறுகதை

# போதி மரம்

**சி**வாவும் ஸ்வாதியும் நண்பர்கள். ஒரே வகுப்பில் படிப்பவர்கள். படிப்பில் இருவருக்குள்ளும் ஆரோக்கியமான போட்டி எப்போதும் இருக்கும். அன்று பள்ளியில் ஆண்டு விழா முடிந்து இவரும் வீடு திரும்பினர். ஸ்வாதியின் வீட்டைத் தாண்டித்தான் சிவாவின் வீட்டுக்குச் செல்ல வேண்டும்.

"உள்ள வாயேன் சிவா... கொஞ்ச நேரம் இருந்துட்டுப் போகலாம்..." என்று அழைத்தாள் ஸ்வாதி.

உள்ளே நுழைந்து முன்னறையில் அமர்ந்தான் சிவா.

"கொஞ்சம் இரு. இதோ வந்திடறேன்" என்று கூறிவிட்டு, வீட்டுக்குள் சென்றாள் ஸ்வாதி.

ஊரிலிருந்து ஸ்வாதியின் மாமா ராஜன் வந்திருந்தார். இவளைப் பார்த்ததும் மிக உற்சாகமானார்.

"ஹாய்... ஸ்வாதி குட்டி! எப்படி இருக்கே? ஆண்டு விழா எல்லாம் நல்லா நடந்து முடிஞ்சதா?" என்று கேட்டார்.

"நல்லா நடந்தது மாமா.... என் ஃப்ரெண்ட் சிவாவும் என் கூட வந்திருக்கான்... முன்னே உக்காந்திருக்கான்" என்றாள் ஸ்வாதி.

"அப்டியா?" என்றவர், தனது பையைத் திறந்து இரண்டு அழகிய வண்ணப் பேனாக்களை எடுத்து அவளிடம் கொடுத்தார்.

"இது வெளிநாட்டிலிருந்து என் நண்பன் கொண்டு வந்தது... சிவாவிடம் ஒன்றைக் கொடுத்துவிட்டு, நீ ஒன்றை வைத்துக் கொள்" என்றார்.

"தேங்க் யூ மாமா" என்று கூறி, அறையை விட்டு வெளியே வந்த ஸ்வாதிக்கு, சிவாவிடம் பேனாவைக் கொடுக்க மனமில்லை. 'எவ்வளவோ அழகாயிருக்கு? எதுக்கு அவனிடம் தரணும்? நாமே வச்சுக்கலாம்' என்று எண்ணி, இரண்டையும் தன் பைக்குள் போட்டுக் கொண்டாள்.

மறுநாள் பள்ளியில் நாட்டு நலப் பணித் திட்டத்தில் சேர்ந்திருந்த மாணவர்களை எல்லாம் சேரிக்கு அழைத்துச் சென்றனர். அந்தப் பகுதிக் குழந்தைகளுக்குக் கொடுப்பதற்கென்று நோட்புக், சிலேட், பென்சில் எல்லாம் கொண்டு சென்றனர்.

இவர்களது பள்ளிப் பேருந்தைக் கண்டதும் சேரிக் குழந்தைகள் ஓடி வந்தனர்.

ஒவ்வொரு மாணவ, மாணவியிடமும் ஆசிரியைகள் ஒவ்வொரு பொருளைக் கொடுத்து, அக் குழந்தைகளுக்கு விநியோகிக்கச் சொன்னார்கள்.

ஸ்வாதியிடம் ஒரு கட்டு பென்சில்களைக் கொடுத்த ஆசிரியை, "ஸ்வாதி! அங்கே நின்னுட்டிருக்க குழந்தைங்கிட்ட, இந்த பென்சில்களை ஒண்ணொண்ணாக் குடும்மா" என்றார்.

ஸ்வாதியும் அவ்வாறே கொடுத்தாள். வாங்கிக் கொண்ட குழந்தைகளுக்கு ஏகப்பட்ட மகிழ்ச்சி.

குடிசை கூட இல்லாமல் தெரு ஓரத்தில், கிழிந்த, அழுக்குச் சட்டையுடன் ஒரு சிறுவன் நின்று கொண்டிருந்தான்.

ஸ்வாதி அவனருகில் சென்று ஒரு பென்சிலை நீட்டினாள். அதை வாங்கிக் கொண்ட அந்தப் பையன், உடனே கல்லை வைத்து அந்த பென்சிலை உடைத்தான்.

அதிர்ந்து போன ஸ்வாதி, "ஏய்... ஏய்... என்ன பண்றே? ஏன் புதுப் பென்சிலை உடைக்கிறே?" என்று பதறினாள்.

"என் கூடப் பால்வாடில படிக்கிற காத்தாயிக்கு உடம்புக்கு சுகமில்ல... தர்மாஸ்பத்திரியில கிடக்குது.... நாளைக்குத்தான் அது வரும். அதுக்குக் குடுக்காம நான் மட்டும் எதையும் வச்சுக்க மாட்டேன்... அதனாலதான் பென்சிலை உடைச்சிட்டேன்... இந்தப் பாதி காத்தாயிக்கு...." என்றான் அந்தச் சிறுவன்.

இந்தச் சூழ்நிலையிலும் அவனுக்கு இருக்கும் ஈகைக் குணத்தையும் நட்புணர்வையும் கண்டு ஸ்வாதிக்கு ஆச்சரியம்.

அவளுக்கு முதல் நாள் நடந்தது நினைவுக்கு வந்தது. 'ச்சே! பக்கத்திலேயே இருந்த சிவாவுக்குக் கொடுக்க மனசில்லாம பேனாவை ஒளிச்சு வச்ச நாம எங்கே? எங்கேயோ ஆஸ்பத்திரியில இருக்கிற தோழிக்காக புத்தம் புது பென்சிலை உடைக்கிற இவன் எங்கே?'- குற்ற உணர்விலும் வெட்கத்திலும் அவள் தலை கவிழ்ந்தது.

அந்தச் சிறுவனை அழைத்தாள். "தம்பி, உன் பேரென்ன?" என்றாள்.

"புத்தன்" என்றான் அவன்.

"புத்தா, இந்தா இன்னும் ரெண்டு பென்சில்... ஒண்ணு உனக்கு; இன்னொன்னு உன் காத்தாயிக்கு!" என்றாள்.

புத்தனுக்கு வாயெல்லாம் பல்.

உடனே சிவாவை நோக்கி ஓடினாள்.

"சிவா! என் மாமா அழகான பேனா உனக்கு அன்பளிப்பா கொடுத்திருக்கார்... சாயந்தரம் வீட்டுக்கு வரும் போது தர்றேன்" என்றாள். இப்போதுதான் அவளுக்கு மனசு நிம்மதியாக இருந்தது.

'புத்தன்' தான் தனக்கு 'போதி மரம்' என்ற உண்மையை உணர்ந்தாள்.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **01.03.2003.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **485**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 482

பரிசுக்குரியவர்:
**முருகவேல் துஷ்யந்தன்,**
இல.27, அலக்ஸாந்ரா வீதி, வெள்ளவத்தை, கொழும்பு-06.

### பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| **நி. கார்த்திபன்,** இல. 42, வவுனியா. | **எஸ். காயத்ரி,** 330, துலொன்கயஸ, எலகந்த, ஹெந்தல. |
| **எம். அஸ்மிறா,** 69, டீன்ஸ் வீதி, அட்டாளைச்சேனை-10. | **அக்ஷயன் சரத்சந்திரன்,** 19, நொத்தாரிஸ் ஒழுங்கை, மட்டக்களப்பு. |
| **நி. நிலோஜி,** 364, தேக்கவத்தை, வவுனியா. | **க. அபிலாஷினி,** புனித பிரிஜட் கன்னியர் மடம், கொழும்பு-07. |
| **எம்.எஸ். துசான்,** தருமதூத்த கல்லூரி, பதுளை. | **முஹம்மது அரபாத்,** 357/ஏ12, ஹிறும்புரை வீதி, தங்கெதரை, காலி. |
| **முஸ்னா றஷிகா,** 199/சி, புதிய வீதி, கல்முனை-07. | **ஜெனனி ஜெய்சங்கர்,** ஒ.கே.ஐ. சர்வதேச பாடசாலை, வத்தளை. |

## விடுகதைகளும் விடைகளும்

1. காட்டுக்குள் கரும் பன்றி; கிள்ளி எடுத்தால் நசுக்கலாம். அது என்ன?
2. காலையில் மைதானம் மாலையில் மலர்க்கூட்டம் அது என்ன?
3. அவர் வருவார் இவர் போவார் இவர் வருவார் அவர் போவார். யார் அவர்கள்?
4. சூரியன் வந்தால் விரைந்தழைப்பார்; வெள்ளையன் வந்தால் விரைந்தோட்டுவார். அவன் யார்?
5. பச்சைப் பாம்பு! படமெடுக்காத நல்ல பாம்பு. அது என்ன?
6. ஒட்டுத் திண்ணையில பட்டுக்குட்டை காயுது. அது என்ன?
7. ஆள் நடக்க முடியாத சாலையில் அவன் நடந்து போவான். அவை என்ன?
8. ஓடிவந்து உயிர் காப்பான் ஒருவர் கண்ணுக்கும் தெரியாது. அவன் யார்?
9. வழி தெரிந்த ஜோடிக்கு வாசல் தாண்டத் தெரியாது. அது என்ன?
10. காய்ந்து வந்தால் தேய்ந்து போவான். அது என்ன?

### விடைகள்

1. தலைப் பேன்
2. வானம்-நட்சத்திரங்கள்
3. இரவு-பகல் 4. விளக்கு
5. புடலங்காய் 6. மூக்குத்தி
7. வகிடு-பேன் 8. காற்று
9. செருப்பு
10. மிளகாய்-தூள்.

## அதிசய உலகம்

### தாடி கழுகு!



படத்தில் இருக்கும் பறவையின் பெயர் லெம்மர் கெய்ர். தாடிக் கழுகு என்று செல்லமாகவும் அழைப்பர்.

எலும்பு மஜ்ஜைதான் இவரது உணவு. அதை எடுத்துச் சாப்பிடுவதற்கு ஏற்றார் போல் இவரது அலகு நன்கு நீளமாக ஒல்லியா இருக்கு. கரண்டி போல் நாக்கைப் பயன்படுத்தி எலும்பு மஜ்ஜையை எடுத்துச் சாப்பிடுவார். சில நேரங்களில் எலும்பை கடிக்க முடியவில்லை என்றால் பாறைகளின் மேலே பறந்து அங்கிருந்து எலும்பை பாறையின் மேல் போட்டு உடைத்துச் சாப்பிடுவார். இதே முறையைப் பயன்படுத்தி ஆமைகளைப் பிடித்தும் சாப்பிடுவார்.

### பேப்பர் கூடு!



**பெ**ண் குளவிகள்தான் கூட்டைக் கட்டும். இதற்கு ஏறக்குறைய ஒரு மாதமாகும்! ஒரு வகைக் குளவி இருக்கு... அது எப்படிக் கூடு கட்டும் தெரியுமா? மெல்லிய தண்டுடன் இலைகள் கொண்ட பேன்கல் எனப்படும் ஒரு வகை மரத்தின் இலைகளை மென்று சின்னச் சின்னத் துண்டுகளாக்கி தன் எச்சில் கொண்டு அழகா ஒட்டி கூடு கட்டும்.

இன்னொரு வகைக் குளவி இருக்கு. அது என்ன பண்ணும் தெரியுமா? உளுத்துப் போன மரத் துண்டுகளை நன்கு கடித்து மென்று பேப்பர் கூழ் போலாக்கி அதைக் கொண்டு கூடு கட்டும். அத்துடன் எறும்புகள் வீட்டிற்குள் நுழைந்து விடாதபடி பல பாதுகாப்பு வசதிகளையும் இந்தக் கூழைக் கொண்டே செய்துவிடும்.

இவ்வளவு வேலையையும் செய்து முடிப்பது யாருங்கிறீங்க பெண் குளவிகள்தான்!

## TOP TEN


**இவ்வாரம்:-** அடர்த்தியான மக்கள் பரம்பலைக்கொண்ட 10 நகரங்கள்

| நகரம் / நாடு | சனத்தொகை | |
|---|---|---|
| | சதுர கிலோ மீற்றர் | சதுர மைல் |
| 1. ஹொங்கொங், சீனா | 98,053 | 253,957 |
| 2. லாகோஸ், நைஜீரியா | 67,561 | 174,982 |
| 3. டாக்கா, பங்களாதேஷ் | 63,900 | 165,500 |
| 4. ஜாகர்த்தா, இந்தோனேசியா | 56,650 | 146,724 |
| 5. மும்பாய், இந்தியா | 54,997 | 142,442 |
| 6. அஹமதாபாத், இந்தியா | 50676 | 131,250 |
| 7. ஹோசை மில் நகரம், (சைகோன்) வியாட்னாம் | 50,617 | 131,097 |
| 8. சென்யாங், சீனா | 44,125 | 114,282 |
| 9. பெங்களூர், இந்தியா | 43,583 | 112,880 |
| 10. கெய்ரோ, எகிப்து | 41,413 | 107,260 |

குறிப்பு:- 2 மில்லியனுக்கு மேற்பட்ட சனத்தொகையைக் கொண்ட நகரங்கள் மட்டுமே உள்ளடக்கப்பட்டுள்ளன.

## அறிவுத் தேடல்

சென்ற வாரப் புதிரின் விடை:
A = 85
B = 8
C = 145




## இந்த வாரப் புதிர்

சதுரத்தின் பக்க நீளம் 14 Cm ஆயின் நிழற்றிய பகுதியின் பரப்பளவைக் கண்டு பிடியுங்கள்.

# "அண்ணன் என்பவன்..."



அ.மு.அனஸ்

"**எ**ல்லாம் சரி இனிமேல் நோ புரொப்ளம்."

"......"

"என்னப்பா இது. எவ்வளவு சந்தோசமான விசயத்தைச் சொல்றன். முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு..."

எதிரே நின்ற நண்பனை மீண்டும் முகத்திற்கு நேரே ஆழமாகவே அவதானித்து

"உன்னால் பெற்றுக்கொள்ளவே முடியாததை எவ்வளவு நாசூக்காகப் பேசி வென்று வந்திருக்கேன். பிறகும் உனக்குத் தேவைப்பட்டால் தாராளமாக பண உதவிகளைச் செய்து கொள்ளலாம். அதற்கும் உத்தரவாதம் பெற்றுள்ளேன். முதல்ல இந்த விருப்புக் கடிதத்தை புறக்டரிடம் கொடுத்தாக வேண்டும். பிறகு நம்ம ஏற்பாட்டின்படி புறப்பட வேண்டியது தான்." ஜாடையோடு கண்காட்டி புன்னகைத்துக் கொண்டான்.

"......"

"மச்சான் வாற ஞாயிற்றுக்கிழமை நாம வாறதாக தகவல் சொல்லிவிடவா? பெண் வீட்டுக்காரர்களுக்கும் நல்ல விருப்பம் என்றும் கேள்விப்பட்டுள்ளேன். இவ மனசு மாறி எதிர்ப்புக் கடிதம் கொடுப்பதற்கு முன்னதாக வழக்கைப் போட்டுவிட்டால் சிக்கல் வராது. மூனு நாலு மாசத்திற்குப் பின் மற்ற விசயங்களை வைத்துக் கொள்ளலாம்."

"இல்லை வேண்டாம். இப்போ ஐடியா ஏதுமில்லை."

வார்த்தைகளைக் கேட்டதும் தடுமாறிப் போனான். பரபரப்புடன் எதிரே நின்றவனை முகத்திற்கு நேரே ஏறிட்டு

"என்னடா திடீரென்று குண்டைத் தூக்கிப் போடுறே...?"

"இல்லை. எனக்கு இதில் இஷ்டமில்லை."

"என்ன இஷ்டமில்லையா... நல்லா இருக்கு நீ பேசுறது? ஆரம்பத்தில எவ்வளவோ புத்திமதிகளைச் சொல்லி திருத்த முற்பட்ட என்னையும் வீணே குழப்பி உன் பக்கத்திற்கு இழுத்து நானும் ஏகப்பட்ட மனக் கஷ்டத்துடன் உன் நலத்திற்காக மாத்திரம் இறங்கி காரியத்தையும் முடிச்சுக்கொண்டு வந்திருக்கின்ற நேரத்தில் இப்படி... என்னடா இது விளையாட்டு...?"

"சொறிடா! விளக்கம் எதுவும் கேட்காதே. எனக்கு இஷ்டமில்லை."

"விசர் கதை கதைக்கிறாய். நீயாகவே எல்லாவற்றையும் தொடங்கிப் போட்டு... உன்னோட திடீர் முடிவால நான்தான் எல்லாத்திற்கும் காரணம் என்ற பழியை ஏற்கவேண்டி உள்ளது. இனிமேல் சம்பந்தப்பட்டவர்களின் முகத்தில எப்படி...?"

"இனிமேல் எது வந்தாலும் சமாளிச்சு தீர்த்துக்கொள்ள வேண்டும் என்ற உறுதியான உணர்வில்தான் இந்த முடிவு.".

"புரியவில்லையே...?"

"பிரச்சனைகள் தோன்றும்போது விட்டுக் கொடுக்காமல் நானும் வாதாடுவதனால்தான் இவ்வளவு பிரச்சனைகளும் சிக்கல்களும். சில விசயங்களில் நான் பொறுமையாக இருந்திருந்தால் குடும்பத்தில் பிரச்சனைகள் வந்திருக்காது. ஒரு முடிவோடுதான்..."

மேற்கொண்டு என்ன பேசுவதென்று தடுமாற்றங்கள் இருவருக்கும். திருமணம் முடித்தது தொடக்கம் சந்தோசமாக நண்பன் வாழ்வதைக் கண்டு திருப்தி கொண்டவன், ஒரு வருடகாலமாக குடும்பத்திற்குள் ஏற்பட்டுள்ள சிக்கல்களால் ஏற்பட்ட இக்கட்டான நிலைமை, நண்பனின் பரிதாப வாழ்வு, மீண்டும் எப்படியாவது சந்தோசமாக வாழ வேண்டும் என்ற கரிசனை சகலதையும் நட்புக்காக ஏற்றுக்கொண்டு களத்தில் இறங்கி வெற்றியுடன் கரை கண்டுள்ள நேரத்தில் இப்படி....

மேற்கொண்டு எடுத்த முயற்சிகளைத் துரிதப்படுத்திக் காரியத்தை மேற்கொள்ளச் சங்கடமாக இருந்தாலும், பல காரியங்களையும் செய்தாகிவிட்டமையினால் சம்பந்தப்பட்டவர்களுக்கு எவ்வாறு முகம் கொடுப்பது என்று முற்றிலும் மாறுபட்ட நிலைமை. நட்பின் விளைவால் ஏற்பட்ட ஆதங்கத்தை சமாளிப்பது எப்படி...?

"மச்சான்! உன்னைத் தொந்தரவு செய்றதாக நினைக்காதே. முதல்ல நீ சொன்னபோது அதெல்லாம் சரிப்பட்டு வராது, சமாளித்துக் கொண்டு வாழப் பார் என்று புத்தி சொன்ன என்னையே குழப்பியவன் நீதான். உன்பக்க நியாயங்களைப் புரிந்து கொண்டுதான் உனக்காக எல்லாவற்றிலும் கால் வைத்தேன். அந்த பெண்ணும் இரண்டாம் தாரமாகச் செய்வதற்கும் சம்மதித்திருக்கு. சரி பரவாயில்லை. நான் கவனித்துக் கொள்கின்றேன். ஆனால், நீ பொறுமைசாலியில்லை. இனிமேல் சமாளித்துக் கொண்டு வாழப்போறதாகச் சொல்றதெல்லாம் நம்பக் கூடியதாக இல்லை. இதில வேறு ஏதோ வில்லங்கம் இருக்கு. பிளீஸ் சொல்லுடா..." சோகமாயிருந்த முகத்திலிருந்து தொடராகக் கண்ணீர் கோடிட்டது.

"அழுதது போதும். எதையும் மறைக்காமல் நிஜத்தைச் சொல்லு. நல்லதாகவே இனிமேல் சிந்திப்போம்."

அவன் எதையோ சொல்ல எத்தனித்த பின்னர், தடுமாற்றத்துடன் தயங்கிக்கொள்வதை அகத்திலிருந்து பூரணமாகவே அறிந்து கொண்டான்.

"நீ கையொப்பம் வாங்கிறதற்கு ரெண்டு மணித்தியாலயம் முன்னாடி நான் கலாவைச் சந்தித்தேன்."

"அடப்பாவி பெண்சாதியைச் சந்திப்பதேயில்லை என்று வாக்குறுதி சொன்னியே."

"அப்படித்தான். ஒரு விசயம் கேள்விப்பட்டு உண்மையை அறிந்து கொள்வதற்காகத்தான் நான் போயிருந்தேன்."

"என்ன விசயம்...?"

"பட்டென்று வெளியிலே சொல்லிவிட முடியாத அசிங்கம் அது. நடந்தால் அவமானம் தாங்காது தற்கொலைதான் செய்ய வேண்டும். அவ்வளவு மோசமானது."

"என்னடா குழப்பிறே. சரி கேள்விப்பட்ட விசயத்தைச் சொல்லு."

"அவ இன்னொரு கல்யாணத்திற்குத் தயாராக இருக்கா."

மனதிற்குள் சற்று உறுத்தலாக இருந்தாலும் மனிதாபிமான அடிப்படையில் நியாயமாகவே தென்பட்டது.

"அவ யாரை முடிக்க தீர்மானித்திருக்கா தெரியுமா...?"

ஏகப்பட்ட ஆச்சரியங்களுடன் நண்பனின் முகத்தை ஏறிட்டான்.

"என்னோட அண்ணனை."

காதில் வீழ்ந்த வார்த்தைகளைச் சகித்துக் கொள்ளவே முடியவில்லை. என்ன காலம் இது? குடும்பத்திற்கு உழைத்துக்கொடுக்க வேண்டும் என்று தன் இளமைக் கால முழு வாழ்வையும் தியாகம் செய்தவர், இப்போ அதுவும் இவ்வாறு...

நண்பனோட அவசரப் புத்தி சில நேரம் தடுமாற்றத்தை ஏற்படுத்தியிருக்கலாம் என்ற எதிர்பார்ப்பும் அவனுக்குள். அவ்வளவு சுத்தமானவர் அண்ணன்.

"நம்பவே முடியவில்லை. பூரணமாக விசாரித்து தெரிந்து கொண்டாயா...?"

"வெட்கத்தை விட்டு அண்ணனிடமே கேட்டேன். முகத்திற்கு நேரே பளிச்சென்று சொல்லிப் போட்டார். இருந்தும் நம்பாமல் சந்தேகத்தில தான் கலாகிட்ட போனேன்."

"......"

"அப்படியென்று ஏதும் நடந்தால் பிறகு நான் வாழ்றதில அர்த்தமில்லை. அதுதான் இனிமேல் எது நடந்தாலும் பொறுமையாக சமாளித்துக்கொண்டு..."

"குட்! நல்ல முடிவு. தெரிந்துகொண்டதை ரகசியமாகவே வைத்துக் கொள்வோம். நீயும் இனிமேல் கோபப்படாமல் விட்டுக்கொடுப்புடன் வாழப் பார். காலப் போக்கில் எல்லாம் மறந்து சகஜமாகிடும்."

முடிவுகள் சந்தோசமாக இருந்தாலும் ஏற்பட்ட விளைவுகள் மனதை வாட்டிக் கொண்டிருக்கும் சோகத்துடன் இருவரும் அப்போது பிரிந்து சென்றனர்.

"தம்பி வந்தாரா...?"

"வந்தார். விசயத்தை அப்படியே நா கூசாமல் சொன்னேன். முகத்தைத் தொங்கப்போட்டுக் கொண்டு போயிட்டார். ஆனால் ரமேஸ்கிட்ட விவாகரத்துக்கு விருப்பம் தெரிவித்துக் கடிதம் கொடுத்துவிட்டேன். அதான் பயமாக இருக்கு. அந்தக் கடிதத்தை வைத்து..."

"எதுவும் நடக்காது. நிச்சயம் எதுவும் நடக்காது. என் தம்பி கோபக்காரனா இருந்தாலும் மான அவமானத்திற்கு பயப்படுபவன். அவமானத்தோட வாழ்றதை விட சேர்ந்து வாழ்வது உத்தமம் என்று நிச்சயம் திரும்பிவருவான் பாரேன்."

"அநியாயமாக நீங்க கெட்ட பெயரை வாங்கிக் கொண்டு..."

"என்னோட காலம் இன்னும் கொஞ்சம்தான். சந்தோசமாக சமாளித்துக் கொண்டு வாழப் பழகிக்கொள்ளுங்க. முதல்ல விட்டுக்கொடுப்பவர்தான் உயர்ந்தவர். அந்தப் பெருமையைப் பெற்றுக்கொண்டு வாழுங்கள். பின்னர் எந்த நிலை வந்தாலும் இது நாம சேர்ந்து போட்ட திட்டம் என்று தெரியவே கூடாது. வழிந்த கண்ணீரை அழுத்தமாகவே துடைத்துக்கொண்டு வீட்டைவிட்டு வெளியேறிச் சென்று கொண்டிருப்பதைப் பரிவு கலந்த பாசத்தோடு அவதானித்துக் கொண்டிருந்தாள். ◘

---

# துன்பத்தால் இன்பம்!

மெய்யன் நட்ராஜ்
*தோஹா-கத்தார்*

தன் ஐந்து வயது மகனை அருகில் இருக்கும் பாலர் பாடசாலையில் விட்டுவிட்டு வேகமாக வீட்டுக்கு வந்தாள் உமா. கதவைத் திறந்து உள்ளே சென்று கைப்பையை எடுத்துப் பார்த்தாள். அதில் நகையை அடைவு வைத்து வாங்கிய பணம் மூவாயிரத்து ஐநூறும் சில்லறையும் அப்படியே இருந்தது. நேரத்தைப் பார்த்தாள். எட்டு மணியை நெருங்கிக் கொண்டிருந்தது 'ஒரு ஆட்டோ பிடித்தால் சீக்கிரமாய் போய்விடலாம்' என எண்ணிக் கொண்டு மீண்டும் அவசர அவசரமாய் வீட்டுக் கதவை அடைத்துப் பூட்டிவிட்டு வாசலுக்கு வந்தாள். வீதியில் வந்த ஆட்டோவை மறித்து ஏறி அமர்ந்து நீதிமன்றத்திற்குப் போகும்படி சொன்னாள்.

இன்றோடு சங்கரைக் கொண்டு போய் நாலு நாள் ஆகிவிட்டது. 'பாவம் எப்படி இருக்காரோ, என்ன சாப்பிட்டாரோ' என்று நினைத்தபோது கலங்கிய கண்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை. கண்ணைத் துடைத்ததைப் பக்கக் கண்ணாடியில் பார்த்துவிட்ட ஆட்டோ டிரைவர் "என்னம்மா ஏன் அழுகிறீங்க. ஏதாச்சும் பிரச்சினையா?" என்றார்.

"ஒன்றும் இல்லை. நீங்க போங்க" என்றவளை "அப்ப கோர்ட்டுக்கு எதுக்குப் போறீங்க?" என்றதும் பதில் சொல்ல முடியாமல் இருக்கவில்லை.

"எங்க வீட்டுக்காரரை பிடிச்சுக் கொண்டு போயிட்டாங்க. இன்றைக்கு கோர்ட்டுக்கு கொண்டு வருவாங்க. பணத்தைக் கட்டி அவரை வெளியே கொண்டு வரணும்"

"அதானே பார்த்தேன். உங்களைப் பார்த்தா கோர்ட் கேஸ்ஸுன்னு அலையிறமாதிரி தெரியல. என்னம்மா செய்யிறது. கையிலே சாப்பாட்டுச் சாமான் கொண்டு போனாலும் பிடிச்சிட்டுப் போற காலம் இது." என்று ஏதோ ஆறுதலாய் பேசிக் கொண்டு வந்தவன் கோர்ட் வாசலில் இறக்கி விட்டுப் போனான்.

உமாவின் கணவர் சங்கர் அரச அலுவலகம் ஒன்றில் சாதாரண குமாஸ்தா. சின்னத் தொழில் என்றாலும் அரசாங்க உத்தியோகம் என்பதால் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான். தன் தகுதிக்கேற்றாற் போல் உமாவை மிகவும் எளிமையான முறையில் மணம் முடித்து கொழும்பில் ஒரு வாடகை வீட்டில் வாழ்க்கை நடாத்தி வருகிறார். வெள்ளிக்கிழமை வேலை முடிந்து வீட்டிற்குத் திரும்பியவரை வீதியில் காவலுக்கு நின்ற பொலிஸார் சோதனையிட்டு, கையில் அடையாள அட்டை, பொலிஸ் பதிவு, தொழில் செய்யும் இடத்தின் அடையாள அட்டை என எல்லாம் இருந்த போதும் யுத்தப் பிரதேசத்திற்குச் சொந்தக்காரன் என்னும் ஒரே காரணத்திற்காய் சந்தேகத்தின் பேரில் கைதாக்கிவிட்டனர்.

எப்போதும் ஐந்து மணிக்கெல்லாம் வீடு திரும்பும் சங்கர் மணி ஏழைத் தாண்டியும் வராமல் இருக்கவே கலக்கத்தோடு வீதியை எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தாள் உமா. அப்போது அவள் வீட்டிற்கு இரண்டு மூன்று வீடு தாண்டி வாழும் ஒருவர் வந்து "உங்க வீட்டுக்காரரை பொலிஸில் கொண்டு போய்விட்டார்கள்" என்றார்.

"என்ன சொல்றீங்க."

"ஆமாங்க. நான் என் கண்ணால பார்த்தேன். நீங்க யாரையாச்சும் அனுப்பி விசாரித்துப் பாருங்க." சொல்லிவிட்டு அவர் போக, துடித்துப் போனாள் உமா. அதன் பின் பக்கத்துத் தெருவில் வசிக்கும் தூரத்து உறவினர் ஒருவரின் உதவியோடு பொலிஸ் நிலையம் சென்று விசாரித்தாள்.

"சந்தேகத்தின் பேரில் பிடிபட்டவங்களை இப்போ விசாரணை இல்லாமல் அனுப்பமாட்டோம். இனி திங்கட்கிழமை கோர்ட்டுக்கு கொண்டுபோய் விசாரணை செய்து பின்தான் எதையும் சொல்லலாம். சிலவேளை மூவாயிரத்து ஐநூறு ரூபா தண்டம் கட்டினால் விட்டுவிடுவார்கள். இல்லையென்றால் பதினான்கு நாட்களின் பின்னர்தான் முடிவு தெரியும். இப்போ என்னால் எதுவும் செய்ய முடியாது" என்று இரவுக் காவலுக்கு இருந்த உதவி இன்ஸ்பெக்டர் சொன்னபோது ஏமாற்றத்தோடு திரும்பினாள். இன்று இதோ பணத்தோடு கணவனை மீட்டுவரப் போகிறாள்.



பொலிஸ் நிலையத்தில் சொன்னது போலவே மூவாயிரத்து ஐநூறு ரூபாய் தண்டம் கட்ட வேண்டியதாய் போய்விட்டது. பணம் போனாலும் பரவாயில்லை, கணவரை விடுதலை செய்து விட்டார்களே அதுவே போதும் என்று மழிக்கப்படாத தாடியோடும், பிசுபிசுத்த தலையோடும் கூடிய ஜெயில் வாசனையுடன் சங்கரை அழைத்துக் கொண்டு வந்த உமாவிற்கு 'இந்த மூவாயிரத்து ஐநூறு ரூபாயில் எப்படி இவர் மீது கொண்ட சந்தேகம் இல்லாது போனது' என்பதை நினைக்க வியப்பாய் இருந்தது. பணம் பிடுங்க இப்படி ஒரு வழி. இதை யாரிடம் போய் சொல்வது என்றவாறே பள்ளிக்கூடத்தில் இருந்த மகனையும் அழைத்துக் கொண்டு வீட்டிற்குத் திரும்பினாள்.

வீடு சென்று கொஞ்ச நேரத்தில் பக்கத்துத் தெருவில் வசிக்கும் உமாவின் தோழி "உமா உமா" என்றவாறு பதற்றத்தோடு வந்தாள்.

"என்ன பிரமிளா.. என்ன. ஊரிலே இருந்து எப்போ வந்த".

"அது இருக்கட்டும். முதல்ல உன்னோட அவர் வேலைக்குப் போயிட்டாரா."

"இல்ல. இல்ல இப்பதான் அவரை கூட்டிட்டு வந்தேன்"

"அப்பாடா... இப்பதான் எனக்கு உயிரே வந்தது. உனக்கு விசயம் தெரியாதா?"

"என்ன பிரமிளா என்ன"

"உன்னோட அவர் வேலை செய்யிற அலுவலகத்திலே குண்டு வெடிச்சு நிறைய பேர் செத்துப் போயிட்டாங்களாம். இப்பதான் ரேடியோவிலே சொன்னாங்க. ஆமாம் உமா ரேடியோவை போட்டுக் கேளு" என்றபோது உமாவிற்கு என்ன பேசுவதென்றே புரியாமல் போய்விட்டது. ஒரு கணம் ஸ்தம்பித்துப் போனவள். 'அந்தக் கடவுள்தான் இவரைக் காப்பாத்தினாரு. அன்றைக்கு பொலிஸ் இவரை பிடித்துப் போகாவிட்டால். இன்றைக்கு வேலைக்குப் போய் இவரும்...' என்று நினைத்த போதே, உமாவிற்கு துக்கம் தொண்டையை அடைத்தது. எல்லோர்க்கும் ஏதேதோ வடிவில் வந்து கை கொடுக்கும் கடவுள் எனக்கு பொலிஸ் வடிவில் வந்து உதவி செய்தாரே என்று கண்ணீர் விட்டாள்! அந்தக் கண்ணீர் அந்த மூன்று நாள் துன்பத்தைத் துடைத்து இன்பத்தைக் கொடுத்தது.

# திரும்பும் அம்புகள்

அங்கம் 08

**இந்திரா சௌந்தர்ராஜன்**

ஃபேனும் சரக் கரக் என்று சுழன்று கொஞ்சம்போல காற்றை உமிழ்ந்தது.

அதுவும் சில நிமிடங்கள் வரை தான்!

கரண்ட் கட் ஆகி அதுவும் நின்றுபோனது.

மீண்டும் புழுக்கம்!

அடக் கடவுளே... அலுப்போடு விசிறிக் கொள்ள ஏதாவது கிடைக் குமா என்று பார்த்தான். அருகில் ஷெல்ஃபில் ரேணுகாவின் காலேஜ் நோட்டுகள். அதில் ஒரு பெரிய ரிக்கார்ட் நோட் கண்ணில் பளிச் சென்று பட்டது.

உருவி எடுத்து வந்து விசிறி விட்டுக்கொள்ளத் தொடங் கினான்.

நான்கைந்து அசைவில் உள்ளிருந்து ஏதோ ஒரு பேப்பர் பறந்து போய் கீழே விழுந்தது.

குனிந்து எடுத்தவன் என்ன பேப்பர் என்று பார்த்தான். நான் காக மடித்து மேலே ஒரு ஹார்ட் டின் படம் வரையப்பட்டிருந்தது.

பிரித்தான்.

புதீரென்றது.

அது ஒரு காதல் கடிதம்.

'என் அன்புள்ள ரேணுகா விற்கு!

உன் இனிய காதல் மடல் கிட்டியது. அதை ஒரு தடவைக்கு நூறு தடவையாவது படித் திருப்பேன். இப்போதெல்லாம் எனக்கு பெரிய ஆறுதலே உன் கடிதங்கள்தான், உன் காதல்தான் என்னை வாழவைத்தபடி உள்ளது. உள்ளபடியே நான் கோடீஸ்வர னாக இருந்தாலும் திருமணம் என்கிற விஷயத்தில் ஒரு ஏழை யாகவே இருக்கிறேன். எங்கள் குடும்பம் பற்றிய மிகத் தவறான கருத்துக்கள் வெளியே பரவியுள்ள தால் என் அக்காக்கள் யாருக்கும் திருமணமே ஆகாத ஒரு நிலை.

அதனால் எனக்கும் திருமணம் என்பது ஒரு கனவாகிவிடுமோ என்ற நிலையில்தான் உன்னை கல்லூரியில் சந்தித்தேன். நான் உன்னைக் காதலித்த அதே சமயம் நீயும் என்னை நேசித்திருக்கிறாய் என்பதும் தெரிந்தது. ஆறு அக் காக்கள் நடுவில் ஒரு பெண் பிள்ளை போலவே என் அப்பா என்னையும் வளர்த்துவிட்டார். என்னை ஒரு நல்ல ஆண்மகனாய் வளர்க்க வேண்டிய என் அம் மாவோ நான் மூன்று வயதாக இருக்கும்போது போய்விட்டாள். இப்பொழுதுதான் நான் உலகத்தையே பார்க்கத் தொடங்கி யிருக்கிறேன். அதுவும் உன் மூல மாக... உண்மையில் என் குடும் பத்தில் எந்த மர்மமும் இல்லை. என் அக்காக்களுக்கு திருமண மானால் அவர்கள் விதவைகள் ஆகிவிடுவார்கள் என்பதெல்லாம் ஒரு வித பொய் நம்பிக்கை. எங்கள் மாளிகையில்தான் யாரோ இருந்து கொண்டு சதி செய்கிறார்கள்

அவர்களைக் கண்டுபிடிக்கத் தான் நானும் ஒன்றும் தெரியாத பெண்பிள்ளை போல நடந்து கொண்டிருக்கிறேன். உன் அண்ணன் பற்றி கவலைப்படாதே. இன்று ஒரு எலெக்ட்ரீஷியன் ஆக உள்ள அவர் கூடிய விரைவில் எனக்கு மைத்துனராகி அரிமா மாளிகைக்கும் உறவுக்காரராகி விடுவார்.

நமது காதல் நிச்சயம் வெற்றி பெறும். சிறிது காலம் பொறுத்துக்கொள்.

என் சகோதரிகளுக்கு நல்ல மாப்பிள்ளைகள் கிடைக்கட்டும். அதற்கு முன் எங்கள் குடும்பத்தை சாபத்தின் பெயரால் ஆட்டிப் படைக்கும் நபர்களைக் கண்டு பிடித்து அவர்களுக்கு ஒரு முடிவு கட்டுகிறேன். அது வரை கடிதங் கள் உன்னையும் என்னையும் தாலாட்டட்டும். இன்று நாம் சந்திக் கும் இடத்திற்கு தவறாமல் வா. மற்றவை நேரில்

அன்புடன்,

மார்த்தாண்டன்.

கடிதத்தைப் படித்த வேணு வுக்கு தலையே வெடித்துவிடும் போல இருந்தது.

ஒரே நாளில் அவன் சந்திக்கம் மூன்றாவது திருப்பம் இது.

கடிதத்தை மடித்து நோட்டில் வைத்துவிட்டு பொதேல் என்று படுக்கையில் விழுந்தான்.

அக்கா காதலிக்க முயற்சிதான் செய்தாள்... ஆனால் தம்பியோ காதலித்துக் கொண்டே இருக்கி றான்...! உலகமறியாதவள் என் தங்கை என்று நினைத்துக்கொண் டிருந்ததெல்லாம் எவ்வளவு பெரிய பொய்!'

வேணு மல்லாந்து படுத்துக் கொண்டு பெருமூச்சுவிட்டான். 'அடுத்து என்ன செய்வது?'

> **"விதியை எழுதுவதே மதிதான்! எழுதும் போதே வெற்றிக்க இடம் கொடுத்து எழுதி விட்டால் அதன் பின் அதனுடன் மோதி ஜெயித்து விடலாம். ஆனால் அது அத்தனை சுலபமல்ல. தப்பாக விதியை எழுதுபவர்கள் அனிடம் மாட்டிக் கொண்டு விழித்தே தீர வேண்டும்.**

அரிமா மாளிகை!

மனேஜர் நாகசாமியின் ஜீப் மாளிகை கட்டிடம் முன்னால் கிரீச்சிட்டு நின்றது.

அவரும் இறங்கி உள்ளே நுழைந்தார்.

எதிர்ப்பட்டான் அட்டெண்டர் பெரியசாமி. "அய்யா! உங்களை பெரியவர் கேட்டாருங்க."

அடுத்து அவர் கால்கள் பெரியவரின் அறை நோக்கித்தான் நடந்தன.

(அம்புகள் தொடர்ந்து வரும்..)

# என்றோ எழுதிவைக்கப்பட்ட உலகின் தலைவிதி

**01**

## நொஸ்ரடாமஸின் அதிசய ஆரூடங்கள்

**பிரமிக்க வைப்பது ராஜகுமாரன்**

இத்தாலி நாட்டில் ஒரு பண்ணையில்...

இரு இளைஞர்கள் நடைபாதை வழியாக நடந்துகொண்டிருந்தார்கள்.

சன நடமாட்டமில்லாத அவ்வேளையில் எதிரே சற்றுத் தொலைவில் காற் குளம்புகள் நிசப்தத்தைக் கலைத்தன. ஒரு பன்றிக் கூட்டம் வந்து கொண்டிருந்தது.

சிறிய தடியுடன் பின்னால் ஒருவன் பன்றிகளின் பின்புறத்தில் தட்டித் தட்டிப் பாதை விலகாமல் ஓட்டிக்கொண்டு வந்தான்.

பன்றிகள் அவ்விரு இளைஞர்களைக் கடந்து சென்றன. நடந்து கொண்டிருந்த இளைஞர்களில் ஒருவன் பன்றி மேய்ப்பவனை உற்று நோக்கிக் கொண்டிருந்தான். திடீரென அவனது பார்வை கூர்மையாக, முகம் இறுகி தசைகள் நடுங்கின. சற்றும் எதிர்பாராத விதமாகப் பன்றி மேய்ப்பவனை நோக்கி ஓடினான். ஓடியவன் முழந்தாளிட்டுப் பன்றி மேய்ப்பவனின் கையை முத்தமிட்டுச் சொன்னான். "அதி வணக்கத்திற்குரிய புனிதரே! (HIS HOLINESS)"

அந்த வார்த்தைகள் மற்ற இளைஞனை அதிசயிக்க வைத்தது. அதி வணக்கத்துக்குரிய போப்பாண்டவரை அழைக்கும் அந்த உயரிய வார்த்தைகளைத் தெருவில் பன்றி மேய்த்துச் செல்பவனுக்கு அவன் உபயோகித்தது விசித்திரமாக இருந்தது. திரும்பி வந்த இளைஞனிடம் அது பற்றி மற்றையவன் வினவிய போது எதையும் பேசாமல் மௌனமாக இருந்துவிட்டான். அவன் ஒரு கிறுக்கன் போல.. என்று நினைத்தான் மற்றவன்.

> **இந் நாள் வரை நொஸ்ரடாமஸ் கூறிய அத்தனை சங்கதிகளும் அப்படியே பலித்தன. இவற்றை 500 வருடங்களுக்கு முன்பே அந்த ஞானி எதிர்வு கூறியிருந்தான்.**

இது நடந்து ஐம்பது வருடங்களின் பின், அன்று பன்றி மேய்த்தவன் பரிசுத்த போப்பாண்டவர் ஆகினார். 50 வருடங்களுக்கு முன் இளைஞன் வணங்கிய பன்றி மேய்த்தவன்தான், போப்பாண்டவர் போறீஸ் பெரேற்றி.

அந்த அதிசய ஆரூடத்தைச் சொன்ன இளைஞன்தான் உலகமே வியக்கும் தீர்க்கதரிசி நொஸ்ரடாமஸ்.

இது நொஸ்ரடாமஸின் கதை.

உலகை அதிசயத்தில் ஆழ்த்திய ஆரூடனின் கதை.

அவன் சொன்ன ஆரூடங்கள் அடுத்த நாளைப் பற்றியவை மட்டுமல்ல, அடுத்த வருடத்தைப் பற்றியவை மட்டுமல்ல, அடுத்த நூற்றாண்டைப் பற்றியும், அதற்கு அப்பால் பல நூற்றாண்டுகளைப் பற்றியும், இன்றுவரையும் இன்றையும் கடந்து இன்னும் பல காலங்களுக்கும் சொல்லும் அந்த ஆரூடங்களில்...

அவன் தன் வாழ் நாளில் சந்தித்திருக்காத

உலகத் தலைவர்களைப் பற்றியெல்லாம்

வரலாற்றுச் சம்பவங்கள் பற்றியெல்லாம்

இயற்கை அனர்த்தங்களைப் பற்றியெல்லாம்

யுத்தங்களின் வெற்றி தோல்வி பற்றியெல்லாம்

எண்ணியிருக்க முடியாதவை பற்றியெல்லாம்

ஐந்நூறு வருடங்களுக்கு முன்னரே அவன் சொன்னான்.

இந்தத் தொடர் முழுக்க அந்த அதிசயங்கள்தான். பிரமிப்பை மிஞ்சிய பிரமிப்புக்களாக உங்களை வசப்படுத்தும்! படியுங்கள்..! சுவையுங்கள்! மலையுங்கள்!

பிரான்ஸ் நாட்டில் 1503ம் ஆண்டில் டிசம்பர் மாதம் 14ம் நாள் இப் பூமியில் உதித்த ஒரு குழந்தைக்கு மைக்கேல் நொஸ்ரடாமஸ் என்று பெயர் சூட்டிய போது அவன் உலகப் புகழ் பெற்ற ஒரு தீர்க்கதரிசியாக ஆவான் என்று பெற்றோர் நினைக்கவில்லை.

இந் நாள் வரை நொஸ்ரடாமஸ் கூறிய அத்தனை சங்கதிகளும் அப்படியே பலித்தன. இவற்றை 500 வருடங்களுக்கு முன்பே அந்த ஞானி எதிர்வு கூறியிருந்தான்.

இன்று வளைகுடாவில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடி பற்றி அவன் அன்றே கூறியிருந்தான். ஈராக்கின் மீது அமெரிக்கா எந்த வகையிலும் போர் தொடுக்கலாம். அவ்வாறு போர் மூண்டால் என்ன விளைவு ஏற்படும் என்று கூடக் கூறியிருக்கிறான். அது



நாம் இருந்து பார்க்க வேண்டிய ஒன்று.

இரண்டாவது உலகப் போரின் முடிவில் அமெரிக்கா ஜப்பானிய நகரங்களான ஹிரோசிமா, நாகசாகி ஆகியவற்றின் மீது அணு குண்டுகள் வீசும் என்பதையும் அது பேரழிவை ஏற்படுத்தும் என்றும் அன்றே அவன் தெரிவித்தான். ஊலகில் அவ்வப்போது இடம்பெற்று வரும் பூகம்பம், எரிமலைக் குமுறல், சூறாவளி, வெள்ளம், வறட்சி ஆகிய அனர்த்தங்கள் பற்றியெல்லாம் அவன் ஆரூடம் கூறியிருக்கிறான்.

சோவியத் யூனியன் பல கூறுகளாக உடையும் என்பதை முற்கூட்டியே எச்சரித்திருக்கிறான்.

அமெரிக்காவின் நகரங்களுக்கு ஏற்படவிருக்கும் அபாயங்கள் பற்றியும் பிரித்தானியாவின் எதிர்காலம் பற்றியும் முன்னறிவித்தல்களைக் கொடுத்திருக்கின்றான். இந்தியாவைப் பற்றியும் அவன் கூறத் தவறவில்லை.

பங்களாதேஷின் உதயம், பாகிஸ்தானியருடன் இந்தியாவின் முறுகல் எவ்வாறு தீரும் என்பனவற்றையும் அவனின் ஆரூடம் கூறிச் செல்கிறது.

நீங்கள் இதையிட்டு அதிசயிப்பீர்கள். ஆம்! ராஜீவ்காந்தியின் திடீர் அரசியல் பிரவேசம், அவரின் அதிர்ச்சி தரும் மறைவு மட்டுமன்றி அப் படுகொலை எவ்வாறு நிகழும் என்றும் பல ஆண்டுகளுக்கு முன்னரே கூறியிருக்கிறான்.

இந்தப் பூமி அழியுமா? அது எப்போது, எப்படி நிகழும்? நொஸ்ரடாமஸிடம் அதற்குப் பதில் இருக்கிறது.

ஒரு சாதாரண மனிதன் எம்மைப் போல் இரண்டு கால்கள், இரண்டு கைகளுடன் பிறந்து, தவழ்ந்து இதே புவியிலேயே வளர்ந்தவன், இத்தனை தீர்க்கதரிசனங்களை எவ்வாறு கூறினான்? அதிசயிக்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள். 500 ஆண்டுகளுக்குப் பின்னரும் இன்னும் பலித்து வரும் அதிசய ஆரூடம் அவை.

இந்த ஆரூடப் பொக்கிஷம் எமக்கு, இது வரை வாழ்ந்த மக்களுக்கு, இனி மேலும் வாழப்போகும் மக்களுக்குக் கிடைத்த அரிய பொக்கிஷம்! ஆனால் அதிலும் ஒரு கவலைக்கிடமான விடயம் என்னவென்றால் நீங்களும் நானும் வாசித்து அறியக்கூடிய இலகு மொழிகளில் அவனது எழுத்துக்கள் இல்லை. அவன் வாழ்ந்த காலத்தில் வழக்கில் இருந்த அந் நாள் பிரெஞ்சு, ரோமன் மொழிகளின் புராதன மொழி நடையிலேயே அவை எழுதப்பட்டுள்ளன. அதுவும் ஒரு சாஸ்திரீகப் பாணியில் பூடகத் தன்மை பொருந்திய எழுத்து நடையிலேயே அக் குறிப்புகள் உள்ளன. அவை ஆழ்ந்த அர்த்தம் பொதிந்தவையாக, மேலோட்டமான வாசிப்பில் புரிந்துகொள்ள முடியாதவையாக உள்ளன. மேலெழுந்தவாரியாக அர்த்தம் கூறிவிட முடியாதவை. மிகச் சிரமத்துக்கு மத்தியில் அவனுடைய நூல்களை ஆராய்ந்து, ஆய்வாளர்கள் கண்டறிந்த உண்மைகளை முரசு இத் தொடரில் தொடர்ந்து தரும்! பரந்து விரிந்த இவ்வுலகைத் தனது இரு கைகளுக்குள்ளும் ஏந்திக்கொண்டு எதிர்காலம் பற்றி எதிர்வு கூறிய நொஸ்ரடாமஸின் வாழ்க்கையில் நிகழ்ந்த பல புதுமை மிகுந்த சம்பவங்களை நீங்கள் சுவைக்கக் காத்திருங்கள்!

எதிர்வரும் இதழ்களில் நொஸ்ரடாமஸ் பேசுவான்.

(பிரமிப்புகள் தொடரும்)

ஒரு தனி மனிதனின் கதையல்ல இது,
உலகப் பொலிஸ்காரனின் அட்டூழியம் அழிக்கப்
புறப்பட்ட ஒரு தீவிரவாதியின்
இரத்தக் களரிச் சரிதம்!
'RISKY BUSSINESS MAN' என்று அமெரிக்காவின் சீ.ஐ.ஏ, இங்கிலாந்தின் M16, இஸ்ரேலின் மொசாட் உளவு அமைப்புக்கள் வயிறெரிந்து வர்ணிக்கும் அளவில்,
ஒஸாமா பின்லேடன்–
இரத்தக் களரியில் மாமிசப்பசி கொண்ட ஒரு பயங்கரவாதியா?
ஆன் மீக ஈர்ப்புமிக்க இஸ்லாமிய மத/அடிப்படைவாதியா?
உலகளாவிய 'மனித உரிமைகளு'க்கான விடுதலைப் போராளியா?
ஜனநாயக வாதியா?
இல்லை... சத்திய வேள்வியில் புனிதப் போர் நடத்தும் இலட்சியவாதியா?
பற்பல புதிய அம்சங்களோடு, வாசகர்களையும் உலகம் சுறறியொரு பயணம் அழைத்துச் செல்லும் அதிர்ச்சித் தொடர்!
'நைன் லெவன்' ஹீரோவின்
இரத்தக் களரிச் சரிதம்!

## பின் லேடன் 'அதிரவைக்கும் மனிதன்'




**அதிர்ச்சி: 01**

**2002,** அக்டோபர் மாத இரண்டாவது வாரத்தின், ஒரு இனிப்பான நாளின் இரவை நெருங்கும் இதமான மாலைப்பொழுது...

வெள்ளை மாளிகையின் தனது பிரத்தியேக அறைக்குள் ஜில்லென்று பரவியிருந்த ஏசியின் குளிரிலும் வியர்த்துப் போனவராய், நெஞ்சுக்குள் எக்கச்சக்க அதிர்வுகளை வாங்கிக் கொண்டிருந்த அமெரிக்க அதிபர் ஜார்ஜ் டபிள்யூ.புஷ் வறண்டு போனதாய் உணர்ந்த தொண்டைக்குள், கொஞ்சம் 'மினரல் வாட்டரை'ச் சரித்துக் கொண்டு நிமிர்ந்தார்.

எதிரே, கறுப்பழகி கான்டலீஸா ரைஸ்!

அமெரிக்க ஆதிக்க வட்டாரத்தில் முன்னேறி வந்துகொண்டிருந்த இந்தக் கறுப்பழகி, அதிபர் புஷ்ஷின் தேசிய பாதுகாப்புத்துறை ஆலோசகர். கழுத்து வரை இறுக மூடிய கரு நீல-முழுக்கைச் சட்டை, மொரமொரப்பான கறுப்பு வர்ண ஸ்கேர்ட் அணிந்து, கவர்ச்சி தாண்டிய மிடுக்கோடு 'பெப்பர்மின்ட்' புன்னகையொன்றை இதழ்களில் தவழவிட்டவள், ஏதோ ஆபிரிக்க நாட்டு 'ஏர் ஹோஸ்டஸ்' ஒருத்தியை ஞாபகப்படுத்தினாள்.

"சார்"

ரைஸின் விழிகளை ஊடுருவுவதைத் தவிர்த்து, பார்வையைத் தழைத்து, விசுக்கென்று விரல் நொடிக்கும் செக்கனில் மீண்டும் நிமிர்ந்த அதிபர் புஷ், கழுத்துப் பட்டியைக் கொஞ்சம் தளர்த்திக் கொண்டே சொன்னார் "ம்... சொல்லு"

"ஈராக்கை உடனடியாகத் தாக்கும் எண்ணத்தைக் கைவிட்டு, இப்போதைக்கு ஐ.நா.ஆய்வுக் குழுவை அனுப்பிப் பார்க்க வேண்டுமென்பதில் மீள யோசிப்பதற்கு எதுவும் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை அதிபரே..."

ஏதோவொன்றை நிராகரிக்க முடியாத சூழ்நிலையில், நெஞ்சுக்குள் உழன்று, உடம்பு முழுக்கப் பரவிய உஷ்ணத்தைக் கஷ்டப்பட்டு அடக்கிக்கொண்ட புஷ், மனதுக்குள் சொல்லிக் கொண்டார் 'அந்த சதாம் என் தந்தையைக் கொல்ல முயன்றவன் என்பதை நீ அறிவாயா ரைஸ்?'

அதிபரின் இதயத் துடிப்பு வேகத்தையும், மனவோட்டத்தையும் படித்தாளோ என்னமோ..

காண்டலீஸா ரைஸ் என்கிற அந்தக் கறுப்பு வைர அழகி தன் பிடியை விடுவதாக இல்லை.

பெண்டகன், தேசிய பாதுகாப்புத் துறைகளில் பணியாற்றி, அமெரிக்க அதிபரின் ஆலோசகராக உயர்ந்திருக்கும் கறுப்பழகி ரைஸ், 'ஸ்டடி ஒப் பவர்'-ஆட்சியமைப்பு பற்றி முறையாகக் கற்றவள். பியானோ வாசிக்கும் நேரம் தவிர, மற்ற நேரங்களில் உலக உருண்டையின் அரசியல் வரலாறுகளைப் படிப்பதில் தான் ஆர்வம் அதிகம். இந்த உலகின் கசப்பான நாள் எதுவெனக் கேட்டால், தயாராக வைத்திருந்த மாதிரி



ஜீரணிக்க முடியாமல்தான் இருக்கிறது.

கல்லூரியில் படிக்கும் காலத்தில்-

"இந்த வரலாற்றுத் தவறைச் செய்த சார்ள்ஸ் ஸ்வீனியை தூக்கில போட்டிருக்கணும்" என்று சக தோழியொருத்தி சொல்ல,

"73, 884 பேர் கொல்லப்பட்டு, 74.909 பேர் காயப்பட்டுப்போன இந்தச் சோக வரலாற்றின் கொடுமையை அந்த இளைஞன்-மேஜர் சார்ள்ஸ் ஸ்வீனிதான் தன்னில் சுமக்க வேண்டுமென்றிருந்தால் அது எந்த வகையில் நியாயமாகிறது? முதலில் அந்த இளைஞனுக்குக் கட்டளையிட்ட பின்னணியைத்தேடி உதைக்க வேண்டும். அப்படிப் பார்த்தால் 'ஒஃபீஷியல்

### தருவது– மாவனல்லை இப்னு மாஹிதா

'1945 ஆகஸ்ட் ஒன்பதாம் திகதி' என்று பதில் கூறும் ரைஸ், அன்றைய தினத்தின் முற்பகல் 11.02 மணி நேரத்தைக் 'கரிய நிமிடங்கள்' என்று குறிப்பிடுகிறாள்.

அமெரிக்காவின் 25 வயது வான் படை மேஜர் சார்ள்ஸ் ஸ்வீனி, ஜப்பானின் நாகசாகி நகரின் 9.600 மீட்டர் உயர வான் பரப்பிலிருந்து அணுகுண்டு எமனை விட்டெறிந்த நாளும் நேரமும்தான் அது. அந்த ரணம் ரைஸின் மனசுக்குள் ஆழப்படிந்து... இன்னும்

பொம்பிங் ஆர்டரை' எழுதிய சிரேஷ்ட அதிகாரி தோஸ். ரீ.ஹெண்டிதான் குற்றவாளி, ஆனால், அவரது கட்டளைக்கும் பின்னணியிலும் ஒரு சக்தி இருக்கத்தானே செய்கிறது. அப்படிப் பார்த்தால் யாரை உதைக்கிறது? யாரைத் தூக்கில போடறது?"

என்று தனது இளமைக் காலத்திலேயே. நாகசாகி குற்றப் பின்புலம் தேடித் தேடி நியாயம் பேசியவள் ரைஸ்.

இன்னும் அதிரும்....

---

**இரு எழத்தாளர்கள் சேர்ந்து எழதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**

## மூட் பாதையில் மரித்த மிதவாதம்

(அரசியல் தொடர்)

ஊற்று

இத் தொடர் ஊற்றெடுத்தது எவ்வாறு?

த.சபாரத்தினம் இலங்கையின் மூத்த பத்திரிகையாளர். இருபது ஆண்டுகள் தினகரனிலும் இருபத்தொரு வருடங்கள் டெயிலி நியூஸிலும் பணியாற்றியவர். அந்த 41 வருடங்களும் அரசியல் செய்தியாளராக தமிழ் மிதவாத அரசியல் தலைவர்களுடனும், சிங்கள அரசியல் தலைவர்களுடனும் நெருங்கிப் பழகியவர். இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் முன்னாள் தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமானின் வாழ்க்கைச் சரிதையை எழுதியவர். Out of bondage (விலங்கு ஒடிந்தது) என்ற அந் நூலை எழுதுவதற்காக மாதமிரு முறை சந்தித்து அமைச்சரவை விவாதங்கள் உட்படப் பல இரகசியத் தகவல்களைத் திரட்டியவர்.


சபாரத்தினம் எழுதிய 'மேர்டர் ஒப் த மொடரேட்' என்னும் ஆங்கில நூல், தமிழர் விடுதலைக் கூட்டணியின் மறைந்த தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் சரித்திரத்தினூடாக தமிழ் மிதவாத அரசியலைப் பற்றிப் பேசுகிறது. அதைத் தமிழில் மொழிபெயர்ப்புச் செய்ய விழைந்த போது அதில் தமிழ் அரசியலில் ஆயுத இயக்கங்களின் செயற்பாடு பற்றிய அம்சம் விடுபட்டிருப்பதை நிவர்த்திக்க வேண்டிய அவசியம் உணரப்பட்டது. இதன் பொருட்டு தமிழ் ஆயுத அரசியலோடு நீண்ட பரிச்சயம் கொண்ட அம்பிமக னும் த. சபாரத்தினமும் இணைந்து இந்த அரசியல் தொடரைத் தருகிறார்கள். இது 'மேர்டர் ஒப் த மொட ரேட்'டின் தமிழாக்கம் அல்ல. மாறாக இது ஒரு புத்தாக்கம். முதலில் எழுத்தாளர்கள் பேசு கிறார்கள்.

சபாரத்தினம்: நான் எழுதிய Muder of the Moderate (ஒரு மிதவாதியின் கொலை) என்ற நூலைத் தமிழில் மொழியாக்கும்படி கேட்பதற்கு, போன வெள்ளிக்கிழமை அம்பிமகன் என் வீட்டுக்கு வந்தார். அமிர்தலிங்கம் குடும்பம் அதனைத் தமிழில் மொழி பெயர்க்க விரும்பும் தகவலைச் சொன்னார். அதன் பின்பு அந் நூலைப் பற்றி இருவரும் பேசினோம்.

இந் நூல் அமிர்தலிங்கத்தின் வாழ்க்கைச் சரிதையாக அமைக்கப்பட்ட போதிலும் அதன் மூலம் சில விடயங்களை ஆங்கில மொழி அறிந்தவர்களுக்கு, குறிப்பாகச் சிங்களவருக்குக் கூறத்தான் முனைந்தேன். அவற்றில் முதலாவது, குடியேற்றம், அரசியல் அதிகாரத்தில் பங்கு மறுத்தமை, மொழி, வேலை வாய்ப்பு, கல்வி என்பவற்றில் தமிழருக்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதிகள்




அவர்களை உரிமைப் போராட்டத்துக்குத் தள்ளியது என்பதைக் கூறினேன். இரண்டாவதாக அந்த அகிம்சைப் போராட்டத்தை ஆயுத கலகத்தால் அடக்கியதால் உணர்ச்சித் துடிப்புள்ள வாலிபர்கள் ஆயுதம் தூக்கினர் என்பதைச் சொன்னேன். இவற்றைப் பலர் தமிழிலும் ஆங்கிலத்திலும் கூறியுள்ளனர்.



ஆயுதப் போராட்டம் முளைத்து வளர்ந்து வந்த காலத்தில் தமிழ் மக்களின் மிதவாத சக்திக்கு ஏற்பட்ட கதியை, எனக்கிருந்த வரையறைக்குள் சுட்டிக்காட்டினேன். எனக்கு அன்றிருந்த சிக்கல், ஆயுதக் குழுக்களுடன் பழக முடியாதிருந்தமை. ஆயுதக் குழுக்களுடன் நான் பழக முயன்றிருந்தால் லேக்ஹவுஸில் தொடர்ந்திருந்திருக்க முடியாது. அரசாங்கத் தலைவர்களுடன் பழகியிருக்கவும் முடியாது. நாலாம் மாடிக்குத் தள்ளப்பட்டிருப்பேன்.

அமிர்தலிங்கத்தின் புத்தகத்தை மொழி பெயர்க்குமாறு அம்பிமகன் கேட்டதும் அது எனக்குக் கிடைத்த சந்தர்ப்பமாகக் கொண்டேன்.

நான் எழுதிய நூல் பூரணமானதல்ல. சிங்களத் தலைமைத்துவத்தின் பேரினவாதப் போக்குகள், எப்படித் தமிழர்களின் மிதவாதத்தை அரசியல் ரீதியாகக் கொன்றது என்பதைக் கூறியுள்ளேன். ஆனால் மிதவாதப் போக்கு தமிழர்களிடமிருந்து எப்படித் தன்னை அந்நியப் படுத்தியது என்பதையும் ஓரளவு எழுதியுள்ளேன். ஆயுத இயக்கங்களுக்கும் தமிழ் மிதவாத சக்திகளுக்கும் இடையில் தோன்றி வளர்ந்த முரண்பாடுகள், தகராறுகள், முதலிய பல விடயங்களை என்னால் எழுத முடியவில்லை.

அந்தப் பக்கத்தையும் இணைத்து இருவரும் ஒரு தொடராக எழுதலாமே என அம்பிமகனைக் கேட்டேன். முதலில் தயங்கினார். பின்னர் இணங்கினார். அந்த இணக்கம் தான் இந்தத் தொடரின் ஊற்று மூலம்.

எழுபதுகளின் மத்தியில் இலங்கைத் தமிழ் மக்கள் மத்தியில் முளைவிட்டு எழுந்த தீவிரவாதப் போக்குகளால் உந்தப்பட்டவர்களில் அம்பிமகனும் ஒருவர்.

சிவகுமாரன் சயனைற் அருந்திய 1974 ஜூன் 4ல் உரும்பிராய் இந்துக் கல்லூரியில் ஜீ.சீ.ஈ. உயர் தர வகுப்பில் சேர்ந்த அம்பிமகன் அன்று பிற்பகலில் சைக்கிளில் தன் நண்பர்களுடன் சேர்ந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குச் சென்றார். அங்குதான் பொன். சிவகுமாரன் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருந்தான். மாலை சுமார் 7.00 மணியளவில் பொன்.சிவகுமாரனின் உயிர் பிரிந்தது.

அதனைத் தொடர்ந்து உரும்பிராய் இந்துக் கல்லூரியின் மாணவர் பிராத்தனை வேளையின் போது சிவகுமாரனுக்கு அஞ்சலி செலுத்தப்பட வேண்டுமென உயர் வகுப்பு மாணவர்களால் வற்புறுத்தப்பட்டது. ஆனால் அதிபர், உப அதிபர் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்களின் கோரிக்கைக்கு இணங்க மறுத்தனர். இதனால் சிவகுமாரனுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் 'மரியாதைக் குண்டுகள்' கல்லூரி வளவில் வெடிக்க வைக்கப்பட்டன.

தேவாரம் இசைத்து முடிய, மாணவர்கள் தம் கூப்பிய கரங்களைக் கீழே விட முன்னர், பலமான ஒரு வெடியோசை கேட்டது. பிரார்த்தனை மண்டபம் அதிர்ந்தது. ஒரு சில செக்கன்கள் முடிவதற்கு முன்பாக மீண்டும் வெடி ஒலி அதிர்ந்தது. இவ்வாறு மீண்டும் மீண்டும் பல வெடிகள். இவை மரியாதை வேட்டுக்கள் என்று மாணவர்கள் மத்தியில் முணுமுணுப்பு.

சாம்பிராணிக் குச்சிகளை வெவ்வேறு அளவுகளில் வெட்டி எடுத்து மூலைவெடிகளுடன் இணைத்து நெருப்புப் பற்ற வைக்கப்பட்டிருந்தமையே இவ் வெடி ஒலிகள் ஏற்படக் காரணம் என்பது பின்னர் தெரியவந்தது.

பொன். சிவகுமாரனின் தற்கொலை, தமிழ் வாலிபர்களிடையே ஒரு புது மன நிலையை தோற்றுவித்துவிட்டமைக்கு இச் சம்பவம் ஒரு உதாரணம் ஆகும். அமிர்தலிங்கமும், சிவசிதம்பரமும் யாழ் வைத்தியசாலைக்கு சென்று பொன். சிவகுமாரனின் உடலுக்கு அஞ்சலி செலுத்தினார்கள். உரும்பிராய் வேம்பன் மயானத்தில் குழுமியிருந்த சுமார் 5000க்கும் அதிகமானவர்கள் மத்தியில் அமிர்தலிங்கம் உணர்ச்சிப் பிழம்பாக மாறினார்.

'தமிழ் மக்களுக்காகப் பொன். சிவகுமாரன் தியாகத்தினுள் சிறந்த உயிர்த் தியாகம் செய்துவிட்டார். அவர் செய்தது வீரத் தியாகம். அவர் சென்ற வழியை, வன்செயல் வழியை ஏற்றுக் கொள்ள முடியாத போதும் அவரின் இலட்சியப் பற்றுக்கு நான் தலை தாழ்த்துகின்றேன்' என்று முழங்கினார்.

ஆனால் இந்த ஒருமைப்பாடு தொடரவில்லை. அதனால் மிதவாத தமிழ்த் தலைமைத்துவம் தன்னை தமிழ் மக்களிடமிருந்து அந்நியப்படுத்திக் கொண்டது. இந்தப் பக்கத்துக் கதையை நான் உணர்ந்த வரையில் உங்கள் முன் தருகிறேன் என்றார் அம்பிமகன்.

சரி! கதையை அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் ஆகியோர் கொலையுண்ட சம்பவத்துடன் ஆரம்பிப்போம்.

இரத்தம் வடியும்....

**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம்**
**+**
**அம்பி மகன்**


# அலங்காரம் இன்றித் திருமணம் செய்யலாம்! ஆடையின்றியுமா?

ஜமேக்கா நாட்டின் மான் டிகோ பே என்ற இடத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றில் ஆண்டு தோறும் காதலர் தினத்தை முன் னிட்டுப் பலருக்குத் திருமணம் செய்து வைக்கிறார்கள். ஆனால் ஒரு வித்தியாசம். திருமண ஜோடி கள் ஆடை அலங்காரம் என்று எந்த ஆடம்பரமும் செய்துகொள் ளக் கூடாது.

அதாகப்பட்டது நிர்வாணத் திருமணம். கடந்த 14ம் திகதி 30 ஜோடிகளுக்கு இந்த ஹோட்டலில் திருமணம் நடந்தது.

திருமணத்தின் போது அணி யும் மெல்லிய நெட் துணியை மட் டுமே அணிந்திருந்தார்கள். வேறு உள்ளாடை சமாச்சாரம் எதுவும் கிடையாது. முகம் சுளிக்க வேண் டாம். சில பெண்கள் தலையில் தொப்பியும், ஆண்கள் 'டை'யும் அணிந்திருந்தார்கள்.

"ஏன்தான் இந்த இளசுகளை காதல் பிசாசு இப்படிப் படுத்து கிறதோ?" என்று வருத்தப்பட வேண் டாம். அதில் ஒரு மணமகனுக்கு வயது 59. டல்லஸ் நகரைச் சேர்ந்த டெக்னீஷியனான அவருக்கு, அடுத்த நாள் வித்தியாசமாகத் திருமணம் செய்துகொள்ளப் போகிறோம் என்ற நினைப்பால் இரவு முழுக்க உறக்கமே வரவில் லையாம். ஜேக் ரூனி என்ற அம் மணமகன் இதை நிருபர்களிடம் வெட்கம் பொங்கத் தெரிவித்தார். இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்ற பட் ஜாக்சனும் அவருடைய மனைவி கிறிஸ் ஜாக்சனும் இந்தக் ஹோட்டலில் இந்த நிர்வாணத் திருமணத்தை 2 ஆண்டுகளுக்கு முன்னர் அறிமுகப்படுத்தியபோதே திருமணம் செய்து கொண்டனர். மீண்டும் அதே பாணியில் அதே திருமணத்துக்கு வந்துள்ளன[illegible] அடுத்த ஆண்டு குதிரை மீது அமர்ந்து திருமணம் செய்துகொள் ளப் போகிறார்களாம். எ[illegible] கருமமோ!



### இன்னொரு போனஸ் திருமணச் செய்தி

மோட்டார்ப் பந்தயங்களில் தொடர்ந்து பங்கேற்கும் ராண்டி கிரிக்ஸ் (32) மேரி வார்ட் என்ற பெண்ணைக் கடந்த 3 ஆண்டு களாகக் காதலித்து வருகிறார். கிரிக்ஸைப் போலவே மேரி வார் டுக்கும் மோட்டார்ப் பந்தயங்கள் மிகவும் பிடிக்கும்.

இருவரும் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று முடிவு செய்தபோது, "மோட்டார்ப் பந்த யம் நடக்கும் திடலிலேயே திரு மணம் வைத்துக்கொண்டால் என்ன" என்று கிரிக்ஸ் கேட்டார்.

பந்தயப் பாதையைப் போலவே வாழ்க்கையும் கரடுமுரடானது தான்; பொறுமையும் திறமையும் இருந்தால் அதில் உற்சாகமாக ஈடுபட்டு வெற்றி பெறலாம் என்று குறிப்பாக [illegible]ணர்த்த [illegible] தாரோ எ[illegible]வோ?

பேய்க்கு வாழ்க்கைபபட்டால் புளியமரம் ஏறித்தானே ஆக வேண்டும். எனவே மேரி வார்டு அதற்கு ஒப்புக்கொண்டார்.

# உலகவிருந்து

## விபரீதமான முத்தம்

முத்தம் இல்லாத காதல் என்பது சந்தம் இல்லாத கவிதை யைப் போல. அதுவும் காதலர் தினத்தில் யாராவது முத்தம் தர மறப்பார்களா? ஆனால் அமெரிக் காவின் மின்னசோட்டா மாகா ணத்தில் 20 வயது காதலிக்கு அவளுடைய காதலன் கொடுத்த முத்தம் அந்த ஊரே மறக்க முடியாதபடி செய்தியில் இடம் பெற்றுவிட்டது.

ஷெல் பிஷ் எனப்படும் ஒரு வகை மீன் என்றால் அக் காதலிக்கு அலர்ஜி. அது தெரியாத அவளு டைய காதலன், அந்த மீனைச் சாப்பிட்ட கையோடு-மன்னிக்க..... வாயோடு- அவளுக்கு முத்தம் கொடுத்தான். மயங்கி விழுந்தாள். முத்தத்துக்கே இப்படியா என்று காதலன் மகிழ்ந்தான். அடுத்து குமட்டலால் 'உவே' என்றாள். 'முத்தம்'தானே கொடுத்தோம், அதற்குள் இத்தனை முன்னேற் றமா?' என்று காதலன் வியந் தான். அடுத்த சில நிமிஷங்களுக் கெல்லாம் அவளுடைய கழுத்து வீங்கியது. உடல் எல்லாம் கொப்பு ளங்கள் தோன்றின. நிலைமை விபரீதம் ஆவதை உணர்ந்து அவளை மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவுக்குக் கொண்டு சென்றனர்.

அங்குதான், மீன் சாப்பிட்ட வாயால் முத்தம் கொடுத்ததால் ஏற்[illegible] அலர்ஜியின் கோர விளைவு [illegible] தெரிய வந்தது. ■

# ஷேன்வோனுக்கு 2 வருடகால போட்டித் தடை?

தடை செய்யப்பட்ட ஊக்க மருந்து பாவித்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டு உலகக் கிண்ணப் போட்டிகளிலிருந்து இடை நிறுத் தப்பட்டிருக்கும் அவுஸ்திரேலிய சுழல்பந்து வீச்சாளர் ஷேன் வோனின் கிரிக்கெட் எதிர்காலத் தைத் தீர்மானிக்கும் பொறுப்பு மூன்று பேர் கொண்ட குழுவொன் றிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

முன்னாள் டெஸ்ட் விரரும் சுழல் பந்து வீச்சாளருமான பீட்டர் டேலரின் தலைமையிலான இந்தக் குழுவில் நீதிபதி ஒருவரும் மருத் துவ நிபுணர் ஒருவரும் அடங்கு கின்றனர்.



வோனின் உடலில் தடை செய் யப்பட்ட ஊக்க மருந்து இருந் ததா? என இரண்டாவது தடவை யாக மேற்கொள்ளப்பட்ட சோத னையிலும் அவருக்குப் பாதகமான பெறுபேறே கிடைத்துள்ளது.

குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட் டால் ஷேன் வோனுக்கு இரண் டாண்டு காலப் போட்டித் தடை விதிக்கப்படலாம் என எதிர்பார்க் கப்படுகிறது.

வோன் தனது உடற் பரும னைக் குறைப்பதற்காக உபயோ கித்த மருந்தின் காரணமாகவே இந்த விளைவு ஏற்பட்டதென நிரூ பிக்கச் சகல முயற்சிகளும் மேற் கொள்ளப்படும் என்று வோனின் சட்டத்தரணி கூறியிருக்கிறார்.

எவ்வாறெனினும் தற்போது கிடைத்துள்ள சகல சாட்சியங் களும் வோனுக்கு எதிராகவே உள்ளன.

இந்த விசாரணைக் குழு வோனை விசாரிக்கும் நாள் குறித்து இன்னும் அறிவிக்கப்பட வில்லை. பெரும்பாலும் அவருக்கு 2 வருடத் தடை விதிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

# ஸ்போர்ட்ஸ்

# ஒரு தோல்வியின் எதிரொலி!

இப்படியும் எங்களால் தோற்க முடியும் என்பது போல் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான லீக் போட்டியில் மோசமாகத் தோற்ற இந்திய அணியில் விளை யாடிய வீரர்களின் வீடுகள் மீது ஆத்திரமடைந்த உள்ளூர் ரசிகர் கள் கற்களை வீசியும் கறுப்பு பெயின்ட் பூசியும் தமது ஆத்தி ரத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

கங்குலியின் வீட்டுக்கு முன்பா கக் கூடிய இளைஞர்கள் அவரை கெப்டன் பதவியிலிருந்து விலகு மாறு ஆர்ப்பாட்டம் செய்தனர்: அஹமதாபாத்தில் உள்ள முகமட் கைஃபின் வீட்டுச் சுவரில் கறுப்பு நிற பெயின்ட் பூசிய இளைஞர்கள் சிலர் கற்களையும் வீசியுள்ளனர்.

கோல்கத்தாவில், இந்திய அணி யின் தோல்வியை எதிர்த்து உள் ளூர் கிரிக்கெட் கிளப் உறுப்பினர் கள் இந்திய கிரிக்கெட் அணிக்கு இறுதி ஊர்வலம் நடத்தியுள்ளனர்.

இறுதி ஊர்வலத்தில் நடக்கும் அனைத்துச் சடங்குகளும் நடத்தப் பட்டன. ஈடன் கார்டனில் உள்ள பெங்கால் கிரிக்கெட் சங்க அலு வலகம் எதிரில் 'இறுதிச் சடங்கு' நடந்தது. பின்னர் 'இந்திய அணி யினர் கிடத்தப்பட்ட' கட்டிலுக்குத் தீ வைக்கப்பட்டது.

முன்னதாக, கோல்கத்தா மைதானத்திலிருந்து ஊர்வலம் புறப்பட்டது. இந்திய கிரிக்கெட் சபை, மற்றும் அணியினருக்கு எதிராகக் கிரிக்கெட் ரசிகர்கள் கோஷம் எழுப்பினர்.

சௌரவ் கங்குலி, ராகுல் திரா விட் ஆகியோரின் உருவப்படம் இடம் பெற்றிருந்த சுவரொட்டி களுக்கும் தீ வைத்தனர்.

இதேவேளை இந்தியாவுடனான ஆட்டம் தான் ஆஸ்திரேலியாவுக்கு மிகக் கடுமையான லீக் ஆட்டமாக இருக்கும் என எதிர்பார்க்கப்பட் டது. ஆனால் ஏதோ வங்கதேசத் துடனான ஆட்டம் போல் அவுஸ்தி ரேலியா 9 விக்கெட்டுகள் வித்தி யாசத்தில் வெற்றி பெற்றது' என இங்கிலாந்துப் பத்திரிகைகள் கூறி யுள்ளன.

கடந்த ஆஷஸ் தொடரில் மெக் ராத், கில்லெஸ்பி, பிரெட் லீ ஆகி யோரது பந்துகளை இங்கிலாந்து துடுப்பாட்ட வீரர்கள்தான் மோச மாக ஆடினார்கள் என நீங்கள் நினைத்தால் அது தவறான யூகம். இந்திய துடுப்பாட்ட வீரர்கள் விளையாடியதை அவசியம் பார்த் திருக்க வேண்டும். முதல்தர-7 வீரர்கள் சேர்ந்து 64 ஓட்டங்களைத் தான் அடித்தார்கள்' எனக் கூறி யிருக்கிறது சன்டே டெலிகிராஃப்.

பிரெட் லீ ஆஃப் சைடுக்கு வெளியே பந்து வீசி விக்கெட்டு களை வீழ்த்தினார். வேகப் பந்து வீச்சாளர்களின் மிகப் பழமையான யுக்தி இது. ஆனால் 2003லும் அந்த யுக்தி பலனளிக்கிறது. என வும் சன்டே டெலிகிராஃப் தெரி வித்துள்ளது.

தொடக்க ஆட்டக்காரராகக் களமிறங்கிய கங்குலி, பந்துக்கு அருகே தனது கால்களைக் கொண்டு செல்லாமல் துடுப்பை வீசினார்.

வெளிநாடுகளில் விளையாடும் போது சச்சின் டெண்டுல்கரை நம் பித்தான் இந்தியா இருக்கிறது. அப்போதுதான் நல்ல ஸ்கோரை எட்ட முடியும். சிறந்த இவ் வீரர் 28-வது ஓவர் வரை தாக்குப்பிடித் தார். அவரது முதல் பவுண்டரி அச்சமூட்டும் விதத்தில் இருந்தது என அப் பத்திரிகை மேலும் கூறி யுள்ளது.

அவுஸ்திரேலியாவின் ஆட்டத் தைப் பெரிதும் புகழ்ந்துள்ளது சன்டே டைம்ஸ். 'கடந்த ஒரு வாரமாக ஒரு தரப்பு ஆட்டங்க ளையே பார்த்து வருகிறோம். வங்கதேசம்-இலங்கை, கென்யா-தென் ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா-வேறு ஓர் அணி.

இரண்டு ஆட்டங்களின் முடி விலேயே சூப்பர் சிக்ஸுக்குப் போவது அவுஸ்திரேலியாவுக்கு ஒரு சம்பிரதாயம்தான் என்பதைத் தெளிவுபடுத்திவிட்டது.



பாகிஸ்தானாவது சைமண்ட்ஸ் அதிரடியில் இறங்கும் வரை சமா ளிக்க முடிந்தது. ஆனால் இந்திய அணியில் சச்சின் தவிர வேறு யாராலும் மெக்ராத், பிரெட் லீ, கில்லெஸ்பியின் பந்து வீச்சுக்குப் பதில் சொல்ல முடியவில்லை.

ஒரு முகப்படுத்தும் தன்மை குறைந்ததால் தனது விக்கெட்டை இழந்தார் ராகுல் திராவிட். கடந்த ஆண்டு இங்கிலாந்தில் 3 சதங் களை விளாசினார் திராவிட். அவரே இப்படி ஆட்டமிழந்தது இந்திய அணியின் சமீப கால வீழ்ச்சியைக் காட்டுகிறது.

இந்தியா மிக அதிகமான ஆட் டங்களில் விளையாடி இருக்கி றது. அணிக்குள் அரசியலும் உள் ளது.

சச்சின் மட்டும்தான் ஓரளவு தாக்குப்பிடித்தார். மெக்ராத் பந்து களை விளாசினார். அவர் கில் லெஸ்பியின் பந்தில் பெவிலியன் திரும்பிய பின், ஆட்டமே முடிவுக்கு வந்துவிட்டதாகத்தான் கருத வேண் டும்" எனக் கூறியிருக்கிறது அப் பத்திரிகை.

இந்தியாவின் வீழ்ச்சியை இங்கி லாந்துக்குச் சாதகமாகப் பார்க் கிறது "தி ஒப்சவர்"

'ஒரு வழியாக இங்கிலாந்துக்கு மகிழ்ச்சியான செய்தி கிடைத்துள் ளது. லீக் ஆட்டங்களில் இங்கி லாந்து மோத வேண்டிய அணி களுள் ஒன்று அலங்கோலமாக உள்ளது என்பதே அச் செய்தி என அப் பத்திரிகை விமர்சித்துள்ளது.

'ஹாலந்துக்கு எதிராக 200-க் குச் சற்றுக் கூடுதலான ரன்களை மட்டும் எடுத்ததிலிருந்தே அவர் களது தன்னம்பிக்கை குறைந் திருப்பது தெளிவாகத் தெரிந்தது' எனவும் அது கூறியுள்ளது.

இதற்கிடையில் இந்தியாவின் பரம எதிரணியான பாகிஸ்தா னின் முன்னாள் தலைவர் இம் ரான்கான்,

இந்திய அணியின் தோல்விக்கு அணித் தலைவர் கங்குலியின் 'பொறுப்பின்மையே' காரணம் எனக் கூறியுள்ளார்.

பி.பி.சி. இணையத்தளத்துக்குப் பேட்டியளித்திருக்கும் இம்ரான் கான், "அணித் தலைவர் மற்றவர் களுக்கு உதாரணமாக இருக்க வேண்டும். குறிப்பாக அணி தன் னம்பிக்கை குறைவாக இருக்கும் போது நம்பிக்கையுடன் காணப்பட வேண்டும்.

கங்குலி துடுப்பாடிய விதம் பொறுப்பில்லாமல் இருந்தது. அவர் அணித் தலைவராக விளை யாடவில்லை. . அவரே இப்படி விளையாடும்போது, மற்ற வீரர் கள் சிறப்பாக விளையாட வேண் டும் என அவர் எதிர்பார்ப்பது தவறு" என்று தெரிவித்துள்ளார்.

இந்த விமர்சனங்கள் அனைத் துக்கும் சிகரம் வைத்தாற் போல் தென்னாபிரிக்க ஊடகங்கள் இந் திய அணியின் விளையாட்டைத் திட்டித் தீர்த்துள்ளன.

கங்குலி நாள் முழுவதிலும் செய்த ஒரே நல்ல காரியம் நாணயச் சுழற்சியில் வென்றதுதான் என சன்டே டைம்ஸ் எழுதியுள்ளது.

உபயோகமற்ற முட்டாள்கள் போல் இந்தியர்கள் விளையாடி னார்கள் எனத் தென்னாபிரிக்க வானொலி கூறியது. ■

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்கு கொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

குறுக்கெழுத்துப் போட்டியில் வெற்றி பெற்ற அதிர்ஷ்டசாலிகளுக்கான காசுக்கட்டளை தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளது. அவர்களின் பெயர் விபரமும் காசுக்கட்டளை இலக்கமும் தரப்பட்டுள்ளன.

| பெயர் | கா.க. இல. |
|---|---|
| 03. செல்வி ராணி அரசரத்தினம், மன்னார். | 16250942 |
| 04. எஸ். ஜோர்ஜ், கொழும்பு-13. | 16250943 |

## குறுக்கெழத்துப் போட்டி 07

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | ■ | 7 | ■ | 8 |
| 9 | 10 | ■ | 11 | 12 |
| 13 | ■ | 14 | ■ | 15 |
| 16 | 17 | 18 | 19 | ■ |
| ■ | 20 | 21 | ■ | 22 |

### போட்டி விதிகள்:

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 04.03.2003க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி

**குறுக்கெழுத்துப் போட்டி இல-07**
**தினமுரசு வாரமலர், த.பெ. இல. - 1772, கொழும்பு.**

தங்கள் சரியான முகவரியையும், காசுக்கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிஷ்டசாலிக்கு 250/= ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிஷ்டசாலிகளின் பெயர் தினமுரசில் பிரசுரமாகும்.

குறுக்கெழுத்துப் போட்டி இல.05க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.

எம்.ஐ.எம். அஸ்ரப். 489, வைத்தியசாலை வீதி, சாய்ந்தமருது—7.

### பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.

1. எம். முபாறக். ஓட்டமாவடி
2. செல்வி நிரோஷினி அருள்லிங்கம், கண்டி.
3. எஸ். மகேஷ்வரன், இரத்தினபுரி.
4. வ. சாந்தி, பண்டாரவளை.
5. எஸ்.எம். அனீஸ், ஏறாவூர்.
6. ஜெ. ஸ்ரீவரதாஜினி, கொழும்பு—6.
7. அஹமட் ஜஸீர், கைலாகொட, பதுளை.
8. வி. செல்வநாயகம், நீர்வேலி.
9. த. சாம்பசிவம், கொழும்பு—13.
10. சிறிசேன சறோஜாதேவி, நெளுக்குளம், வவுனியா.

### இடமிருந்து வலம்

(1). இராம தூதனின் மகன்.
(9). பெண் ஆட்டை இப்படி அழைப்பர்.
(11). உழவனுடைய சின்னம்.
(16). 'போர்' (குழம்பியுள்ளது)
(20). 'அலி' என்று பொருள்படும். (திரும்பியுள்ளது)
(22). முக்கனிகளில் ஒன்றைத் தருவது.

### மேலிருந்து கீழ்

(1). அருச்சுனனுடைய மகன்.
(3). 'கருத்து' என்று பொருள்படும்.
(5). கிறிஸ்தவருக்கு பைபிள்; முஸ்லிம்களுக்கு... (குழம்பியுள்ளது)
(14). 'வேற்றுமை' என்று பொருள்படும். (குழம்பியுள்ளது)
(17). தண்டு.

### குறுக்கெழுத்துப் போட்டி 05 விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 தி | 2 ரு | 3 ப் | 4 ப | 5 தி |
| 6 ரு | ■ | ■ | 7 றி | 8 பொ |
| 9 கோ | 10 வ | 11 ல | 12 ன் | ■ |
| 13 ண | ■ | 14 ம | ■ | 15 மை |
| 16 ம | ■ | 17 க | 18 யி | 19 று |
| 20 லை | 21 வ | 22 க | ■ | 23 வ |

## நினைத்து, நினைத்து சிரிக்க

பம்பாய் நகரத்து வீதியொன்றிலே போய்க் கொண்டிருந்தார் சர்தார்ஜி ஒருவர். அப்போது அவரை நெருங்கிய அன்னியர் ஒருவன் வயகரா மாத்திரையைக் காட்டி "1000 ரூபாய் சார்" என்றான்.

"இல்லை, பலன் இல்லை" என்றார் சர்தார்ஜி.

அவனோ மீண்டும்.

"சரி, 500 ரூபாய்?"

"இல்லை, பலன் இல்லை" இது சர்தார்ஜி

"சரி 200 ரூபாய்"

"இல்லை, பலன் இல்லை"

"100 ரூபாய்க்கு என்ன மாதிரி"

"இல்லை, பலன் இல்லை"

"யோவ், இதன் உற்பத்திச் செலவே 100 ரூபாய். நீ எப்படிய்யா சொல்ல முடியும் 100 ரூபாய்க்குப் பலனில்லை என்று" எனச் சற்று எரிச்சலாய்க் கேட்டான் வியாபாரி.

"ஓ! இந்தக் குளிசை பலனுள்ளதுதான். ஆனால் என்னுடைய மனைவிதான் இந்தக் குளிசைக்கு பலனில்லாதவள்" என்றார் வெகு கவலையோடு சர்தார்ஜி.

அமெரிக்க உளவு நிறுவனமான சி.ஐ.ஏ.யில் கொலையாளி வேலைக்கு ஆள் எடுத்துக்கொண்டிருந்தார்கள். இறுதிச் சுற்றுக்குத் தேறியவர்களில் இருவர் ஆண்கள். ஒரு பெண். அதிகாரி சொன்னார்: "நம் வேலைக்கு கீழ்ப்படிதல் அவசியம். என்ன சொன்னாலும் செய்ய வேண்டும். இந்தா துப்பாக்கி. அந்த அறைக்குள் போ. அங்கே உன் மனைவி உட்கார்ந்திருப்பாள், அவளைச் சுட்டுக் கொல்லு..." என்றார். "என்ன சார், மனைவியைச் சுட்டுக் கொல்வதா...? என்னால் முடியாது..." என்றான் முதலாமவன். "அப்படியானால் உனக்கு இந்த வேலை கிடையாது" என்று சொல்லி அனுப்பிவிட்டார். அடுத்தவனுக்கும் அதே கட்டளை. அவன் துப்பாக்கியை வாங்கிக் கொண்டு அறைக்குள் போனான். ஐந்து நிமிடங்கள் அமைதி நிலவியது. அவன் கண்களில் கண்ணீரோடு வெளியே வந்தான். "என்னால என் மனைவியைக் கொல்ல முடியலை சார்..." என்றான். "அப்ப நீ இந்த வேலைக்கு லாயக்கில்லை. உன் மனைவியை அழைச்சுக்கிட்டுப் போய் வேறு ஏதாவது வேலை பண்ணு" என்று சொல்லி அனுப்பி விட்டார்.

அடுத்தது பெண். "என்னம்மா! நீயாவது ரூமுக்குள்ள இருக்கிற உன் புருஷனை சுட்டுக் கொல்லுவியா?" துப்பாக்கியை வாங்கிக்கொண்டு உள்ளே போனாள் அவள். உள்ளே இருந்து ஏதேதோ சத்தங்கள் வந்தன. அரை மணி நேரம் கழித்து வெளியே வந்தாள் அவள். நெற்றியிலிருந்து வழியும் வியர்வையைத் துடைத்துக் கொண்டே சொன்னாள்: "குண்டு லோட் பண்ணாத துப்பாக்கியைக் குடுத்துட்டீங்க... அதான் அங்கே இருந்த ஒரு நாற்காலியால அவரை அடிச்சுக் கொன்னுட்டு வரேன்...."

# காதில பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



நான் சொல்வ தெல்லாம் பொய்.
பொய்யைத் தவிர
வேறொன்றுமில்லை
*-காதில பூ கந்தசாமி-*

எங்கட யாழ்ப்பாண லைபிரரியைத் திறக்கப் போறாங்களெண்டு எனக்கொரு இன்விடேஷன் காட் கிடைச்சுது பாருங்கோ. அட இருபத்தி ரெண்டு வருஷத்துக்குப் பிறகு இப்பவாவது திறக்குதேயெண்டிட்டு, நல்லதொரு பட்டு வேட்டியையும் அயன்பண்ணி வைச்சு, சால்வையையும் மடிப்புப் போட்டு ரெடியா நிண்டனான் திறப்பு விழாவுக்கு. ஆனால் பாருங்கோ, திறக்குது திறக்குதுவெண்டு சொல்லிப்போட்டு ஒரேயடியா விற்றோ பண்ணிட்டாங்கள். அதுதான், நடக்கும் என்பார் நடக்காது, நடக்காதென்பார் நடந்துவிடுமெண்டு அண்டைக்கே பாடியிருக்கிறாங்கள் போல.

எனக்கு என்ன ஆச்சரியமெண்டால், வழக்கமா எதையும் உடன செய்யவேணுமெண்டு முரண்டுபிடிக்கிற இந்த பொது அமைப்புகள் இதில ஏன் தலைகீழா நிண்டு செய்யாதே செய்யாதேயெண்டு கத்தினதுதான்.

இந்த உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சனையைப் பாருங்கோ. உடன குடியேற்று எண்டதுதான் கதை. கண்ணிவெடிகள் அகற்றப்பட்டாச்சா? சமாதானம் உறுதிப்பட்டாச்சா? நாளைக்கு சண்டை வெடிச்சு ஆமி திருப்பியடிச்சால் முதலில அடிவாங்கிற குடியேறுறவங்கள்தானே பலியாகவேண்டிவரும் எண்டதெல்லாத்தைப் பத்தியும் யோசிக்கத் தேவையில்லை, இது மனிசாபிமானப் பிரச்சனை, உடன வீடு உள்ளுக்கு.

ஓ.கே, ஓ.கே, சனத்துக்கு தங்கட இடத்தில போய்க் குந்தத்தான் விருப்பம். அது போலத்தானே, சனத்துக்கு லைபிரரியில போய்ப் பேப்பர் வாசிக்கவும் விருப்பம். உயர் பாதுகாப்பு வலயத்தில மட்டும் அவசரமாக் குடியேற வேணும். லைபிரரிய இப்ப திறக்கக் கூடாது பின்னாடித்தான் திறக்க வேணுமெண்ட குதர்க்கம்தான் எனக்கு விளங்கேல்லை.

அதுவும் சனம் விரும்பேல்லையெண்டு எங்கட தலையில தொப்பியக் கவுக்கினம். பொது அமைப்பெண்ட பெயரையும் எங்களச் சொல்லித்தான் தாங்களே சூடினம்.

இது பாருங்கோ, ஏதோ பிசகு கிடக்குது. உங்களுக்கு வீளப்பமாகேல்லையோ. எனக்கெண்டால், வில்லங்கத்துக்குத் தள்ளிப் போடினம், என்ன காரணமெண்டதுதான் புடிபடேல்லை.

கட்டிடம் முழுசாக் கட்டி முடியேல்லையெண்டினம். என்ன முடியேல்லையெண்டு பாத்தால் வெறும் கன்ரீனும் லிப்ட்டும்தான் முடியேல்லையாம். அதுவும் லைபிரரீத் திட்டத்துக்கு ஒதுக்கின தொகைக்கான வேலையெல்லாம் முடிஞ்சு, மேலதிகமாப் போட்ட திட்டமாத்தான் இது ரெண்டும் கிடக்குதாம்.

உந்தப் பொது அமைப்புகளுக்கு லைபிரரி திறந்தாலும் போய்ப் புத்தகம் படிக்கிற நினைப்பில்லைப் போல கிடக்கு. கன்ரீனில போய்க் குந்தியிருந்து அரட்டையடிக்கிறதுதான் உடனடி முக்கியமெண்டு நிக்குதுகள்.

முந்திப் பாருங்கோ, நானும் உந்த லைபிரரிக்கு அந்தக் காலத்தில போய் வந்தனான்தான், லிப்ட்டு எங்கயிருந்தது லிப்ட்டு? நானென்ன இப்ப தலைநரைச்சிருக்கிற எல்லாப் படிச்ச மனிசரும் படியேறித்தானே போய்ப் படிச்சவை?

லிப்ட்டைக் கட்டிற நேரத்தில கட்டி முடிக்கட்டுமெண்டிட்டு லைபிரரியை முதலில திறந்து சனத்தப் படிக்கவிட்டால் என்ன குறையாம்? அதுவும் லிப்ட்டுக்கும் கன்ரீனுக்கும் புனர்வாழ்வு அமைச்சு காசு ஒதுக்கி கெதியில வேலை முடிச்சுத் தாறதாச் சொல்லக்க, லைபிரரியத் திறந்து போட்டும் செய்யலாம்தானே வேலையை.

இன்னுமொண்ட நான் சொல்லுறன் கேளுங்கோ. உந்த யாழ்ப்பாண யூனிவேர்சிட்டியிருக்கெல்லோ, உதத் திறக்கிற காலத்திலயும் திறவாதை திறவாதையெண்டுதான் எங்கட கூட்டணிக்காரர்கூடக் கத்தினவங்கள். திறக்காமலிருந்திருந்தால் இண்டைக்கு லைபிரரியைத் திறக்காதயெண்டு சொல்லுற யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவரமைப்பார் இருந்திருக்கவும் மாட்டினம். வளாகமாத் திறந்தால் யூனிவசிட்டியாக்க மாட்டினமெண்டிச்சினம். இப்ப என்ன நடந்திருக்கு? யுனிவசிட்டியாக்கித்தானே விட்டிருக்கு. இதைப்போல லைபிராயத் திறந்திட்டால் கன்ரீனயும் லிப்டையும் கட்டித்தர மாட்டினமெண்டு குதர்க்கம் பறையிறது பேய்க்கதையில்லையோ?

அண்டைக்கு எங்கட பீபீசி ஆனந்தியக்கா மேயர் சுந்தையலிட்ட ஏதோ ஜையைப் பிடிச்ச முறுக்குமாப் போல ஒரு கேள்வி கேட்டா. நீங்கள் உங்கட காலத்துக்க திறந்து அரசியல் பெயர் வாங்கத்தானே பாக்கிறியள் எண்டு சத்தம் போட்டா.

தங்கட காலத்துக்குள்ளேயே காரியத்தை முடிக்கிறது பாராட்ட வேண்டிய விஷயமெல்லோ. இங்க எத்தனையோ திட்டங்கள அராசாங்கங்கள் கிடப்பில போட்டிட்டு காலா காலமா நீட்டிக் கொண்டு போற நேரத்தில இது கெட்டித்தனமெல்லோ. அரசியல் பெயர் வாங்கிறதும் விடுறதும் அக்காவுக்கு ஏன் உதைக்குது. நல்லதச் செய்தால் நல்லபெயர் வாறது தப்பில்லைத்தானே?

இதில முசுப்பாத்தி என்னெண்டால், அக்கா ஏதோ தான் வந்து பாத்த மாதிரிக் கேட்டாவே ஒரு கேள்வி, என்ன இருபந்தைஞ்சு சதவீத வேலை இன்னும் முடியேல்லையாமே எண்டு. மேயர் உடன திருப்பிக் கேட்டார் யார் சொன்னதெண்டு. முகத்தில அறைஞ்சமாதிரி யிருந்துச்சு. அக்காவுக்கு ஏன் உந்த அவசரக் குடுக்கைத் தனம்?

எப்பிடியோ, இத்தனை காலத்துக்குப் பிறகு திறக்க இருந்த கட்டிடத்தையும் நிப்பாட்டிப் போட்டினம்.

ஏதோ ஒரு பாட்டுப் பாடுவாங்கள்

நந்தவனத்திலோர் ஆண்டி... - அவன்
நாலாறு மாசமாக் குயவனை வேண்டி
கொண்டு வந்தானொரு தோண்டி -அதைக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி!

பாடிக்கொண்டு திரிய வேண்டியதுதான். பாடுங்கோ!

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# இந்தவாரம் உங்கள் பலன்

23.02.2003 தொடங்கி 01.03.2003 வரை

## சோதிட மாமணி தில்லை

### கிரக நிலை

கும்பம் - சூரியன், புதன், இடபம் - சனி, இராகு, கர்க்கடகம் - வியாழன், விருட்சிகம் - கேது, தனு - செவ்வாய், மகரம் - வெள்ளி, சந்திரன் கும்பம், மீனம், மேடம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**மேடம்**
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) தொழில் விருத்தி, உறவினர் உதவி, மன மகிழ்ச்சி, பண வரவு, உயர்ந்த நிலை, உத்தியோக மேன்மை, பதவி நிலை மாற்றம், மாணவர் கல்வி மந்தம், கூடிய முயற்சி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 04.

**இடபம்:**
(கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை,) தொழில் மந்தம், பண வரவு கஷ்டம், அன்னியர் சகவாசம், செலவு மிகுதி, உத்தியோக சிரமம், வீண் அலைச்சல், மாணவர் கல்வி மேன்மை, பரீட்சைகளில் சித்தி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 02.

**மிதுனம்:**
(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்துமுன் முக்கால்) மனக் கலக்கம், பணச் செலவு, உறவினரால் தொல்லை. வெளியிடப் பிரயாணம், உத்தியோகச் சிறப்பு, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மேன்மை, விவசாயிகள், வியாபாரிகள் சொற்ப இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:-வெள்ளி.
அதிர்ஷ்ட இலக்கம்:- 06.

**கர்க்கடகம்:**
(புனர்பூசத்து நாலாங்கால், பூரம், ஆயிலியம்,) இனசன நன்மை, கரியானுகூலம், பொருள் வரவு உயர்ந்த நிலை, உத்தியோக மேன்மை, பிறர் உதவி, மாணவர் கல்வி சிறப்பு, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:-செவ்வாய்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 07.

**சிங்கம்:**
(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்,) தொழில் மந்தம், பண வரவு தடை, பெரியோர் உதவி, குடும்ப நன்மை, விண் தொல்லை நீங்கும். உத்தியோக முயற்சி, மாணவர் கல்வி மாற்றம், ஊக்க மிகுதி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:-திங்கள்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 03.

**கன்னி:**
(உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை,) மனக் கலக்கம், உறவினர் பகை, வெளியிட வாசம், செலவு மிகுதி, உத்தியோக முயற்சி, பதவி நன்மை, மாணவர் கல்வி மேன்மை. கடின உழைப்பு, விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
அதிர்ஷ்ட நாள்: வெள்ளி.
அதிர்ஷ்ட இலக்கம்: 06.

**துலாம்:**
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்) உறவினர் உதவி, உயர்ந்த நிலை, மனக் குறை நீங்கும், காரியானுகூலம், கௌரவம். உத்தியோகக் கஷ்டம். மாணவர் கல்விப் பேறு, பரீட்சைகளில் வெற்றி, விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்,
அதிர்ஷ்ட நாள்:-திங்கள்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 07.

**விருட்சிகம்:**
(விசாகத்து நாலாங்கால், அனுஷம் கேட்டை,) தொழில் விருத்தி, முயற்சி பலிதம், பண வரவு, குடும்ப சுகம், தேகாரோக்கிய நன்மை, உத்தியோக முயற்சி, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மாற்றம். விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:-வியாழன்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 01.

**தனு:**
(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்) பயனுள்ள செயல், பெரியோர் உதவி, பணக் கஷ்டம் தூர இடப் பயணம், மனக் குறை நீங்கும், உத்தியோக உயர்ச்சி, அன்னியர்உதவி. மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள், குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:-புதன்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 05.

**மகரம்:**
(உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை) புதிய முயற்சி, செலவு மிகுதி, பிரயாணக் கஷ்டம், அன்னியர் சகவாசம், உத்தியோக மேன்மை, பயனுள்ள செயல், மாணவர் கல்வி சிறப்பு, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:-வியாழன்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 04.

**கும்பம்:**
(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்) தொழில் சிறப்பு, முன்னேற்றம், பணவரவு, அன்னியர் சகவாசம், தேகாரோக்கியம், உத்தியோக மேன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மந்தம், பிரயாச மிகுதி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:-செவ்வாய்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 03.

**மீனம்:**
(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி,) மனக் கலக்கம், தொழில் நிலை மந்தம், பண விரயம், பெரியோர் உதவி, உத்தியோக நிலை பிரிவு, மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்வி மாற்றம். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:-செவ்வாய்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 01.




இந்த நூலகம் வெறும் நூலகமோ, ஆவணக், காப்பகமோ, அல்லது கட்டடமோ அல்ல, அது ஒரு வரலாற்றுச் சின்னம் என்று ஆகியுள்ள கதை இலங்கைத் தமிழர்கள் யாவருக்கும் மனதில் எழுதப்பட்டுள்ள விடயம். 1981ம் ஆண்டு யாழ்.மாவட்ட சபைத் தேர்தலின்போது அன்றைய ஐ.தே.க. ஆட்சியாளர்களால் எரிக்கப்பட்டு, சாம்பராக்கப்பட்ட அந்த நூல் நிலையம், தமிழ் மக்களின் மீது காட்டப்பட்ட இனவாத வக்கிரத்திற்கு ஒரு அடையாளச் சின்னமாக நின்றது. தமிழ் மக்கள், குறிப்பாக யாழ்ப்பாணத் தமிழ் மக்கள் கல்வி கேள்வியில் சிறந்து விளங்கிய, அறிவுத் தேடல் கொண்ட சமூகம். கல்வியென்பது அவர்களின் ஆன்மாவாக இருந்ததென்றால் தவறல்ல. மூளை உழைப்பே யாழ்ப்பாணத்தின் பெரும்பான்மையாக விளங்கிய மத்தியதர வர்க்கத்தவரது பிரதான தொழில் மார்க்கமாகவும் இருந்தது. இதனால்தான் இலங்கையில் உருவெடுத்த இனவாதம் தமிழ் மக்களின் அறிவுக் களஞ்சியமாக விளங்கிய யாழ்.நூலகத்தைக் குறிவைத்துத் தாக்கியது.

அன்று தீக்கிரையாக்கப்பட்ட நூல் நிலையம் இன்று 22 வருடங்களின் பின் புனர்ஜென்மம் எடுத்துள்ளது. இதன் கட்டடப் பணிகள் 1995ல் கடந்த பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக் காலத்தில் ஜனாதிபதி சந்திரிகாவால் ஆரம்பிக்கப்பட்டு தற்போதைய ஐ.தே.க. ஆட்சியால் தொடரப்பட்டது.

நூலகத் திட்ட வேலை பூர்த்தி செய்யப்பட்டுவிட்டது. ஆனால்




மேலதிகமாக, சிற்றுண்டிச் சாலை, மின்சார லிஃப்ட் ஆகியவை மட்டும் இன்னும் பாக்கியிருந்தது.

முழுக்க முழுக்க யாழ்.மாநகர சபையின் அதிகாரத்தின் கீழ் வருகின்ற இந் நூலகத்தை யாழ்.மேயர் தலைமையில், கடந்த பெப்ரவரி 14ம் திகதி, தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரியால் திறந்து வைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால், புலிகளின் யாழ்பொறுப்பாளர் இளம்பரிதியும், வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம், யாழ்பல்கலைக் கழக மாணவரமைப்பு மற்றும் சர்வதேச தமிழீழ மாணவர் அமைப்பு என்பவையும் இத் திறப்புவிழாவுக்குக் காட்டிய கடும் எதிர்ப்பைத் தொடர்ந்து திறப்புவிழா இரத்துச் செய்யப்பட்டது மட்டுமன்றி, இத்தகைய தலையீட்டை ஆட்சேபிக்குமுகமாக யாழ். மாநகரசபை உறுப்பினர்கள் மொத்தம் 24 பேரும் திறப்பு விழாவிற்கு முதல்நாள், பெப்பரவரி 13ம் திகதி இராஜினாமாச் செய்தனர்.

இதன் மூலம் இந்த நூலகத்தின் மீது மறுபடியும் ஒரு வரலாற்றுக் கறை பூசப்பட்டுவிட்டது.


இதோ இந்தப் படத்திலிருக்கும் கட்டடத்தை எப்போதோ எங்கேயோ பார்த்த மாதிரி இல்லை? என்ன எங்களுக்கே கதை சொல்லுறீங்களா? என்று நீங்கள் நினைப்பது புரியுது. ஆம் அது அதுவேதான். நூலகம்! இப்போது புனர்ஜென்மம் எடுத்து வெள்ளையும் சொள்ளையுமாகப் பளிச் சென்று நிற்கிறது.

# புனர் ஜென்மம்






# கிரிக்கெட் வாணி



இந்திய அணி உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றாது போனால் எண்ணிக்கை அளவில் மிக அதிகமானவர்கள் கவலையடையப்போகும் நாடு இந்தியா. இந்திய இரசிகர்கள் தமது அணி கிண்ணத்துடன் தென்னாபிரிக்காவிலிருந்து திரும்பி வரும் என்ற பலமான நம்பிக்கையுடன் இருக்கிறார்கள். தமது அணிக்காக இந்திய இரசிகர்கள் செய்யும் பிரார்த்தனைகளுக்கும் வேண்டுதல்களுக்கும் குறைவில்லை. கல்கத்தா இரசிகர்களின் வித்தியாசமான பிரார்த்தனையிது. வாணி சிலையை கிரிக்கெட் உலகக் கிண்ணத்தில் நிறுவியிருக்கிறார்கள். வாணி அருளால் இந்தியா வெற்றியடையட்டும் என்ற விருப்பத்தின் வெளிப்பாடா இது?

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



**செல்வி ஜெ. அனுசியா**
**20.02.2003**

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் இங்கிலாந்து போர்மிங்காமை வதிவிடமாகவும் கொண்ட ஜெயபாலன் - ரேவதி தம்பதிகளின் செல்வப் புதல்வி அனுசியா தனது முதலாவது பிறந்த நாளை தனது இல்லத்தில் 20-02-2003 அன்று வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். செல்வி அனுசியாவை அன்பு அப்பா-அம்மா, லண்டன் சின்னப் பெரியப்பா-சின்னப் பெரியம்மா, அண்ணா காவியன், அக்காமார்களான இலக்கியா, அகல்யா, வவுனியா அம்மப்பா-அம்மம்மா, யாழ்ப்பாணம் பெரியப்பா-பெரியம்மா, பபி அக்கா, கரண் அண்ணா, வன்னி சின்னப் பெரியப்பா, வன்னி மாமா-அத்தை, விது மச்சான், கோபி மச்சான், அபி மச்சாள், சுவிஸ் பெரியப்பா-பெரியம்மா, அண்ணா தர்சன், சுவிஸ் மாமா-மாமி, வவுனியா சின்னமாமா, வவுனியா குட்டிமாமா, லண்டன் ஞானம் மாமா மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் சுழிபுரம் பறாளாய் விநாயகர் அருள் பெற்றுப் பல்கலையும் கற்று, சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல்: திரு.திருமதி ஜெயபாலன்-போமிங்காம் U.K.